13 லட்சம் பரிசு வெல்லுங்கள்
விவரம் உள்ளே...!

# உதயன்

விலை ரூ.20 | பக்கம் 28

சுடர் 30 | கதிர் 089 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 11 திங்கட்கிழமை 23-02-2015

# ஐ.நா. முடிவை எதிர்த்து கையெழுத்து வேட்டை

யாழ்ப்பாணம், பெப். 23
ஐ.நா. விசாரணை பிற்போடப்பட்டதைக் கண்டித்தும், சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் தமிழ் சிவில் சமூக அமையத்தால் நாளை கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்படவுள்ளது. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அடிகளின் கையெழுத்துடன், நாடெங்கிலுமுள்ள தமிழ் மக்களிடம் கையொப்பம் பெறப்படவுள்ளது என்று தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துள்ளது.
தமிழ் சிவில் சமூக அமையத்தால், நேற்று யாழ்.நகரில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதில் அந்த அமையத்தின், இணைப் பேச்சாளர் எழில்றாஜன் மற்றும் அருட்தந்தை ரவிசந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மேற்கொண்ட விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உள்ளக விசாரணைப் பொறிமுறையை நிராகரித்தும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நாளை செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டத்தில் மாபெரும் கவனவீர்ப்புப் பேரணியை நடத்தவுள்ளது. இந்தப் பேரணிக்கு முழுமையாக ஆதரவு தெரிவித்துள்ள சிவில் சமூகம், தமிழ் மக்கள் இதில் பெருமளவு கலந்து கொள்ள வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்துள்ளது.
பக்கம் 24

## உண்மையை மறைக்கவே உள்ளக விசாரணை

### சாடுகின்றார் மன்னார் ஆயர்

கொழும்பு, பெப்.23
புதிய அரசு நடத்தும் உள்ளக விசாரணை என்பது உண்மையை கண்டறிவதற்கானது அல்ல. அது உண்மையை மறைப்பதற்கான ஏற்பாடாகும். இதற்காகவே இலங்கை அரசு ஓடி ஓடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. - இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய இராயப்பு யோசப்.
"உண்மையின் நீதியின் அடிப் படையில் இந்தப் பிரச்சினையை அணுகுவதன் ஊடாகவே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு தொடர்ந்தும் இடம்பெறுகின்றது"- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
பக்கம் 24




மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் அந்த நாட்டு பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். பயங்கரவாதக் குற்றச்சாட்டை அடுத்து அந்த நாட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். மொஹமட் நஷீட் மாலைதீவின் தற்போதைய எதிர்க்கட்சி தலைவராவார்.

## சவேந்திர சில்வா மைத்திரி சந்தித்துப் பேச்சு

கொழும்பு, பெப். 23
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, போர்க் குற்றம் தொடர்பில் முக்கியமானவராக குற்றஞ்சாட்டப்பட்டு வரும் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சந்தித்துப் பேசியுள்ளார். இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, புதுடில்லியில் உள்ள ஐரிசி மௌரியா செரட்டன் விடுதியில் தங்கியிருந்தார். எதிர்பாராத வகையில், அங்கு வந்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசியுள்ளார்.
ஐ.நாவுக்கான துணைத் தூதுவராக பணியாற்றிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, தற்போது புதுடில்லியில் உள்ள தேசிய பாதுகாப்பு பக்.24

## ஒரே தேசம் என்பதை ஒருபோதும் ஏற்க முடியாது

### யாழ். பல்கலை ஆசிரியர் சங்கத் தலைவர் விரிவுரையாளர் இராசகுமாரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.23
இலங்கை என்பது ஒரு தேசம் அல்ல. இங்கே இரு தேசங்கள் இருக்கின்றன. ஒன்று தமிழ்த் தேசம். மற்றையது சிங்கள தேசம். நாங்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் வாழ விரும்புகின்றோம். அதனை மறுக்கவில்லை. ஆனால் எங்களுடைய தேசியத்தை விட்டுக் கொடுத்து இலங்கை ஒரே தேசம் என்ற கருத்துக்குள் போக நாம் தயார் இல்லை. - இவ்வாறு யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ. இராசகுமாரன் தெரிவித்தார்.
நேற்று கிறீன் கிறாஸ் விடுதியில் நடைபெற்ற மாற்றம் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"இளைஞர்கள் நாட்டுக்காக உண்மையாக உழைத்தார்கள் என்றால் அது வரவேற்கத்தக்க விடயம். இலங்கையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அந்த மாற்றம் இளைஞர்களூடாகத்தான் வரவேண்டும். புதியதோர் யுகம் தோன்ற வேண்டும். அந்த யுகம் இளை ஞர்களுடைய எழுச்சியாலே வரவேண்டும். அதற்காக இளைஞர் தலைமையில் இந்த மாற்றம் அமைப்பு உண்மையாக உழைக்குமாக இருந்தால் நாமும் அவர்களுடன் இணையத் தயார்."- என்றும் அவர் தெரிவித்தார்.
பக்கம் 24

## பல்கலைக் கழகத்தின் போராட்டத்துக்கு மேல்மாகாண மக்கள் முன்னணி ஆதரவு

யாழ்ப்பாணம், பெப்.23
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் நாளை நடைபெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதாக மேல்மாகாண மக்கள் முன்னணி அறிவித்துள்ளது. "ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையை உடன் சமர்ப்பிக்க வேண்டும் என்றுகோரிநடத்தப்படும்இந்தப்பேரணிக்குதமிழ்மக்கள்முழு ஆதரவை வழங்க வேண்டும்"- என்று எஸ்.பாஸ்கரா தெரிவித்தார்.
பக்கம் 24

## சுதந்திர தின நிகழ்வில் தலைவர்களை கொல்ல சதி

### முன்கூட்டியே தகவல் கிடைத்ததால் தவிர்க்கப்பட்டது

கொழும்பு, பெப்.23
கடந்த 4 ஆம் திகதி தேசிய தின நிகழ்வுகள் நாடாளுமன்ற சதுக்கத்தில் நடைபெறவிருந்த சமயத்தில் இலங்கை அரசுத் தலைவர் ஒருவரை அல்லது பலரை குறிவைத்து தாக்குதல் ஒன்று நடத்தப்பட இருந்துள்ளது. தெய்வாதீனமாக முன்கூட்டியே புலனாய்வுத் தகவல் ஒன்று கிடைத்தமையால் அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தவிர்க்கப்பட்டுள்ளது.
பக்கம் 24

## விமலின் மனைவி கைது

கொழும்பு, பெப்.23
முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி சஷி வீரவன்ஸ கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
போலியான ஆவணங்களைக் கொண்டு இராஜதந்திர சேவை கடவுச் சீட்டைபெற்றிருந்த குற்றச் சாட்டிலேயே சஷி வீரவன்ஸ கைதாகியுள்ளார். பக்.24

## ஏமாற்றம் தந்த மாற்றம் நிகழ்வு

### அமைச்சர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை



யாழ்ப்பாணம், பெப்.23
கொழும்பு அமைச்சர்கள் மற்றும் வடமாகாண முதலமைச்சர் அமைச்சர்கள் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாற்றம் அமைப்பின் நிகழ்வு நேற்று வெறிச்சோடிய மேடையுடன் நடத்தி முடிக்கப்பட்டது.
இந்த நிகழ்வு நேற்று மு.ப 10 மணியில் இருந்து நண்பகல் 12 மணி வரை நடைபெற்றது. அதற்குகொழும்பு அரசின் எந்தவொரு அமைச்சர்களோ வடக்கு மாகாண சபையினரோ வரவில்லை.
பக்கம் 24



அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
மஹா சத சண்டி யாகம் - 2015

அம்பிகை அடியார்களே!
நிகழும் மங்கலகர ஜய வருஷம் மாசித்திங்கள் சுக்கிலபக்ஷ மாசி மகத்தை முன்னிட்டு மாசித்திங்கள் 10 ஆம் நாள் முதல் 20ஆம் நாள் வரை (22.02.2015- 04.03.2015) அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கு 100 முறை சண்டி பாராயணமும், 10 முறை சண்டி ஹோமமும் செய்வதற்குத் திருவருள் கைகூடியுள்ளது. ஆகவே அனைத்து அடியார்களும் 11 தினங்களும் காலை, மாலை நடைபெறுகின்ற பூஜை, மகாயாகம் இலட்சார்ச்சனைகளுக்கு வருகைதந்து உபயமேற்க மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹாசரஸ்வதி மற்றும் மஹாமுத்துமாரி திருவருளுக்கு ஆளாகும் வகையிலும், இலங்கையில் எப்பகுதியிலும் நடைபெறாத மஹா சத சண்டி ஹோமம் நம் ஆலயத்தில் இரண்டாம் முறையாக செய்வதற்கு இந்தியாவிலிருந்து சிறந்த சிவாச்சார்யார்களும், இலங்கையில் பிரபல்யம் பெற்ற சிவாச்சார்யார்களும் இணைந்து நடத்துவதற்கும் அம்பிகையின் திருவருள் பாலித்துள்ளது.
இவ்வருடம் 04.03.2015 புதன்கிழமை பிற்பகல் மஹா மகத்தை முன்னிட்டு அம்பிகை இன்பர்சிட்டியில் சமுத்திர தீர்த்தமாடி மாலையில் ஆலயம் திரும்புவார்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவதானம்.
தொ.பே.இல. 021 226 4263

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஆலய பரிபாலன சபையினரும் மற்றும் அம்பிகை அடியார்களும்

# ஹில்டன் விடுதி சொத்துகளை அபகரித்த மஹிந்த நட்டஈடு எதுவும் வழங்கவில்லை

## அதன் முன்னாள் பணிப்பாளர் கூறுகின்றார்

கொழும்பு, பெப்.23
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கடந்த அரசு தமது நிறுவனத்தின் சொத்துக்களை அபகரித்ததுடன் அவற்றுக்கு எந்தவித நஷ்ட ஈடுகளும் வழங்கவில்லை. தற்போது ஆட்சிக்கு வந்துள்ள மைத்திரிபால அரசானது இவற்றுக்கு தீர்வு வழங்கும் என எதிர்ப்பார்ப்பதாகவும் கொழும்பு ஹில்டன் ஹோட்டலின் முன்னாள் பணிப்பாளர்களில் ஒருவரான கோனெல் பெரேரா தெரிவித்தார்.
'மக்களின் சொத்துக்கள் மதிக்கப்பட வேண்டும்' என்ற தொனிப் பொருளின் கீழ் கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
சட்டத்திற்கு முரணான வகையில் இலங்கையில் 22 பிரபல நிறுவனங்களை கடந்த அரசு 2011ஆம் ஆண்டு பலாத்காரமாக பறிமுதல் செய்தது. அதற்காக வழங்கப்பட வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையையும் வழங்கவில்லை. ஆனால், தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இவர்கள் எமக்கு இழைக்கப்பட்ட தீங்குகளுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என நம்புகின்றோம். – என்று அவர் தெரிவித்துள்ளார்.
கடந்த அரசானது பொருளாதாரத்தை நசுக்கும் வகையில் செயற்பட்டது. எனினும், ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு மாறான கொள்கையைக் கொண்டுள்ளது.



எனது நிறுவனத்துக்கு இழைக்கப்பட்ட தீங்குகள் தொடர்பாக நான் தற்போதைய அரசின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளேன். இதன் பிரகாரம் கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார பிரதி அமைச்சர் ஹர்ஷா டி சில்வா இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளார். – என்றும் அவர் குறிப்பிட்டார்.
உள்நாட்டு முதலீட்டாளர்களை கடந்த அரசு பெறும் கஷ்டங்களுக்கு உள்ளாக்கியது. இதனால் பலர் வெளிநாடுகளில் சென்ற தமது முதலீடுகளை செய்ய வேண்டி ஏற்பட்டது. இதனால் தாய் நாடான இலங்கைக்கு கிடைக்க வேண்டிய இலாபங்கள் வெளிநாடுகளில் சேமிக்கப்படுகின்றன. அது மட்டுமல்லாது இலங்கையில் கடந்த காலங்களில் நிலவிய நிலைமையினால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய பின்வாங்கினர். இவ்வாறான நிலைமைகளை தற்போதைய அரசு நிவர்த்தி செய்ய வேண்டும். அது மட்டுமல்லாது அதற்கான ஒழுங்கு முறைகளையும் செய்யும் என்ற நம்பிக்கையுள்ளது – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ற)

### இலங்கை வருகிறார் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, பெப்.23
சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கே.சண்முகம் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் நாளை திங்கட்கிழமை முதல் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான உறவுகளை மீள வலியுறுத்துவதற்காகவே அவரது விஜயம் அமைந்துள்ளதாக அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ற)

### ரவூப்புக்கு எதிராக ஹர்த்தால்!

அம்பாறை, பெப். 23
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு எதிராக ஹர்த்தால் கடைப்பிடிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
எந்தவொரு அமைப்பாலும் உரிமை கோரப்படாத துண்டுப் பிரசுரங்கள் மூலம் எதிர்வரும் வியாழக்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தத் துண்டுப் பிரசுரங்கள் குறிப்பாக அம்பாறைப் பகுதியில் விநியோகிக்ககப்பட்டுள்ளன.
அமைச்சர் ஹக்கீமை கடுமையாக விமர்சித்துள்ள குறித்த துண்டுப் பிரசுரத்தில் அம்பாறை மாவட்டம் அமைச்சரால் முற்றாக ஒதுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.
எதிர்வரும் வியாழக்கிழமை அமைச்சருக்கு எதிராக அம்பாறை மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள் போன்றவற்றை மூடி ஹர்த்தால் கடைப்பிடிக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற–10)

## 5 கோரிக்கைகளை முன்வைத்து கருமலையூற்றில் போராட்டம்

திருகோணமலை, பெப். 23
கருமலையூற்று பள்ளிவாசலுக்கு முன்பர்க நேற்றுக் காலை உணவு தவிரப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.பஸீர் தலைமையில் நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் ஐந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
கருமலையூற்றுப் பள்ளிவாசலுக்குரிய மீதமுள்ள காணி வழங்கப்பட வேண்டும், கருமலையூற்று மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்திலிருந்து விமானப் படை அகற்றப்பட வேண்டும், விமானப் படையின் கட்டுப்பாட்டிலுள்ள உல்லாசப் பயணிகளால் வெகுவாகக் கவரப்படும் மாபில் பீஜினை சிவில் சமூக அமைப்புக்கோ அல்லது பிரதேச சபை அல்லது சுற்றுலாத்துறைக்கு கையளிக்கப்படவேண்டும், மாபில் பீஜ் சுற்றளவு 603 ஏக்கர் சீனன்குடா விமானப்படைக்கு முன்னாள் பாதுகாப்பு அமைச்சினால் 2012ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சுவீகரிப்பு நடவடிக்கைகள் ரத்து செய்யப்படவேண்டும், சுதந்திரமாக மீனவர்கள் தொழில் செய்வதற்கான ஏற்ற சூழலை ஏற்படுத்தித் தர வேண்டும் என்னும் 5 கோரிக்கைகள் மக்களால் முன்வைக்கப்பட்டன. (ற–10)



கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச சடைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கு வேட்பாளர்களால் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. அவற்றை சுவை பார்க்கின்றன மாடுகள். (ற–433)

## முகாமையாளரை மாற்றுமாறு இ.போ.ச. ஊழியர் போராட்டம்

### திருகோணமலையில் நடத்தினர்



திருகோணமலை, பெப்.23
இலங்கை போக்குவரத்து சபையின் திருகோணமலை ஊழியர்கள் நேற்று உப்புவெளியில் உள்ள தலைமை அலுவலகத்துக்கு முன்னால் அமைதிப் பேரணி மற்றம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
திருகோணமலை பஸ் டிப்போவுக்கு தகுதி வாய்ந்த முகாமையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
ஏற்கனவே சாலை முகாமையாளர் பதவிக்காக நேர்முகத் தேர்வுக்குச் சென்று சரியான முறையில் நியமனம் பெற்றிருந்த தகுதியுள்ள ஒருவரின் நியமனக் கடிதத்தை பிழையான வகையில் நிராகரித்துள்ளமை மனவருத்தத்துக்குரியது என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
அதேவேளை, பணிப்புறக்கணிப்பு நடைபெற்றபோதும், 10 பஸ்கள் சேவையில் ஈடுபட்டன என்று தற்போதைய முகாமையாளர் இரத்தின பண்டார தெரிவித்தார். (ற–10)

### இலங்கைக்கு புதிய அமெரிக்க தூதுவர்

கொழும்பு, பெப். 23
இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக, தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் பிரதி உதவி இராஜாங்கச் செயலர் அதுல் கெசாப் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்த மிச்செல் ஜே சிசன் கடந்த ஆண்டு இறுதியில் ஐ.நாவுக்கான துணைத் தூதுவராக நியமிக்கப்பட்டதை அடுத்து, இலங்கைக்கான தூதுவர் பதவி இன்னமும் நிரப்பப்படாமல் உள்ளது.
இலங்கையுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவுள்ள நிலையில், முக்கியமான ஒரு இராஜதந்திரியை இந்தப் பதவிக்கு நியமிக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது.
இதற்கமையவே, நிஷா பிஸ்வாலுக்கு அடுத்த நிலையில், தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதி உதவி இராஜாங்கச் செயலராகப் பணியாற்றும், அதுல் கெசாப் கொழும்புக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளார் என்று கூறப்படுகின்றது.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான, இவர் இலங்கையின் ஆட்சி மாற்றத்தின் பின்னர், அண்மையில் நிஷா பிஸ்வாலுடன் கொழும்பு வந்திருந்தார். (ற–5)

## மினிபஸ் மோதி வயோதிபர் சாவு

### பரந்தன் பஸ் நிலையம் முன்பாகச் சம்பவம்



யாழ்ப்பாணம், பெப். 23
வேகக்கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவரை மோதியது. சைக்கிளில் பயணித்தவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்தார். பரந்தன் பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று நடந்த இந்த விபத்தில் பெரிய பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை யோகராசா (வயது–57) என்பவரே உயிரிழந்தார்.
சந்தையில் பொருள்களை வாங்கிக் கொண்டு சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது, கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ் அவர் மீது மோதியது. படுகாயமடைந்தவர் உடனடியாக சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். ஆயினும் சிகிச்சைகள் பயனளிக்காது உயிரிழந்தார்.
யோகராசா பச்சிளைப்பள்ளி பிரதேச சபையில் பணியாற்றி வருபவராவார்.
குறித்த மினிபஸ் சாரதியைக் கைது செய்துள்ள பளை பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற–21,155)

# இலங்கை வெற்றி



வெற்றிக் களிப்பில் இலங்கை ரசிகர்கள்

இலங்கை அணி, நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் முதலாவது வெற்றியைப் பெற்றது. ஆப்கான் அணியிடம் கடும் போராட்டத்தை வெளிப்படுத்தி 4 இலக்குகள் வித்தியாசத்தில் வென்றது.

நியூஸிலாந்துடனான ஆட்டத்தில் தோற்றிருந்த இலங்கை, அழுத்தத்துடன் நேற்றுக் களமிறங்கி யது. ஆப்கான் அணி வளரும் அணி எனினும் இலங்கையை நேற்றுப் புரட் டிப் போட்டது. நாணயச் சுழற்சி இலங் கைக்கு. களத்தடுப்புச் செய்வது என்று தீர்மானம். குலசேகரா நீக்கப்பட்டு பெரேரா உள்வாங்கப்பட்டார். அதற்கு தகுந்த ஆட்டத்தையும் அவர் வெளிப் படுத்தினார்.

மலிங்கவின் வேகத்துடன் தொடங்கி யது ஆட்டம். களத்தடுப்பில் இலங்கை இன்னமும் திருந்தவில்லை. ஆறாவது பந்துப் பரிமாற் றத்தில் லக்மலின் பந்து வீச்சில் மங்கால் கொடுத்த பிடியை அனுபவமஹேலதவறவிட்டார். கிடைத்த சந்தர்ப்பத்தை தக்க வைக்கவில்லை. மத்தியூஸ் வேகத்தில் நடையைக் கட்டி னார். அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் ஆரம்ப இணை முற்றாகத் தகர்ந்தது.

மூன்றாவது இலக்குக்கு அஷ்கர் – சென்வாரிஇணைந்துஅமைத்தனர் இணைப் பாட்டம். இலங்கை களத் தடுப்பு வியூகம் சிறப்பாக இல்லை. நியூஸிலாந்துட னான ஆட்டத்துத் தவறுகளை நேற்று மீண்டும் செய்தது. ஆப்கானை மடக்கும் – கட் டுப்படுத்தும்எந்தநோக்கமும் இலங்கைக்கு இருக்க வில்லை. வாய்ப்புக்களைச் சரியாகப் பாவித்து இந்த இணை ஓட் டங்களைக் குவித்தது.

ஹேரத் பந்து வீச்சில் இணையைப் பிரிப்பதற்கான வாய்ப்பு வந்தது. நடுவர் ஆப்கான் பக்கம் சாய்ந்து விட்டார். மூன் றாம் நடுவர் பரிசீலனையில், லெக் ஸ்டொம்பில் பந்து படு வது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் களநடுவர் முடிவு என்று மூன்றாம் நடுவர் சொல்லி விட்டார். இதனால் தப் பித்தது

பக்கம் 04






## வாய்ப்பு இருக்கின்றதா இங்கிலாந்துக்கு ?

ஆஸ்திரேலியா – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டதால் இங்கிலாந்துக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது.

பிரிஸ்பனில் நடக்கவிருந்த ஆஸ்திரேலியா – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம், கடும் புயல் மழை காரணமாக கைவிடப் பட்டது. புள்ளிகள் பகிர்ந்து கொள்ளப்பட்டதால் தற் போது ஆஸ்திரேலியா, பங்களாதேஷ் அணிகள் தலா ஒரு வெற்றியுடன் 3 புள்ளிகளை

பக்கம் 04

## கும்ப்ளேக்கு கௌரவம்



இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவரும், டெஸ்ட் ஆட்டங்களில் அதிக இலக்குகள்வீழ்த்திய பந்து வீச்சாளர்கள் பட்டியலில் 3 ஆவது இடத்திலும் உள்ள அனில் கும்ப்ளே, சர்வதேச கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் 'ஹோல் ஒப் போம்' பிரபலம் என்ற அந்தஸ்து வழங்கி கௌரவிக்கப்பட் டுள்ளார்.

கும்ப்ளே மற்றும் ஆஸ்திரேலிய மகளிர் கிரிக் கெட் அணி முன்னாள் வீராங்கனை பெட்டி வில்சன் இருவரும் இந்தியா – தென்னாபிரிக்க அணிகளிடையே நேற்று நடைபெற்ற ஆட்டத்தின் போது கௌரவிக்கப் பட்டனர்.

டெஸ்ட் இலக்குச் சரிப்பில் முரளிதரன் (800), ஆஸ்திரேலியாவின்ஷேன்வோர்ன் (708), கும்ப்ளே (619) ஆகியோர் முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது.

டெஸ்ட் வரலாற்றில் கும்ப்ளே மற்றும் இங்கிலாந்தின் ஜிம் லேகர் இருவர் மட்டுமே ஒரு இன்னிங்ஸில் 10 இலக்கையும் கைப்பற்றிய சாதனையை நிகழ்த்தி உள்ளனர். (5-ரி)

## மிஷ்பா சுயநலவாதி

மிஷ்பா உல்ஹக் தான் எத்தனை ஓட்டங்களைக் குவிப்பது என்பதில்தான் கவனம் செலுத்துகின் றாரே தவிர, அணி வெற்றி பெற வேண்டும் என்பதில்கவனம்செலுத்துவதில்லை என்று, பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் தெரிவித்துள்ளார்.



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் தோல்வி அடைந்ததால் கடும் விமர்சனங்களை சந்தித்து வருகிறது.

'அழிவை நோக்கி பாகிஸ்தான் அணி சென்று கொண்டிருக்கிறது என்று நான் நீண்ட நாட்களாகக் கூறி வருகிறேன். மிஷ்பா உல்ஹக் போல் ஒரு சுயநலம் மிக்க கோழையான ஒரு அணித் தலைவரை நான் என் வாழ் நாளில் கண்டதில்லை.

அணிக்கு உத்வேகம் மிக்க ஒரு தலைவர் தேவை. மூன்றாம் நிலையில் மிஷ்பா களமிறங்கி யுனிஸ்கான் போன்ற வீரர்க ளைப் பாது காத்திருக்க வேண்டும்.

மிஷ்பா எப்போதும் ஒரு சுயநலவாதியே. எவ்வளவு ஓட்டங்கள் தான் எடுக் கின் றார் என்பதுதான் அவருக்கு முக்கியம், அணி இரண்டாம் பட்சம்தான் என்று தெரிவித்துள்ளார். (5-ரி)

## செய் அல்லது செத்து மடி

"உலகக் கிண்ண கிரிக்கெட் ஆட்டத்தில் வெற்றி பெறுங்கள் அல்லது நாட்டுக்கு திரும்பிவிடுங்கள்" பாகிஸ்தான் அணிக்கு முன்னாள் அணித் தலைவர் வாசிம் அக்ரம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் – மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில், மேற்கிந்தியத்தீவுகள் அணி 150 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. பாகிஸ்தான் அணி தொடர்ந்து இரண்டு ஆட்டங்களில் தோல்வியைச் சந்தித்து இருப்பதால் பெரும் நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறது. எஞ்சிய 4 ஆட்டங்களில் குறைந்தது 3 இல் வெற்றி பெற்றால் காலிறுதியை நினைத்துப் பார்க்க முடியும்.

இந்த நிலையில் கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெறுங்கள், அல்லது முன்னதாகவே நாட்டிற்கு திரும்பிவிடுங்கள் என்று பாகிஸ்தான் அணியை முன்னாள் அணித் தலைவர் வாசிம் அக்ரம் எச்சரித்துள்ளார்.

செய்தியாளரிடம் பேசிய வாசிம் அக்ரம், அவர்களால் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு அதிகமாகவே உள்ளது. ஆனால் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை என்றால் முன்னதாகவே நாட்டிற்கு திரும்பட்டும்.

பக்கம் 04

# இந்தியா முதல் வெற்றி

உலகக் கிண்ணத்தில் இது வரை இந்தியாவிடம் வீழாத தென்னாபிரிக்க அணி முதன் முறையாக நேற்றுத் தோல் வியைத் தழுவியது. இதன் மூலம் வரலாற்றை மாற்றி யமைத்தது இந்தியா.

அதிர்ஷ்டக்கார அணித் தலைவர் டோனிக்கு நாணயச் சுழற்சி அம்சமாய் அமைந் தது. துடுப்பெடுத்தாட தீர் மானம். வந்த வேகத்தில் ரோஹித்தை 'ரன் அவுட்டில்' அனுப்பி வைத்தனர் ஆபி ரிக்கர்கள். அந்த அசதியில் கொஞ்சம் தூங்கி விட்டனர்.

தவான் – ஹோக்லி இணை வாய்ப்பைப்பயன்படுத்திஅடித் தளம் அமைத்தது. அரைச் சதம் களக்க 4 ஓட்டங்கள் இருக்கையில் வெளியேற் றப்பட்டார் ஹோக்லி.

ரஹானே களமிறங்கினார். மறுமுனையில் மீசைக் காரன் தவான் அசத்தல். ரஹானே எதிர்பார்க்காத நேரத்தில் எதிர்பாராத ஆட் டம். மெதுவாக ஏறத் தொடங் கியது இந்தியாவின் ஓட்ட வேகம். தவான் சதம். ஹோக் லியைப் போன்று அவசரப் படவில்லை. சதம் கடந்த பின் பும் அதிரடி ஆட்[illegible]. துடுப் பாட்ட பவர் பி[illegible] எம் பிக் குதித்துத்து பந்துகள்[illegible]வுண் டரிக்குச் சென்றன. அதிவேக ஓட்டக் குவிப்பில் இந்த இணை அதீத ஆர்வம். 44 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் தவானின் இலக்குச் சரிக் கப்பட்டது. ரெய்னா வந்தார், போனார். ரஹானே எல்லாப் பந்தும் அடித்தாட வேண்டும் என்று நினைக்கையில், ஸ்ரெ யினின் வேகம் அவரை வெளி யேற்றியது. பின்வரிசையில் டோனி மட்டும் வேடிக்கை. ஏனையோர் ஒற்றை ஓட்டம்.

முடிவில் முன்னூறு ஓட்டங் களைத் தாண்டியது இந்தியா. தென்னாபிரிக்காவின் அதிர டிக்கு இதுவெல்லாம் தூசு. வந்தவர்களுக்கு, இந்தியா வின் வேகங்கள் கொடுத்த மிரட்டலில் பயந்தே போனார் கள். சீராக சீட்டுக் கட்டுப் போலச் சரிந் தது இலக்கு. டீ வில்லியர்ஸ் – பி ள ஸி ஸ் இணைப்பு கொஞ்சம் ஆறு தல். அவசரப்பட்டு ஓடியதால் டீ வில்லியர்ஸ் 'ரன் அவுட்'. ஆட்டத்தின் போக்கை ஒட்டு மொத்தமாக மாற்றியது. இதன் பின்னர் தென்னாபிரிக் காவால் முடியவில்லை.

இந்திய வேகங்களுக்கு ஈடாக சுழலில் பின்னி எடுத் தார் அஸ்வின். இதனால் ஆபிரிக்க பின்வரிசை இந்தி யாவிடம் சரணடைந்தது.

இறுதியில் 130 ஓட்டங்க ளால் தோல்வியைத் தழுவி னர் ஆபிரிக்கர்கள்.

இதுவரை உலகக் கிண்ணத் தில் தென்னாபிரிக்காவிடம் இந்தியா வென்றதில்லை. இந்த வரலாறு நேற் றுடன் மாறியது. (5-ரி)



# இலங்கை வெற்றி

2015 உலகக் கிண்ணம்

இலங்கை எதிர் ஆப்கான்
இலங்கை 04 இலக்குகளால் வெற்றி

நாணயச் சுழற்சி
இலங்கை

ஆப்கான்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அஹ்மதி | C ஹேரத் B லக்மல் | 24 | 23 | 04 | 0 |
| மங்கல் | C திரிமன்னே B மத்தியூஸ் | 10 | 30 | 01 | 0 |
| ஸ்ரானிக்ஸை | C மெண்டிஸ் B ஹேரத் | 54 | 57 | 05 | 01 |
| சென்வாரி | C மத்தியூஸ் B பெரேரா | 38 | 70 | 05 | 0 |
| நபி | B மலிங்க | 21 | 27 | 02 | 01 |
| சடரான் | C பெரேரா B லக்மல் | 10 | 15 | 0 | 01 |
| சசாய் | C ஹேரத் B மலிங்க | 19 | 38 | 01 | 0 |
| அஸ்ரப் | C லக்மல் B மலிங்க | 28 | 32 | 01 | 02 |
| டி.சடரான் | B மத்தியூஸ் | 04 | 05 | 01 | 0 |
| ஹஸன் | C மெண்டிஸ் B மத்தியூஸ் | 0 | 01 | 0 | 0 |
| எஸ்.சடரான் | ஆட்டமிழப்பில்லை | 01 | 01 | 0 | 0 |
| உதிரிகள் | | 23 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மலிங்க | 9.4 | 41 | 03 | 01 |
| லக்மல் | 10 | 36 | 02 | 01 |
| மத்தியூஸ் | 07 | 41 | 03 | 0 |
| பெரேரா | 10 | 54 | 01 | 0 |
| ஹேரத் | 10 | 41 | 01 | 0 |
| மெண்டிஸ் | 03 | 13 | 0 | 0 |

TOTAL 232 (49.4)

1-34 (மங்கல்)
2-40 (அஹ்மதி)
3-120 (ஸ்ரானிக்ஸை)
4-157 (சென்வாரி)
5-169 (நபி), 6-175 (எஸ்.சடரான்)
7-221 (அஸ்ரப்), 8-227 (டி.சடரான்)
9-227 (ஹஸன்), 10-232 (சசாய்)

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| திரிமன்னே | LBW B டி.சடரான் | 0 | 01 | 0 | 0 |
| டில்ஷான் | C சசாய் B எஸ்.சடரான் | 0 | 01 | 0 | 0 |
| சங்கக்கார | B ஹஸன் | 07 | 13 | 01 | 0 |
| கருணாரத்ன | C மங்கல் B ஹஸன் | 23 | 32 | 03 | 0 |
| ஜெயவர்த்தன | C மங்கல் B ஹஸன் | 100 | 120 | 08 | 01 |
| மத்தியூஸ் | R.O B நபி | 44 | 81 | 02 | 0 |
| மெண்டிஸ் | ஆட்டமிழப்பில்லை | 09 | 17 | 0 | 0 |
| பெரேரா | ஆட்டமிழப்பில்லை | 47 | 26 | 06 | 01 |
| உதிரிகள் | | 06 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| டி.சடரான் | 09 | 44 | 01 | 0 |
| எஸ்.சடரான் | 10 | 48 | 01 | 01 |
| ஹஸன் | 09 | 45 | 03 | 0 |
| அஷ்ரப் | 8.1 | 31 | 0 | 0 |
| நபி | 5.2 | 31 | 0 | 0 |
| ஸ்ரானிக்சை | 0.5 | 06 | 0 | 0 |
| சென்வாரி | 06 | 32 | 0 | 0 |

TOTAL 236 (48.2)

1-0 (திரிமன்ன),
2-2 (டில்ஷான்)
3-18 (சங்கக்கார),
4-51 (கருணாரத்ன)
5-177 (மத்தியூஸ்)
6-178 (ஜெயவர்த்தன)

ஆட்ட நாயகன் ஜெயவர்த்தன



ஆட்டநாயகன் மஹேல

ஆப்கான் பின்வரிசை சுமாரான ஆட்டம். இத னால் 232 ஓட்டங்களை மாத்தி ரமே எடுக்க முடிந்தது.

எட்டக் கூடிய இலக்கை அடித்தாட திரி மன்னே – டில்ஷான் வந்தனர். முதல் பந்தி லேயே மூடையைக் கட்டினார் திரிமன்னே. அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் டில்ஷான் வெளியேற்றம். ஆஸ்திரேலியாவுடன் கூட இலங்கை இப்படி மோசமாக ஆடாதது. ஆப்கானுடன் திணறியது. சங்கா – திமுத் கருணாரத்ன நிதானம். அதுவும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. ஹமீட் ஹசன் வேகத்தில் சங்கா போல்ட். ஆச்சரியம் தாங்காமல் பெல்டி அடித்தார் ஹமீட் ஹசன். திமுத் கருணாரத்னவும் தொடர்ந்து வெளி யேறினார். 51 ஓட்டங்களுக்கு 4 இலக்கு கள். தோல்வியின் விளிம்பில் தத்தளித்த இலங்கையை மஹேல – மத்தியூஸ் இணை கரைசேர்த்தது.

மத்தியூஸ் படு நிதானம். மஹேல சுமாரான ஆட்டம். மெது வாக ஓட்டங்களை சேர்த்த னர். ஆப்கான் ரன்அவுட் சந் தர்பங்களை தவறவிட்டுக் கொண்டேயிருந்தது. ஆனா லும் களத்தடுப்பு மோசமாக இல்லை. இதனால் இலங்கை அடித்தாடி ஓட்டங்க ளைச் சேர்க்க திணறியது. இணைப்பு சதம் கடந்தது. மஹேல சதமடிக்க காத்திரு கையில் மத்தியூஸ் ரன்அவுட். சதமடித்த வேகத்தில் மஹேலவும் ஆட்டமிழப்பு. அடுத்தடுத்து இரு இலக்குகள் இழப்பு.

ஆப்கான். அஷ்கர் 50 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். அடித்தவர் அடித்தாட நினைத்தார். ஹேரத் பந்தை ஓங்கி அடிக்க மெண்டிஸ் கைகளுக்குள் புகுந்தது. திஸ்ஸர பெரேரா வேகத்தில் பவுண்டரி, சிக்ஸர் விளாசிய வேகத் தில் அணித் தலைவர் நபி ஆட்டமிழந்தார்.

வெற்றிக் காற்று மீண்டும் ஆப்கான் பக்கம். ஜீவன் மெண்டிஸ் – திஸ்ஸர பெரேரா இணை, மெல்ல மெல்ல இலங்கையின் பக்கம் வெற்றியைத் திருப்பி னர்.

திஸ்ஸர தனது வழமையான பாணியில் பதிலடி கொடுத் தார். போட்டுக் கொடுத்த ஓட் டங்களை அடித்து எடுத்தார். பத்துப் பந்துகள் மீதமி ருக்கையில் இலங்கைக்கு முதலாவது வெற்றி வந்து சேர்ந்தது.

(5–ரி)

குழு A

| அணியின் பெயர் | வெற்றி | தோல்வி | சம நிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 3 | 0 | 0 | 6 |
| ஆஸ்திரேலியா | 1 | 0 | 1 | 3 |
| பங்களாதேஷ் | 1 | 0 | 1 | 3 |
| இலங்கை | 1 | 1 | 0 | 2 |
| ஆப்கானிஸ்தான் | 0 | 2 | 0 | 0 |
| ஸ்கொட்லாந்து | 0 | 1 | 0 | 0 |
| இங்கிலாந்து | 0 | 2 | 0 | 0 |

குழு B

| அணியின் பெயர் | வெற்றி | தோல்வி | சம நிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 0 | 0 | 4 |
| மே.இ.தீவுகள் | 1 | 1 | 0 | 2 |
| அயர்லாந்து | 1 | 0 | 0 | 2 |
| சிம்பாவே | 1 | 1 | 0 | 2 |
| தென்னாபிரிக்கா | 1 | 1 | 0 | 2 |
| ஐ.அ.இராச்சியம் | 0 | 1 | 0 | 0 |
| பாகிஸ்தான் | 0 | 2 | 0 | 0 |

## செய் அல்லது செத்து மடி



மைதானத்தில் விளையாட்டை பார்ப்பவர்களையும், நாட்டில் தொலைக்காட்சிகளில் போட் டியை பார்ப்பவர்கள் குறித்தும் அவர்கள்உணரவேண்டும்என்று பெரிதும்காட்டமாககூறியுள்ளார். 1992 ஆம் ஆண்டு இதேபோல் ஆஸ்திரேலியா மற்றும் நியூசி லாந்தில் தொடர் நடைபெற்ற போது பாகிஸ்தான் அணியே வெற்றிபெற்று கிண்ணத்தை வென்றது.

பந்து வீச்சாளர்கள் விவகாரம் தொடர்பாக நான் கடந்த பல மாதங்களாக கத்திக் கொண்டே இருக்கின்றேன். ஆனால் அவர் கள் தொடர்ந்து 4 பந்துவீச்சா ளர்களுடன் விளையாடுகின்ற னர். அவர்களது வலுவான நிலையை தொடர்ந்து பலவீனப் படுத்தி வருகின்றனர் – என்றார்.

(5–ரி)

## வாய்ப்பு இருக்கின்றதா இங்கிலாந்துக்கு ?

பெற்றுள்ளது.

இதனால் அட்டவணையில் கடைசிநிலையில் உள்ள இங்கிலாந்துக்கு நெருக்கடி அதிகமாகியுள்ளது.

இதுகுறித்து பங்களாதேஷ் அணியின் அணித்தலைவர் மோர்டசா கூறுகையில், இன் னும் 2 அல்லது 3 ஆட்டங் களில் வென்றால் போதும் எனவும், அதை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் தெரி வித்துள்ளார்.

இதேவேளை இங்கிலாந்து அணி எஞ்சிய ஆட்டங்களில் வென்றாக வேண்டிய கட்டா யத்தில் உள்ளது.

(5–ரி)

# இந்தியா முதல் வெற்றி

2015 உலகக் கிண்ணம்

இந்தியா எதிர் தென்னாபிரிக்கா
இந்தியா 130 ஓட்டங்களால் வெற்றி

நாணயச் சுழற்சி
இந்தியா

இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ரோகிட் | R.O வில்லியர்ஸ் | 0 | 6 | 0 | 0 |
| தவான் | C அம்லா B பார்னல் | 137 | 146 | 16 | 02 |
| கோஹ்லி | C பிளாஸிஸ் B ரகீர் | 46 | 60 | 03 | 0 |
| ரஹானே | LBW B ஸ்டெய்ன் | 79 | 60 | 07 | 03 |
| ரெய்னா | C ரொஸோவ் B மோர்கல் | 06 | 05 | 01 | 0 |
| டோனி | C டீகொக் B மோர்கல் | 18 | 11 | 03 | 0 |
| ஜடேஜா | R.O வில்லியர்ஸ் | 02 | 04 | 0 | 0 |
| அஸ்வின் | ஆட்டமிழப்பில்லை | 05 | 05 | 0 | 0 |
| ஷமி | ஆட்டமிழப்பில்லை | 04 | 05 | 01 | 0 |
| உதிரிகள் | | 10 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்டெய்ன் | 10 | 55 | 01 | 01 |
| பிளண்டர் | 04 | 19 | 0 | 01 |
| டுமினி | 07 | 39 | 0 | 0 |
| மோர்கல் | 10 | 59 | 02 | 0 |
| ரகீர் | 10 | 48 | 01 | 0 |
| பார்னல் | 09 | 85 | 01 | 0 |

TOTAL 307/7 (50)

1-09 (ரோகித்)
2-136 (கோஹ்லி)
3-261 (தவான்)
4-269 (ரெய்னா)
5-278 (ரஹானே)
6-284 (ஜடேஜா)
7-302 (டோனி)

தென்னாபிரிக்கா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அம்லா | C ஷமி B ஷர்மா | 22 | 28 | 02 | 0 |
| டீகொக் | C கோஹ்லி B ஷமி | 07 | 15 | 01 | 0 |
| பிளாஸிஸ் | C தவான் B ஷர்மா | 55 | 71 | 05 | 0 |
| வில்லியர்ஸ் | R.O ஷர்மா | 30 | 38 | 03 | 0 |
| மில்லர் | R.O யாதவ் | 22 | 23 | 02 | 0 |
| டுமினி | C ரெய்னா B அஸ்வின் | 06 | 15 | 0 | 0 |
| பார்னல் | ஆட்டமிழப்பில்லை | 17 | 29 | 1 | 0 |
| பிளண்டர் | LBW B அஸ்வின் | 0 | 02 | 0 | 0 |
| ஸ்டெய்ன் | C தவான் B ஷமி | 01 | 07 | 0 | 0 |
| மோர்கல் | B அஸ்வின் | 02 | 05 | 0 | 0 |
| தகீர் | LBW B ஜடேஜா | 08 | 10 | 01 | 0 |
| உதிரிகள் | | 07 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| யாதவ் | 06 | 34 | 0 | 0 |
| ஷமி | 08 | 30 | 02 | 01 |
| சர்மா | 07 | 31 | 02 | 0 |
| ஜடேஜா | 8.2 | 37 | 01 | 0 |
| அஸ்வின் | 10 | 41 | 03 | 0 |
| ரெய்னா | 01 | 03 | 0 | 0 |

TOTAL 177 (40.2)

1-12 (டீகொக்), 2-40 (அம்லா)
3-108 (வில்லியர்ஸ்),
4-133 (பிளாஸிஸ்)
5-147 (டுமினி), 6-153 (மில்லர்)
7-153 (பிளண்டர்) 8-158 (ஸ்டெய்ன்)
9- 61 (மோர்கல்) 10-177 (தகீர்)

ஆட்ட நாயகன் தவான்

## சச்சினுக்கு அமோக வரவேற்பு



தென்னாபிரிக்க– இந்திய அணிகள் மோதிய நேற்றைய ஆட்டத்தைப் பார்ப்பதற்காக, இந்திய அணியின் முன்னாள் நட்சத்திரக் கிரிக் கெட் வீரர் சச்சின்-டெண்டுல்கார் மைதானத் துக்கு நேரில் வந்திருந்தார்.

சச்சின் மைதானத்துக்குள் வந்ததை அகலத் திரையில் பார்த்த ரசிகர்கள் கரகோஷம் எழுப்பி பெரும் வரவேற்புக் கொடுத்தனர்.

மெல்பேர்ண் அரங்குக்கு சச்சின் வந்த போது ரசிகர்கள் கொடுத்த வரவேற்பு மைதானத் தையே ஸ்தம்பிக்க செய்தது. ஒவ்வொரு முறை அரங்கத்தில் உள்ள பிரமாண்ட திரை யில் சச்சினின் முகம் தெரியும் போதும் ரசிகர்க ளின் விசில் சத்தத்தால் மைதானம் அதிர்ந்தது. அதே நேரம் இந்திய கொடியில் உள்ள வர்ணங்களை பூசியபடி அதன் மேல் மிஸ் யு சச்சின் என்று எழுதியிருக்கும் சச்சின் வெறி யரும் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.



ஆட்டநாயகன் ஷிகர் தவான்

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக உலகக்கிண்ணத் தில் இந்தியா முதல்வெற்றி பெற்றது. அத்துடன் தனி நபர் அதிகூடியஓட்ட என் ணிக்கை 137 என்ற புதிய சாதனையையும் தவான் படைத்தார்.

உலகக் கிண்ணத் தொடரில் துடுப்பாட்டத்தில் சிறந்த பெறுபேறுகள்

| பெயர் | ஆட்டங்கள் | ஓட்டங்கள் | 50 | 100 |
|---|---|---|---|---|
| எஸ்.தவான் | 02 | 210 | 1 | 1 |
| டி.மில்லர் | 02 | 160 | 0 | 1 |
| பி.மக்கலம் | 03 | 157 | 2 | 0 |

உலகக் கிண்ணத் தொடரில் பந்துவீச்சில் சிறந்த பெறுபேறுகள்

| பெயர் | ஆட்டங்கள் | இலக்குகள் | சிறந்த பெறுபேறு |
|---|---|---|---|
| ரி.சௌத்தி | 03 | 11 | 07/33 |
| எம்.சமி | 02 | 06 | 04/35 |
| டி.விக்டோரி | 03 | 06 | 03/24 |

# வாய்ப்புக்கள் எப்படியிருக்கின்றன?

உலகக் கிண்ண வாசகர் கணை



நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் கடந்த வாரம் வரை நடைபெற்ற ஆட்டங்களின் அடிப்படையில் எந்த அணி கிண்ணத்தை வெல்லும் நிலையில் இருக்கின்றது என்பதை ஆராய்வோம்.

குழு ஏ இல் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களின் அடிப்படையில் நியூசிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் வெற்றியீட்டிருக்கின்றன. இதில் நியூஸிலாந்து மட்டுமே 2 ஆட்டங்களை விளையாடி, இரண்டிலுமே வென்றும் இருக்கிறது. மற்றைய இரு அணிகளும் தாம் விளையாடிய ஒரு ஆட்டத்தில் மாத்திரம் மிகப்பெரிய வெற்றியைப் பதிவு செய்திருக்கின்றன.

குழு பியில் அதிர்ச்சித் தோல்விகள் அதிகமாக நிகழக் கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது. இதை அயர்லாந்து எதிர் மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையேயான போட்டி எடுத்துக்காட்டிவிட்டது. இதனை விட தென்னாபிரிக்க, இந்திய அணிகள் வெற்றிகளைப் பெற்றுள்ளன. சிம்பாப்வே அணி தென்னாபிரிக்க அணிக்கெதிராக விளையாடிய விதம் இன்னும் சில அதிர்ச்சித் தோல்விகளை இந்தக் குழுவிலிருந்து எதிர்பார்க்கலாம் என்றே கருதத் தோன்றுகிறது.

குழு ஏ யில் அதிர்ச்சித் தோல்விகளுக்கு வாய்ப்புக்கள் குறைவு. நியுஸிலாந்து எதிர் ஸ்கொட்லாந்து ஆட்டம் ஒரு சிறு அச்சத்தை தோற்றுவித்தது. அசந்தால் ஸ்கொட்லாந்து அணியும் அயர்லாந்தைப் போலவே சில அதிர்ச்சிகளை ஏற்படுத்தக்கூடும்.

இந்தக் குழுவிலிருந்து ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து நிச்சயமாகவும் இங்கிலாந்து, இலங்கை அணிகள் அதிர்ச்சிக்குட்படாவிடில் காலிறுதிக்கும் முன்னேறும். பங்களாதேஷ், ஸ்கொட்லாந்து அணிகளுக்கும் சில நேரங்களில் வாய்ப்பு கிட்டலாம். குழு 'பி' யில் காலிறுதிக்கு இழுபறி நிலைகள் நிச்சயமாக உண்டு. தென்னாபிரிக்க அணிக்கு மாத்திரமே நிச்சய காலிறுதி வாய்ப்பு உள்ளது. மற்றும் இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு சிம்பாப்வே, அயர்லாந்து அணிகளால் அதிர்ச்சி வைத்தியம் ஏற்பட்டால் இவற்றின் காலிறுதி வாய்ப்புக்களில் மாற்றம் நிகழலாம்.

காலிறுதியிலிருந்து அரையிறுதிக்குத் தொடரை நடத்தும் ஆஸ்திரேலிய, நியூஸிலாந்து அணிகளுடன், தென்னாபிரிக்க அணியும் (மீண்டும் ஏதாவதொரு முறையில் விதி விளையாடாவிட்டால் மட்டும்) முன்னேறும். நான்காவது அணியாக இங்கிலாந்து, இலங்கை அல்லது இந்தியா ஆகிய அணிகளில் ஒன்று முன்னேறும்.

ஏனெனில் இந்திய, இலங்கை அணிகளின் பந்துவீச்சு சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை. இந்நிலை தொடர்ந்தால் காலிறுதி வரை முன்னேறுவதே இவ்விரு அணிகளுக்கும் கேள்விக்குறிதான்.

இறுதி ஆட்டத்தில் பெரும்பாலும் ஆஸி–நியூஸிலாந்து மோதலாகவே வரும் வாய்ப்புள்ளது. தற்செயலாக இவற்றில் ஒன்று அரையிறுதியில் தோற்றால் தென்னாபிரிக்கா அணிக்கு இறுதி ஆட்டத்துக்கு வாய்ப்புக் கிட்டும். பெரும்பாலும் ஆஸ்திரேலிய அணியே 5 ஆவது முறையாகவும் பட்டத்தை வெல்லும்.

***கு. கிரிஷாந்தன், கோண்டாவில்***

## தினம் ஒரு பரிசுப் போட்டி !!

அயர்லாந்து – ஐ.அ.இராச்சியம் அணிகளுக்கு இடையில் நாளை (24.02.2015) நடைபெறவுள்ள ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

.................................................................

பெயர் : ................................................

தே.அ.இல. : ................................................

முகவரி : ................................................

................................................

தொலைபேசி இல.: ................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (23.02.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

## பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

.......................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

.......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி. .......................

தொலைபேசி .......................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

## போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

## அரையிறுதிப் பரிசுப் போட்டி

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)....................... 2).......................

3)....................... 4).......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி. .......................

தொலைபேசி .......................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015



தலா 5,000/= 20 பேருக்கு

இறுதிப் போட்டிக்கு BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES Jaffna
021 221 9910 / 077 710 2131
வழங்கும் 5 லட்சத்தை வெல்லுங்கள்

## மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

.......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி. .......................

.......................

தொலைபேசி

.......................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு $2\frac{1}{2}$ லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு $1\frac{1}{2}$ லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

5,000/=

நியூ மைதிலி ஜுவலர்ஸ்
யாழ் மண்ணில் தன்னிகரில்லாத் தலைமை நிறுவனம்
தொ.பே: 021 221 7878/ 021 221 7878
E-mail: newmaithily@gmail.com
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**லக்கி'பான்சி கவுஸ்** இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்** பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா** 350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கனன் போட்டோ** 165 பிரதான வீதி.பருத்தித்துறை.
**சூரியா பாமசி** புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்** 85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்** 3ஆம் சந்தி கெருடாவில்.
**தர்மலிங்கம்** கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
**கலைச்சோலை** இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்** ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்** மூளாய் வீதி வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்** பலாலி.வீதி,கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்** உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்** பரமேஸ்வரா சந்தி,திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்** திருநெல்வேலி.
**ஓம் கணேசா** இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்** 103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை** 41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்** 14. விதானையார் வீதி சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்** இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே** செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்** சித்தங்கேணி வீதி. பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்** பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்** சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்** பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்** சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை** பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ** கே.கே.எஸ் .வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்** நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்** ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி** ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்** அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை** வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை** மல்லாவி.
**கோமதி நெற்கபே** வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை** 24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்** ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்** 31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்** பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்** தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்பிசிஎஸ்)** பூநகரி.
**டிலசிகா** 124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்** விசுவமடு.
**வரணா புக்சொப்** 755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்** குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை** பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்** வரணி.
**விநாயகர் களஞ்சியம்** அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்** வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,** நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்** காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் காணப்படும். உறவினர் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். முயற்சிகளில் சாதகமான பயன் கிடைக்கும். காரியங்களைச் செய்து முடிப்பதில் திறமை வெளிப்படும்.

**இடபம்:** மனம் தளராது செயற்பட்டால் வெற்றி கிடைக்கும். மன நிம்மதியைக் குறைக்கும். வீண் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டி இருக்கும். எனவே கவனமாக எதிலும் ஈடுபடுவது நல்லது. எதிர்பார்த்த உதவிகளும் கிடைக்கும்

**மிதுனம்:** எந்தக் காரியத்தையும் ஆராய்ந்து பார்த்துச் செய்வது நல்லது. மனதில் வியாபாரம் பற்றிய கவலை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகப் பணிகளை கூடுதல் கவனமுடன் செய்வது நல்லது.

**கடகம்:** குடும்பத்தில் நிம்மதி குறையும் படியான சூழ்நிலை உண்டாகும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உடல்களைப்பும், சோர்வும் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது.

**சிங்கம்:** எந்தக் காரியத்தில் ஈடுபடும்போதும் சிந்தித்துச் செயற்படுவது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம். எல்லாவற்றிலும் நன்மை உண்டாகும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். வாக்கு வன்மை ஏற்படும்..

**கன்னி:** பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிக்கும் எண்ணம் ஏற்படும். சிலர் யாத்திரை செல்வார்கள். அடுத்தவர்கள் உதவி கிடைக்கும்.

**துலாம்:** தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்திசாதுரியத்துடன் நடந்து கொண்டு நன்மை அடைவார்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கக் கூடும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். புதிய வீடு கட்டுவது, பழைய வீட்டை புதுப்பிப்பது போன்ற பணிகளைத் தொடங்க முற்படுவீர் கள்.

**தனுசு:** ஆன்மிக பயணம் செல்வதில் விருப்பம் உண்டாகும். புத்தி சாதுரியத்துடன் நடந்து கொண்டு மற்றவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். மேன்மை உண்டாகும். செல்வாக்கு உயரும். மன மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** இடமாற்றம் ஏற்படலாம். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். வாகன யோகம் கிடைக்கும். எழுத்துவகையில் எதிலும் சிக்காமல் கவனமாக இருப்பது நல்லது.

**கும்பம்:** வீண் அலைச்சல் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திடீர் நெருக்கடிகள் ஏற்படலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. பயனற்ற பயணங்கள் உண்டாகலாம்.

**மீனம்:** குடும்பத்தில் இருப்பவர்களுடன் கவனமாகப் பேசுவது நல்லது. பிள்ளைகளின் கல்வி தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துவது நல்லது. வாக்கு வாதத்தைத் தவிர்ப்பது நல்லது.

## கூகுளின் இணைய சேவை

உலககில் இணைய வசதி கிடைக்காதவர்கள் 5 பில்லியன் பேர் இருக்கின்றனர். பல இடங்களில் இணைய சமிக்ஞைகள் இல்லாமல் இருப்பதுதான் காரணம். எனவே, வருமானத்துக்கு இணையத்தையே நம்பியிருக்கும் தேடு பொறி இயந்திர நிறுவனமான கூகுள், எல்லோருக்கும் இணையம் கிடைக்க வேண்டும் என்பதற்காக, 'புரஜெக்ட் லூன்' என்ற திட்டத்தை, 2013 ஆம் ஆண்டு அறிவித்தது.

செயற்கைக்கோள்களுக்கு பதிலாக, வானில் 20 கிலோ மீற்றர் உயரத்தில், ஈலியம் வாயு நிரம்பிய பலூன்களை ஏராளமாக மிதக்க விட்டு, அதில் சிறிய தகவல் தொடர்பு சாதனங்களை வைத்து, இணைய தகவல்களை வை–பை சமிக்ஞைகளாக பூமிக்கு அனுப்புவதும் – பெறுவதும் தான் புரஜெக்ட் லூனின் பணி.

இந்தத் திட்டத்துக்கு, உலக நாடுகளின் தலைவர்களுடன் பேசி, ஒப்புதல்களை வாங்க ஆரம்பித்திருக்கிறது கூகுள். ஏற்கனவே நியூஸிலாந்தில் இரண்டு ஆண்டுகளாக, 30 ராட்சத பலூன்களை மிதக்கவிட்டு, அங்குள்ள இணையப் பயனாளிகளுக்கு சமிக்ஞைகளை அனுப்பி வெள்ளோட்டம் பார்த்திருக்கிறது.

பூமியின் மேலே மிதக்கும் பல நூறு கூகுள் பலூன்கள், ஒன்றோடு ஒன்று எப்போதும் தொடர்பில் இருக்கும். இதனால் வானத்தில் ஒரு வலுவான இணைய சமிக்ஞை உருவாகிவிடும். எனவே, எவரெஸ்ட் சிகரம் முதல், சகாரா பாலைவனம் அமேசான் காடுகள் முதல், நட்ட நடுக் கடல் வரை எந்தப் பகுதியிலும், இணைய சமிக்ஞை கிடைக்காது என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

## வருத்தப்படும் சமந்தா



சமந்தா தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கிறார். தமிழில் நடித்த திரைப்படங்கள் வெற்றிகரமாக ஓடியதால் சம்பளத்தை இந்திய ரூபாய்ப்படி ஒரு கோடியாக உயர்த்திவிட்டதாகக் கூறப்படுகிறது.

விக்ரம் ஜோடியாக நடிக்கும் 'எண்றதுக்குள்ள' என்ற திரைப்படம் விரைவில் வெளிவர உள்ளது. சம்பளத்தை உயர்த்தியது குறித்து சமந்தாவிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:–

கதாநாயகிகள் அதிகம் ஊதியம் வாங்குவதாக பலரும் பேசுகிறார்கள். ஆனால், சினிமா உலகுக்குள் என்ன நடக்கிறது என்பது யாருக் கும் தெரிவது இல்லை. பேசியபடி ஊதியத்தை வாங்க முடிவதில்லை. ஓரிரு படங்கள் ஓடாவிட்டால் சம்பளத்தைக் குறைத்து விடுகிறார்கள்.

படங்கள் ஓடினால் ஊதியத்தைக் கூட்டுவது இல்லை. ஒரு படம் வெற்றி அடைவதற்கு அதில் நடித்த கதாநாயகிக்கும் பங்கு உண்டு. அதனை யாரும் நினைத்துப் பார்ப்பது இல்லை. கதாநாயகிகளை இளக்காரமாகத் தான் பார்க்கிறார்கள். இதை எல்லாம் வெளியில் சொல்லக்கூடாது. ஆனாலும் சொல்லி விட்டேன் – என்கின்றார்.

## சூரியனை நெருங்கிய நட்சத்திரம்



70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சூரிய மண்டலத்தின் ஊடாக வேற்று நட்சத்திரம் ஒன்று பயணித்திருப்பதை வானிலையாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

வேறு எந்த நட்சத்திரமும் சூரிய மண்டலத்தை இவ்வளவு நெருங்கியதில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சூரிய மண்டலத்துக்கு மிக அருகில் இருக்கும் பிரொக்சிமா சென்டவுரி' நட்சத்திரத்தை விடவும் குறித்த நட்சத்திரம் ஐந்து மடங்கு நெருங்கி வந்திருப்பதாக சர்வதேச ஆய்வுக் குழுவொன்று குறிப்பிட்டுள்ளது. ஹெல்ஸ் என அழைக்கப்படும் இந்த சிவப்பு குள்ள நட்சத்திரம் சூரிய குடும்பத்தின் வெளிப்புற பகுதியான ஊட் மேக மண்டலத்தின் ஊடாக பயணித்துள்ளது.

இதில் ஹெல்ஸ் நட்சத்திரம் தனியாக அதனுடன் பளுப்பு குள்ள நட்சத்திரம் ஒன்றும் சூரிய மண்டலத்தின் ஊடே பண்டைய காலத்தில் பயணித்துள்ளது. பளுப்பு குள்ள நட்சத்திரம் என்பது ஒரு செயலிழந்த நட்சத்திரமாகக் கருதப்படுகிறது.


குறித்த மங்கலான நட்சத்திரத்தின் பயணப் பாதையை ஆய்வு செய்தபோது, இந்த நட்சத்திரம் 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எமது சூரியனில் இருந்து 0.8 ஒளியாண்டு தொலைவில் பயணித்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது. சூரிய மண்டலத்துக்கு அருகில் இருக்கும் பிரொக்சிமா சென்டவுரி நட்சத்திரம் 4.2 ஒளியாண்டு தொலைவில் காணப்படுகிறது.

சிகரெட் பிடிக்குறவங்க பல பேருக்கு முடி நரைக்கிறதே இல்ல

அப்படியா? ஆச்சரியமாய் இருக்கே எப்படி?

நரைக்கிற வயசுவரை அவங்க்ள்ள நிறைய பேரு இருக்கிறதில்ல?

I Like







## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

ஆண்: ஐ லவ் யூ

பெண் : (ஓங்கி கன்னத்தில் ஒரு அறை விட்டுட்டு) என்னடா சொன்னாய் ? ராஸ்கல்....

ஆண் : (பத்து செக்கன் தயங்கி நின்னுட்டுப் பின்னர் இரண்டு கன்னத்திலையும் பளார் பளார் என்று மாறி மறி அறைஞ்சிட்டு ) 'சொன்னது கேக்கலைன்னா ஏண்டி என்ன கன்னத்திலை அறைஞ்சாய்? யாருக்கிட்ட...

# பிரதமர் ரணிலைக் கைது செய்யக் கோரி முறைப்பாடு

## பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டுள்ளாராம்

கொழும்பு, பெப். 23

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். எனவே அவரைக் கைது செய்யுமாறு கோரி பயங்கரவாத தடுப்புப் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனது முழுமையான நேர்காணலோடு வெளியாகியிருந்த 'புரொன்ட் லைன்' சஞ்சிகையை இலங்கையில் விநியோகம் செய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுமதித்தமைக்கு எதிராகவே மேற்படி முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புரொன்ட்லைன் சஞ்சிகைக்கு கடந்த காலங்களில் தடை விதிக்கப்பட்டிருந்தது. பிரபாகரனது நேர்காணலுடன் வெளியான அந்த சஞ்சிகை சுங்கத் திணைக் களத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தது. எனினும் பிரதமரின் நேரடித் தலையீட்டின் அடிப்படையில் இந்த சஞ்சிகையை இலங்கையில் விநியோகம் செய்ய அனுமதிக்கப்பட்டது.


பிரதமரின் இந்த நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்துமாறும் சிங்கள கடும் போக்கு அமைப்பான, சிங்கள தேசிய முன்னணி அமைப்பின் பஞ்ஞாலோக தேரர், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்துள்ளார். 1987 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனால் வழங்கப்பட்ட செவ்வி ஒன்றை புரொன்ட் லைன் சஞ்சிகை மீள் பிரசுரம் செய்திருந்தது. இந்த சஞ்சிகையின் குறித்த செவ்வி தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதன் அடிப்படையில் சஞ்சிகையின் பிரதிகள் சுங்கப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (வ–5)

# செயலமர்வு

தென்மராட்சி, பெப்.23

யாழ்.மாவட்ட அரச திணைக்கள அலுவலகங்களுக்கு இடையிலான தேசிய உற்பத்தித் திறன் தர வலய போட்டி தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக் கிழமை முப.9 மணிக்கு மாவட்ட யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்ட அரச துறைக்கான போட்டி நெறிப் படுத்தல் பற்றிய தெளிவூட்டல் செயலமர்வுக்கு அலுவலகங்களிலிருந்து ஒவ்வொரு உத்தியோகத்தரைக் கலந்து கொள்ளுமாறு மாவட்டச்செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–9)

## ஓராண்டு கழிந்தது



18 10 1937 தோற்றம்

05 03 2014 மறைவு

திதி: பூர்வபக்க பஞ்சமி

அமரர் **தம்பிப்பிள்ளை சதானந்தன்**

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

எம் நினைவாக மாற்றப்பட்டு விட்டாய் நீ

71/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

# அரச காடுகளிலுள்ள 20,000 ஹெக்ரெயர் கையகப்படுத்தல்

## வனவளப்பாதுகாப்பு ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.23

அரசுக்குச் சொந்தமான காடுகளில் 20 ஆயிரம் ஹெக்ரேயர்கள் வரையிலான நிலம் பல்வேறு தரப்பினரால் அனுமதியின்றி கையகப்படுத்திக் கொள்ளப்பட்டிருப்பது இனங்காணப் பட்டுள்ளது.

காடுகளில் எல்லைகளைக் குறியீடு செய்வதாகத் தெரிவித்தே இவ்விதமாக அவர்களால் காட்டுப் பிரதேசங்கள் கையகப்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் வனவளப் பாது காப்பு ஆணையாளர் நாயகம் அனுர ஹத்துருசிங்க தெரிவிக்கிறார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரச வனங்களின் எல்லைகளைக் குறியீடு செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் இவ்விதம் இனங்காணப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக மேற் கொள்ளப்பட வேண்டியுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

பொதுவாக இவ்விதம் அனுமதியின்றி கையகப்படுத்திக் கொள்ளப் பட்டிருக்கும் பெருமளவிலான காணிகளில் விவசாயச் செயற்பாடுகள் போன்றே பல்வேறு மட்டங்களில் கட்டடங்களும் அமைக்கப்பட்டிருப்தோடு இந்தக் காணிகளை ஆண்டனுபவித்து வருவோருக்கு அவற்றை உரிமையாக்கி விடுவதா இல்லையா என்பது தொடர்பாக இன்னமும் தீர்மானம் எட்டப் பட்டிருக்கவில்லை.

அதேபோன்று, தாழ் நிலப் பிரதேசமான ஈரவலயக் காடுகளில் காணப்படும் முக்கிய அச்சுறுத்தலாக அந்தப் பாதுகாப்பு வனங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள தேயிலைப் பயிர்ச் செய்கை ஆகும்.

அரச பாதுகாப்பு வனங்களின் எல்லைகளை முறையாக குறியீடு செய்வதன் மூலமாக அனுமதியற்ற இந்த அத்து மீறல்களைக் குறைத்து விடக் கூடியதாக இருக்கும்.

கடந்த 17 ஆம் திகதி கன்னேலிய அரச பாதுகாப்பு வனப் பிரதேசத்தில் கண்காணிப்பு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த வேளை ஊடகவியலாளர்களுக்கு கருத்து வழங்கியபோதே ஆணையாளர் நாயகம் அனுர ஹத்துருசிங்க இவ்விதம் கருத்து வழங்கியிருந்தார். (வ–22)

# பாடகர் போட்டியில் முதலிடம்



கைதடி, பெப்.23

தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் அகில இலங்கை ரீதியாக விழிப்புலனிழந்தோரிடையே நடத்தப்பட்ட பாடகர் போட்டியிலே கைதடி தொழிற் பூங்காவைச் சேர்ந்த புலேந்திரன் ஜெகதீசன் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இப்போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கு கொண்ட போதும் இறுதிச் சுற்றுக்கு பத்துபேரே தெரிவாகினர். அதில் 9 சிங்களவருடன் ஒரே ஒரு தமிழராக நின்று போட்டியிட்டு இவர் வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு வெற்றிக்கேடயத்துடன் ஒரு இலட்சம் ரூபா பணமும் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

மந்துவில் கொடிகாமத்தைச் சொந்த இடமாகக் கொண்ட் இவர் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ளதுடன் அவர்களால் இயக்கப் படும் இசைக்குழுவில் ஒரு பாடகராகவும் உள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (வ–288)

## ஏழாம் ஆண்டு நினைவுகளில்......



மண்ணில் 1937 01 19

விண்ணில் 2008 03 12

திருமதி பூபதி குமாரசாமி

(திதி: மாசிமாத வளர்பிறை பஞ்சமி)

கருவாகி உயிராகி
உயிர் தந்த தாயே!
உதிரத்தைப் பாலாக்கி
ஊன் தந்த தாயே!
ஆண்டுகள் ஏழானாலும் ஆறாது
எம் துயர் - அன்னையே!!
உனைத் தினம் எதிர்பார்த்து
ஏங்கியே நிற்கின்றோம்

பூபதி, [illegible] வீதி, கல்வயல், சாவகச்சேரி.

அன்புகலா பிரியங்களுடன் குடும்பத்தினர்

(07212)(3.7.8)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் புஸ்பமலர் செல்வரத்தினம்

தோற்றம் 05.03.1952

மறைவு 24.01.2015

கடந்த 24.01.2015 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபச்செய்தி அனுப்பியவர்கள் மற்றும் பல வழிகளில் உதவியவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (23.02. 2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும வீட்டுக்கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கானை மேற்கு, நிற்சாமம். குடும்பத்தினர்

# கும்பாபிஷேகம்

தென்மராட்சி, பெப். 23

சாவகச்சேரி, டச்சு வீதி, செருக் கல்பதி சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன பஞ்சகுண்டபக்ஷ மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை மு.ப. 9.23 மணிக்கு இடம்பெறவுள்ளது. கும்பாபிஷேகக் கிரியைகள் நேற்று ஆரம்பமாகின. அடியார் கள் எண்ணெய் காப்பு சாத்துதல் நாளை காலை 8 மணி தொடக்கம் இடம்பெறும். குருஞானபாஸ்கரன் சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறும். மகா கும்பாபிஷேக தினத்தன்று அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்து வார். (வ–9)

# நாயால் கடியுண்ட நபருக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி

## களுத்துறையில் சம்பவம்



கொழும்பு, பெப்.23

நீர் வெறுப்பு நோய் ஏற்படாது தடுப்பதற்கு நாய்களுக்கு ஏற்றும் தடுப்பூசி மருந்து களுத்துறை ஹீனட்டிகல பிரதேசத்தில் நாயால் கடியுண்டுள்ள நபர் ஒருவருக்கு ஏற்றப்பட்டுள்ளது.

களுத்துறை பிரதேசத்திலுள்ள தனியார் மருத்துவமனையின் மருத்துவரால் பரிந்துரை செய்யப்பட்டிருந்ததற்கு அமைய அந்தப்பிரதேசத்தில் உள்ள தனியார் மருந்தகம் ஒன்றிலிருந்து வழங்கப்பட்டிருந்த நீர் வெறுப்பு நோய்க்கு நாய்களுக்கு ஏற்றும் தடுப்பு மருந்தே நாய்க்கடிக்கு உள்ளான அந்த நபருக்கு ஏற்றப்பட் டிருப்பது தெரியவந்துள்ளது. அதை அடுத்து நாய்க் கடிக்கு உள்ளான நபரின் உறவினர்களால் களுத் துறையிலுள்ள தேசிய சுகாதார விஞ்ஞான மையத்துக்கு இது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் சம்பந்தப்பட்ட தனியார் மருந்தகம் சீல் வைக்கப்பட்டுள்ளதோடு, இது சம்பந்தமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ–22)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



திருமதி செல்வரத்தினம் (சீமாட்டி) வேலாயுதம்பிள்ளை

திதி: பூர்வபக்க பஞ்சமி


அன்னைமடி 27.10.1928

அரன் அடி 24.01.2015

கற்பகனின் கழலடியினை கடந்த (24.01.2015) சனிக்கிழமை சேர்ந்துவிட்ட எங்கள் குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.02.2015) திங்கட்கிழமை அதிகாலை திருவடிநிலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியம் முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அமரரின் ஆன்மா சாந்தி நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு வீதி, வட்டு வடக்கு, சித்தன்கேணி. குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



# செல்லையா இந்திரசித்து

### மண்கும்பான் மேற்கு

அன்பு நண்பா! இந்திர சித்தா!
கேட்டோம் உன் மீளாத்துயில் செய்தி
கொண்டோம் அதிர்ச்சி! அல்ல
பேரதிர்ச்சி!
மீட்டோம் உன் முன் நினைவுகளை
எமது கிராமம் மண்கும்பான்-
சிறிய கிராமம்
அது சிறக்க ஏதாவது வழி செய்ய
வேண்டும் என்று
கொண்டாய் உள்ளத்தில் அடங்கா ஆசை
அமைத்தாய் மண்கும்பான்
அபிவிருத்திச் சபையை
ஏற்றாய் தலைமைப் பொறுப்பை
சாட்டி வீதி முற்றுப் பெறுவதற்கும், ஒழுங்கைகள் அமைப்பதற்கும்
உழைத்தாய் அல்லும் பகலும்
சாட்டி வீதியால் பேருந்து சேவையை நடத்த முயன்று பெற்றாய் வெற்றி
எமது சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்
பற்றாக்குறை தடையாக இருந்த போது
உனது பணத்தில் சம்பளம் வழங்கி ஆசிரியரை நியமித்து
கல்விக்கு தொண்டாற்றினாய்
உனது பணி வெள்ளைப்புற்றடி விநாயகரின் ஆலயத்தின் மீதும் தொடர்ந்தது
வந்தனை வழிபடுவோர் சபைத் தலைவராகி போராடினாய்
பதினைந்து வருடங்களாக நண்பர்கள் தொண்டர்கள் துணையோடு
பணத்தை உடல் உழைப்பை வழங்கி கண்டாய்
மண்கும்பான் வெள்ளைப்புற்றடி விநாயகர் ஆலய பரிபாலனசபையை
அதனால் அடைந்தாய் அளவற்ற மகிழ்ச்சி
இன்றும் வேண்டும் வீரகத்தி விநாயகனுக்கு திருப்பணி என
அமைத்தாய் தீர்த்தக்கேணி - பொழிந்த வெள்ளை வைரக் கல்லால்
நண்பா! இந்திரசித்தா! இன்று உன்னைப்பிரிந்து வாடுகின்றோம்.
உலகில் பிறந்தவர் என்றோ ஒரு நாள் இவ்வுலகை
விட்டு நீங்குவது உலக நியதி என்பதற்கமைய
உமது ஆன்மா வெள்ளைப்புற்றடியான் திருப்பாதத்தில் சரணடைந்து
பேரின்பப் பெருவாழ்வு வாழ எல்லாம்வல்ல விநாயகனை வேண்டி எங்கள் கண்ணீர்
அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நண்பர்கள்
பே.இராசரத்தினம், வை.குணரத்தினம்.

(57221)(4.3.7)

## தீ விபத்தில் குடும்பப் பெண் உயிரிழப்பு

மட்டக்களப்பு, பெப்.23

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள களுவங்கேணிப் பகுதியில் தீயில் எரிந்து பெண் ஒருவர் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார். களுவங்கேணி சிங்காரத் தோப்பு வீதியைச் சேர்ந்த சி.கோகிலா (வயது–23) என்றபெண்ணே உயிரிழந்ததாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர். வீட்டில் சமைத்துக் கொண்டிருந்த பேரது அடுப்பு தீப்பிடித்ததில் கோகிலா தீக்காயங்களுக்குள்ளானார். இந்தச் சம்பவத்தில் கோகிலாவைக் காப்பாற்ற முற்பட்ட அவரது கணவருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

சம்பத்தின் பின்னர் ஐந்து நாள்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கோகிலா உயிரிழந்துள்ளார். (வ–10)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள்
ஆசிரியை
திருமதி
**றோகிணியம்மா குமாரு**
அவர்களின் மறைவிற்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
**யா/ யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை**

(57049)(5.3.7)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
09
08
1987



இறப்பு
21
02
2015

யாழ் புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனியில் வசித்துவரும் எனது
அன்புச் சகோதரன் **ஸ்ரீஸ்கந்தராசாவின்**
அன்பு கனிஸ்ட புத்திரன் **ஸ்ரெபான்**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

91/5 காரைநகர் வீதி
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தந்தையின் சகோதரன்
கனகசபை தங்கவேலு
குடும்பம்

(57216)(5.3.7)


## கவிழ்ந்தது தோணி மீனவரால் உயிர் பிழைத்த பயணிகள்

மட்டக்களப்பு, பெப்.23

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை ஆற்றில்வெள்ளிக்கிழமைகாலை தோணி ஒன்று கவிழ்ந்ததில் அதில் பயணித்த ஒரு வயதுச் சிறுவன் உட்பட 10 பேர் மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெ[illegible]வித்தனர்.

பல்வேறு தேவைகள் கருதி நாசிவன்தீவு கிராமத்திலிருந்துவாழைச்சேனை நகருக்கு அவர்கள் தோணியில் பயணித்துள்ளனர். இதன்போது மேற்படிதோணி திடீரென்று கவிழ்ந்தநிலையில் ஆற்றில் மூழ்கிக் கொண்டிருந்த அவர்களின் கூச்சல் கே[illegible] வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகத்தில் நின்ற மீனவர்கள் தங்களது படகுகளில் சென்று ஆற்றில் மூழ்கியவர்களைக் காப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். காப்பாற்றப்பட்டுள்ளவர்களில் இரண்டு பெண்கள் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.ஏனையோர் விசாரணைகளின் பின்னர் வீடுகளுக்கு திரும்பியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (வ)

## கண்ணீர் அஞ்சலி



# செல்லையா இந்திரசித்து

(உரிமையாளர் - யாழ்ப்பாணம் லலிதா ஜூவல்லறி,
ராணி ஜூவல்லறி செட்டித்தெரு, கொழும்பு)

கடந்த (19.02.2015) வியாழக்கிழமை
லண்டனில் காலமானார்.

அன்பான நண்பனாய் அறிவுரைகள் வழங்கி
பண்பான பல உரைகள் தந்து
இன்பமாய் வாழ்ந்திட இதமாய் இடித்துரைத்து
மாண்புறு மாமனிதா எங்கு காண்போம் இனி!

*"தங்க நகை வியாபார உயர்வுக்காக எம்மை
வழிகாட்டிய உயர்ந்த உத்தமர்"*

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயரடையும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வினோ நகைப்பூங்கா
185, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்
சடாச்சரம் புவிச்சந்திரனும்,
குடும்பத்தினரும், ஊழியர்களும்.

(சி/19263)(4.3.7)

## வடமராட்சி வலய மாணவர்களுக்கு விபத்து முதலுதவிச் சிகிச்சை வகுப்பு

கரணவாய், பெப்.23

வடமராட்சிக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மாணவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட விபத்து முதலுதவிச் சிகிச்சை தடுப்பு முறைபற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் நான்கு தினங்கள் நடைபெறவுள்ளன.

இதில் பருத்தித்துறை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாட சாலை மாணவர்களுக்கு எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையிலும், கரவெட்டிக் கோட்ட மாணவர்களுக்கு மறுநாள் செவ்வாய்க்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியிலும் மருதங்கேணி கோட்டத்துக்கு உட்பட்ட மாணவர்களுக்கு 4 ஆம் திகதி புதன்கிழமை தாளையடி றோ.க. த.க. பாடசாலையிலும் இடம் பெறவுள்ளன.

மூன்று கோட்டங்களிலும் நடைபெற்ற கலந்துரையாடலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இறுதிநாள் நிகழ்வு 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி யிலும் இடம்பெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்குகளில் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் இருந்து தரம் 6–9 வரை 15 மாணவர்களினதும் தரம் 10 – 13 வரை 15 மாணவர்களின் பெயர் விவரங்களையும் – 500 – 1000 இற்கும் இடைப்பட்ட மாணவர்களைக்கொண்ட பாட சாலைகள் தரம் 6 – 9 வரை 10 மாணவர்களினதும் தரம் 10 – 13 வரை 10 மாணவர்களினதும் –500 இற்கு குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் தரம் 6–10 வரை தரம் 10 –13 வரை தலா 5 மாணவர்களினதும் பெயர்விவரங்களை வட மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் அறிவித்துள்ளார். (வ–108)

## காரைநகரில் கடை உடைத்து திருட்டு

### இருவர் கைது; பொருள்களும் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 23

காரைநகரில் நள்ளிரவில் கடை உடைத்துப் பொருள்கள் திருடிய இரண்டு பேரை விசாரணையின் மூலமாகக் கைது செய்துள்ளதோடு பொருள்களையும் மீட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளிக்கிழமை இரவு களபூமியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பலசரக்குக் கடை உடைத்து அங்கிருந்த பால்மா பைக்கற், பிஸ்கட் உள்ளிட்ட சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியுள்ளனர். அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடுசெய்யப்பட்டதைஅடுத்து விசா ரணை மேற்கொண்ட பொலிஸார் காரைநகர் மற்றும் நயினாதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரைக் கைது செய்ததோடு பொருள்களையும் மீட்டுள்ளதாகத் தெரிவித்தனர். (வ–4)

## மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி, பெப்.23

மிருசுவில் கெற்பேலி அ.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தமும், சிறப்பு விருந்தினராக தென் மராட்சி கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ.கதிர்காமநாதனும் கலந்து கொள்வர்.

(வ–9)


### பணிப்பெண் தேவை

இரண்டு பேர் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 25 வயதுக்கு உட்பட்ட பணிப்பெண் உடன் பணிக்குத் தேவை.
சம்பந்தப்பட்ட நபர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.
பணிப்பெண் குடும்பத்தில் ஒரு அங்கத்தவராகக் கருதப்படுவார்.
(57231)(4.3.7) தொடர்பு: 021 226 0277

### மணமகன்கள் தேவை

யாழ் இந்து கௌரவ 1975 ஆம் ஆண்டு உத்தரட்டாதி நட்சத்திர, அரச உயர் பதவி வகிக்கும் மணமகளுக்கும்/1985ஆம் ஆண்டு பூச நட்சத்திர, 2இல் செவ்வாய் உள்ள அபிவிருத்தி உத்தி யோகத்தராகக் கடமையாற்றும் சைவபோசன மண மகளுக்கும் ஏற்ற அரச உத்தியோகமுள்ள மணமகன்கள் தேவை.
தொடர்பு : 077 214 6513
(57229)(5.3.7)

### நாற்றுக்கள் விற்பனைக்கு

MI Green மிளகாய் மற்றும் திருநெல்வேலி ஊதா கத்தரி நாற்றுக்கள் அளவெட்டியில் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: K.மூர்த்தி 077 860 4493
(57227)(4.3.7)

### வாடகைக்கு

தளபாட வசதிகளுடன் மற்றும் குளியலறை சமையல் வசதிகளுடன் கூடிய இரண்டு அறைகள் யாழ் நகர மத்தியில், சிறாம்பியடி என்ற இடத்தில் வாடகைக்குண்டு. முற்பணம் எதிர்பார்க்கப்படுகின்றது. இளம் தம்பதிகள், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஏற்றது.
தொடர்பு : 077 516 0291
(57215)(5.3.7)

### வாடகைக்குண்டு

இருபாலை ஆசிரியர் கலாசாலைக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. ( அரசாங்க உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.)
தொடர்பு: 077 790 6224
(57218)(4.3.7)

### வீட்டுப்பணியாளர் (பெண்) தேவை

யாழ் நகரில் இரு குழந்தைகளைக் கொண்ட சிறிய குடும்பத்திற்கு குழந்தை பராமரிப்பு, சமையலில் சிறந்த ஒத்துழைப்பை வழங்க தங்கி நின்று பணியாற்றக்கூடிய பெண் பணியாளர் தேவை. ஆரோக்கியம் சுறுசுறுப்பு, நற் பழக்க வழக்கங்கள் கொண்டவராகவும், முன் அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் அவசியம். வயது 40 இற்கு கீழ்.
தங்குமிடம், உணவு, போதிய ஓய்வு வசதிகளுடன் சம்பளம் 18000.00 + வழங்கப்படும்.
தொடர்பு : 077 340 3027
(57038)(3.7.8)

### பணிப்பெண் தேவை

படுக்கையிலுள்ள வயோதிப தாய் ஒருவரை வீட்டில் தங்கி நின்று பராமரிக்க பணிப் பெண் தேவை.
தொடர்பு: 021 321 4535/077 899 9917
(57219)(4.3.7)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில்
நல்ல தண்ணீர் கிணற்றுடன்
3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு -
077 303 9644, 077 577 4915
(51881) (45.7)

### கணிதம் / விஞ்ஞானம் O/L

6ஆம் வகுப்பில் இருந்து G.C.E O/L வரை தமிழ்/ ஆங்கில மொழிகளில் ஆங்கில மொழி மூல விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் பிரபல கல்லூரிகளில் மிகச் சிறப்பாகக் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியர்.
பெற்றோர் மட்டும்.
தொடர்பு :077 242 3400, 077 887 1217, 077 517 8727
(57050)(5.3.7)

### பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாண நகரின் மத்தியில் அண்மையில் புதிதாக திறக்கப்படவிருக்கும் கடைத்தொகுதி ஒன்றுக்கு கீழ்வரும் பதவிநிலைகளுக்கு புடைவை விற்பனையில் அனுபவமான பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது சுயவிவரங்களை கீழ்வரும் முகவரிக்கு 28.02.2015 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

1. முகாமையாளர்
2. களஞ்சியக்காப்பாளர்
3. கணக்காளர்
4. காசாளர் (Pos seystem)
5. தரவு பதியுநர்
6. காவலாளர்கள்
7. சுத்திகரிப்பாளர்
8. விற்பனையாளர் (ஆண்கள்)
9. விற்பனையாளர் (பெண்கள்)

விண்ணப்பிக்கும் பதவி நிலையைக் குறிப்பிட்டு **இல.112, கே கே எஸ் வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
(57217)(3.7.8)

### வாகன விற்பனை

எமது சங்கத்தின் பெயரில் பதிவின் கீழ்க் காணும் விவரப்படியான வாகனங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.
இதற்கான தங்களின் கூறுவிலை விவரத்தை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் இதற்கென உரிய விண்ணப்பபடிவத்தை ரூபா 200/= செலுத்தி பெற்று தங்களின் கூறுவிலை விவரத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

| தொடர் இல. | எஞ்சின் அளவு | வாகனம்/ இலக்கம் | அதன் வகை | அளவு | உற்பத்தி வருடம் |
|---|---|---|---|---|---|
| 01 | 5785 CC | 43-0349 | HTR 11J இசுசு லொறி | 01 | 1991 |
| 02 | 5785 CC | 43-3461 | HTR 11J இசுசு லொறி | 01 | 1992 |
| 03 | 2000 CC | 24-5521 | பென்ஸ் லொறி | 01 | 1969 |
| 04 | 1100 CC | 27-2076 | ELF Van இசுசு | 01 | 1976 |
| 05 | 815 CC | NPFJ 7924 | லான்ட் மாஸ்ரர் | 01 | 2003 |

மேற்படி வாகனங்களை அலுவலக நாள்களில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவுதிகதி: 2015.03.04**

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
தலைவர், யாழ்.பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)
இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(சி/19256) (4.3.7)

### யாழ் வண் - கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் தேவஸ்தானம்

**மகாசபைக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்**

மேற்படி கூட்டம் ஆலய மணிமண்டபத்தில் 01.03.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு தலைவர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறும்.
மகாசபை உறுப்பினர்கள் உபயகாரர்கள் அனைவரையும் சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் செயலாளர்

### கிளி / கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

**பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் - 2015**

எதிர்வரும் (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலையின் பழைய மாணவர்களுக்கான வருடாந்த பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளது. இதில் பாடசாலை அபிவிருத்தித்திட்டம் தொடர்பான கலந்துரையாடலுடன் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது. எனவே அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்

தலைவர் / செயலாளர்
பழையமாணவர் சங்கம்
கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்
(51364)(3.7.8.)

### இலவச பற்சிகிச்சை முகாம்

லண்டனில் கடமை புரிந்த Dr.செல்வன் மேதர் B.D.S (Sri lanka) B.D.S (London) D.D.P.H.R.C.S. Diploma in Sedation பல் வைத்திய நிபுணர் அவர்களால் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் 24.02.2015 தொடக்கம் நான்கு வாரங்கள் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை இடம்பெறும். நோயாளர்கள் இங்கு வருகை தந்து இலவச பற்சிகிச்சையில் பயன் பெறலாம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.*
*வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

GREEN MEMORIAL HOSPITAL MANIPAY
T.P: 021 225 5157

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை நிர்வாகம்.
(56900)(3.4.7)

### புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ-து)

பதிவு இலக்கம் M/47 24.04.1987
பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது

**01. பதவி: கிளை முகாமையாளர்**
01. சம்பளம்: வேலை செய்யும் நாள் ஒன்றுக்கு ரூபா 400.00
02. காலம்: ஒரு வருட ஒப்பந்தம்

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:**
அ. புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் எல்லைப் பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
ஆ. 2015.02.25 ஆம் திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
இ. க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட இரண்டு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அத்துடன் வியாபாரத்துறையில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது
கூட்டுறவு தராதரம் சாதாரண பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் வியாபாரத்துறையில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
ஈ. சங்கத்தின் எல்லைப் பிரதேசத்தில் எந்த கிளை நிலையத்திலும் கடமையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
உ. சிறந்த ஒழுக்கத்துடனும் நல்ல ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.
ஊ. ரொக்கபிணை ஆதனப்பிணை செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

**02. பதவி: கோப் சிற்றி எழுதுநர்**
(அ)சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
மேலே குறிப்பிட்டுள்ள தகைமையுடன் கணினி அறிவு கட்டாயமானது (அனைத்து வேலைகளும் கணினியில் செய்யப்பட வேண்டும்) அத்துடன் ரொக்கப்பிணை ஆதனப்பிணை செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

**03. பதவி: கோப் சிற்றி விற்பனை உதவியாளர்**
(அ)சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
01. க.பொ.த. சாதாரணதரம் கற்று இருப்பது விரும்பத்தக்கது. அத்துடன் சிறந்த ஒழுக்கத்துடனும் நல்ல ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.
02. ரொக்கப்பிணை ஆதனப்பிணை செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுதிகதி: 05.03.2015

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**
சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர், மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம், புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர்,
புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம், புதுக்குடியிருப்பு.
(சி/19265)(4.3.7)

## மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்

யாழ்ப்பாணம், பெப்.23

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், சமூக மேம்பாடு கல்வி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஏழு லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கியுள்ளது.

பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள், அங்கத்தவர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள், முன் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரின் பிள்ளைகளுக்கு இந்த கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வருடம்தோறும் இவ்விதம் கல்வி உபகரணங்களை வழங்கி வரும் சமாசம், 2014 ஆம் ஆண்டிலும் நான்காயிரம் மாணவர்களுக்கு சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த உபகரணங்களை வழங்கியிருந்தது.

சமூக மேம்பாடு கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் இந்த கல்வி உபகரணங்கள் 2002 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன. (வ–17)

# யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம் நடத்தும் 2 ஆவது ஆய்வரங்கம் ஜூனில்

## 18 தலைப்புக்களில் ஆய்வறிக்கை சமர்ப்பிக்கக் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம் இரண்டாவதாக சர்வதேச ஆய்வரங்கை எதிர்வரும் ஜூன் மாதம் நடத்தவுள்ளது. இந்தச் சமகால முகாமைத்துவ ஆய்வரங்கானது 'அறிவு மற்றும் புத்தாக்கத்தினூடாக உற்பத்தித் திறனை மேம்படுத்தல்' என்ற தொனிப் பொருளை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்; வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

ஆய்வரங்கு தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"இந்த ஆய்வரங்கில் 18 தலைப்புக்களில் ஆய்வு அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன. கணக்கீடும் நிதியும், வங்கியியலும் காப்புறுதியும், வணிகப் பொருளியல், வணிகமும் சட்டச்சூழலும், கலாசாரமும் ஒழுக்க நெறிமுறைகளும், முயற்சியாண்மையும் செயற்பாட்டு முகாமைத்துவமும், நிறுவன நடத்தையும் மனிதவள முகாமைத்துவமும், தகவல் தொழில் நுட்பமும் தொடர்பாடலும், சுகாதார முகாமைத்துவம், சர்வதேச வியாபாரமும் நிதியும், அறிவு முகாமைத்துவம், சந்தைப்படுத்தலும் விநியோகச் சங்கிலி முகாமைத்துவமும், செயற்பாட்டு ஆய்வு, பிராந்திய மற்றும் சமூகத் திட்டமிடல், தந்திரோபாய முகாமைத்துவம், சுற்றுலாத்துறை விருந்தோம்பல் மற்றும் நிகழ்வு முகாமை, நகர முகாமைத்துவம், சூழல் முகாமைத்துவமும் சமூகப் பொறுப்பும் ஆகிய 18 தலைப்புக்களில் ஆய்வு அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

ஆய்வு அரங்குக்கான காலவரையறையில் ஆய்வுச் சுருக்கத்தை எதிர்வரும் மார்ச் 20 ஆம் திகதியும், ஆய்வுச் சுருக்கம் ஏற்பறிவிப்பு எதிர்வரும் மார்ச் 25 ஆம் திகதியும், ஆய்வுக் கட்டுரை கையளிப்பு ஏப்ரல் 4 ஆம் திகதியும், ஆய்வுக்கட்டுரை ஏற்பறிவிப்பு ஏப்ரல் 30 ஆம் திகதியும், ஆய்வரங்கு பதிவு மே 15 ஆம் திகதியும், ஆய்வரங்கு ஜூன் 11 ஆம், 12 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. ஆய்வரங்க ஒருங்கிணைப்பாளராக கலாநிதி பா.நிமலதாசன் செயற்படுவார்.

பல்கலைக்கழகத்தில் உள்ள ஒவ்வொரு பீடமும் தமக்கு ஏற்றமாதிரி ஆய்வரங்கைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். ஆய்வு நாட்டுக்கு ஏற்றதாக அமைய வேண்டும். பல்கலைக்கழக ஆசிரியர்கள் பல்கலையுடன் இணைந்து செயற்படுவது முக்கியமானது. விரிவுரையாளர்கள் தாமும் படித்து மற்றவர்களையும் படிப்பிக்க வேண்டும். எனவே அவர்கள் கட்டாயம் ஆய்வு செய்ய வேண்டும். பல்கலைக்கழகம் சமூகத்துக்கு அறிவியல் பங்களிப்பை வழங்க வேண்டும்"–என்றார்.

முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி அங்கு கருத்துத் தெரிவிக்கையில்;

"தொடர்ச்சியான கற்றல், கற்பித்தல், ஆய்வு முயற்சிகள், சமூக பங்களிப்பு ஆகிய 3 விதமான கடமைகள் இருப்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். எமது தயார்ப்படுத்தல் ஊடாக மாணவர்களுக்கு நல்ல கல்வியை வழங்க முடியும். ஆய்வு முயற்சிகளையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கடப்பாடு உள்ளது. அப்போது தான் நாம் மேலும் புதிய அறிவுகளை அதிகரித்துச் செல்ல முடியும். அந்த அறிவுப் புலன்களை மாணவர்களின் கற்பித்தலில் புகுத்த முடியும். கல்வி கற்பவர்கள் தமது கல்விச் செயற்பாடு ஊடாகவும் ஆய்வு முயற்சி ஊடாகவும் பெற்றுக் கொள்கின்ற ஆய்வை அல்லது புத்தாக்கங்களை சமூகத்துக்குப் பயன் படுத்தக்கூடிய வகையிலே பயன்படுத்த வேண்டும்.

அதனடிப்படையிலேயே மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் முதலாவது ஆய்வு மாநாடு நடத்தப்பட்டது. ஆய்வரங்க செயலாளராக சரவணபவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார். (வ–4)


"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்"

## மரண அறிவித்தல்

அளவெட்டியைச் சேர்ந்த

திருமதி இராசாத்தியம்மா அருளப்பு

(இளைப்பாறிய ஆசிரியை)



மண்ணில் 18.06.1922 விண்ணில் 21.02.2015

அவர்கள் 21.02.2015 சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற க.அருளப்பு (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், லலிதா(லண்டன்), அன்ரன் ஜெயபாலன் (பிரான்ஸ்), ஜெயரட்ணம் (லண்டன்), றோகினி சிங்கராயர் (FAO, கொழும்பு) ஆகியோரின் பாச மிகு தாயாரும், ரவினி (பிரான்ஸ்), ஷாமினி (லண்டன்), ஜீனோ சிங்கராயர் (கமநல அபிவிருத்தித் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், லூபி, றுக்ஷலா, ஜெசன், ஜெராட் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி மரியாதைக்காக இன்று 23.02.2015 திங்கட்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 7.00 மணிவரை வைக்கப்பட்டு நாளை (24.02.2015) செவ்வாய்க்கிழமை அன்னாரின் அளவெட்டி இல்லத்தில் (அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்திற்கு முன்பாக) வைக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணிக்கு அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதி ஆராதனையின் பின்னர் அளவெட்டி கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அழுக்கை, அளவெட்டி.
இல . 6/1, ஓபன் சைட்
தெகிவளை.

தகவல் : குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு : 0718049364,0718049363

## மரண அறிவித்தல்

திருமதி சரஸ்வதி திருநாவுகரசு



யாழ். மானிப்பாய், சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சரஸ்வதி திருநாவுகரசு 21.02.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னர்ர் காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், திருநாவுகரசின் பாசமிகு மனைவியும், பத்மலோஜினி, சிவபுரத்தரசு (U.K), வசந்தலோஜினி, சண்முகத்தரசு(ஜேர்மனி), மோகனத்தரசு ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான இராஜலக்சுமி, காசிப்பிள்ளை, யோகேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, பரமேஸ்வரி, கணேசநாதன், யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாவேந்தன், மாலதி(U.K) ஞானலிங்கம், ராகினி,(ஜேர்மனி), சாந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அகிலன்(மேன் முறையீட்டு மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்), மிதிலன்(U.K), பிரணவன்(U.K), சுஜன் (இராமநாதன் கல்லூரி), கஜன் சிரோமி (ஜேர்மனி), ஜான்(ஜேர்மனி), சர்மிகா, தர்மிகா, விஜிதா(சுதேச வைத்திய திணைக்களம்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அவிஷாலினின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
077 910 3318

தகவல்:
குடும்பத்தினர்.


# அகற்றப்பட்ட பேடன் பவல் சிலை மீள நிறுவப்பட்டது மட்டு நகரில்

மட்டக்களப்பு, பெப்.23

ஐந்து வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு நகரில் இருந்து அகற்றப்பட்ட சாரணர் தந்தை பேடன் பவலின் உருவச்சிலை மீண்டும் நகரில் உள்ள திருநீற்றுக்கேணி பூங்காவில் நிறுவப்பட்டது.



சாரணர் இயக்கத்தின் நிறுவுநர் பேடன் பவலின் 158 ஆவது பிறந்த தினத்தையொட்டி மட்டக்களப்பு மாவட்ட சாரணர் சங்கத்தால் இந்த சிலை மீண்டும் நிறுவப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட சாரணர் ஆணையாளர் பி.ஆனந்தராஜா தலைமையில் நேற்று ஆரம்பமான இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர சபையின் பொறியியலாளர் ரி.தேவதீபன் பிரதம அதிதியாகவும் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு வலய கல்விப்பணிப்பாளர் கே.பாஸ்கரன், மண்முனை வடக்கு கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.சுகுமாரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட சாரணர் சங்கத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவும் சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன் பவலின் 158 ஆவது பிறந்த தினத்தையும் ஒட்டி இந்த சிலை மீண்டும் திறந்து வைக்கப் பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட சாரணர் சங்கத்தின் ஊடக உதவி ஆணையாளர் ஆ.புட்கரன் தெரிவித்தார்.


இதன்போது அதிதிகளினால் சிலை திறந்து வைக்கப்பட்டதுடன் மட்டக்களப்பு மாவட்ட சாரணர் ஆணையாளர் பி.ஆனந்தராஜாவால் சிலைக்கு கழுத்துப்பட்டி அணிவிக்கப் பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் உள்ள சாரண மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டதுடன் திருநீற்றுக்கேணி பூங்காவில் இருந்து அரசினர் ஆசிரியர் கலாசாலை வரையில் ஊர்வலமும் நடை பெற்றது.

1998 ஆம் ஆண்டு முதன் முறையாக மட்டக்களப்பு நகரின் மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகில் நிறுவப்பட்ட இந்த சிலையானது, 2010ஆம் ஆண்டு இனந்தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்ட நிலையில் வீதி புனரமைப்பு காரணமாக அகற்றப்பட்டு மீண்டும் நிறுவப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## ஜனருக்ல வீடமைப்புத் திட்டத்தால் பாதிக்கப்பட்டோர் போராட்டம்

மொறட்டுவ, பெப். 23

பத்து வருடங்களுக்கு முன்னர் மொறட்டுவை ராவத்தாவத்தை பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஜனருக்ல என்ற வீடமைப்புத் திட்டத்தில் தாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருவதற்கு நீதி கோரி ராவத்தாவத்தை மக்கள் கடந்த வியாழக்கிழமை காலை முதல் உணவுதவிர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டனர்.




போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவிக்கையில்;

'ஜனருக்ல என்ற வீடமைப்புத் திட்டத்தால் நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றோம். தனியார் நிறுவனம் ஒன்றால்தான் இது ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இலவசமாக வீடு களைப் பெறலாம் என்றார்கள். பின்னர் ஐந்து ரூபா முதல் ஐம்பது குடும்பத்தினரிடம் இருந்தும் பத்தாயிரம் ரூபா பெற்று விட்டார்கள். ஆனால் வீடு மட்டும் கிடைக்கவில்லை. ஜனாதிபதியும் பிரதமரும் தலையிட்டு எமக்கான நியாயத்தை பெற்றுத் தர வேண்டும்' என்று தெரிவித்தனர்.

இதேவேளை– ஆரம்பகட்டமாக சில வீடுகளுக்கான அடித்தளமிடப்பட்ட நிலையில் அவற்றை வெளிநாடுகளுக்கு காண்பித்து, குறித்த நிறுவனம் நன்கொடைகளைப் பெற்று வருவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (வ–10)

## பேஸ்புக்குக்கு அமெரிக்காவில் மவுஸா?

உலகெங்கிலும் உள்ள இணையப் பாவனையாளர்களை வெகுவாகக் கவர்ந்த சமூகவலைத்தளமாக பேஸ்புக் காணப்படுகின்றது. இந்தத்தளத்தைப் பயன்படுத்துவதன் ஊடாக நன்மைகளும், தீமைகளும் ஒருங்கே காணப்படுகின்றன. எனினும் இதன் பாவனையானது உச்சக்கட்டத்தில் இருப்பதை மறுக்க முடியாது. அண்மையில் அமெரிக்காவில் இடம்பெற்ற ஆய்வு ஒன்றில் கிடைத்த தரவுகளின் அடிப்படை யில் பேஸ்புக்கின் உச்சக்கட்ட பாவனை மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது வயது வேறுபாடு இன்றி 58 சதவீதமான அமெரிக்கர்கள் பேஸ்புக்கைப் பயன்படுத்தி வருவதாகவும், இணையத்தளத்தைப் பயன்படுத்தும் இளம் பருவத்தினரில் 81 சதவீதமான வர்கள் பேஸ்புக்கைப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதேவேளை அமெரிக்க இளைஞர்களில் 23 சதவீதமானவர்கள் LinkedIn தளத்தையும், 22 சதவீதமானவர்கள் Pinterest தளத்தையும், 21 சதவீதமான வர்கள் Instagram தளத்தினையும், 19 சதவீதமானவர்கள் Twitter தளத்தையும் பயன்படுத்துவதாக அந்த ஆய்வில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.




## யூடியூப்பில் நேரடி ஒளிபரப்புச் செய்யக் கூடிய கமரா

HTC நிறுவனம் HTC RE எனும் புதிய வீடியோ கமரா ஒன்றை வடிவமைத்துள்ளது இந்தக் கமராவின் ஊடாக வீடியோ பதிவு செய்து கொண்டிருக்கும் போதே யூடியூப்பின் ஊடாக நேரடி ஒளிபரப்பு செய்யும் வசதி காணப்படுதல் விசேட அம்சமாகும். மேலும் இந்தக் கமராவை ஸ்மார்ட் கைபேசியுடன் இணைத்து பயன்படுத்தக்கூடியதாக இருப்பதுடன், இதற்காக விசேட அப்பிளிக்கேஷன் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அப்பிளிக்கேஷன் ஆனது இன்று முதல் பயனர்களின் பாவனைக்கு விடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

YouTube


### மாபெரும் வாகன ஏல விற்பனை

100இற்கும் மேற்பட்ட டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள்



- கை உழவு இயந்திரங்கள்
- உழவு இயந்திரங்கள்
- டிமோ பட்டா லொறிகள்
- மோட்டார் சைக்கிள்கள்
- ஓட்டோக்கள்

2015 பெப்ரவரி 25ஆம் திகதி ரயில்நிலைய வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா.


பரீட்சித்துப் பார்த்தல் 22,23 மற்றும் 24ஆம் திகதிகளில்

உடனடி அழைப்பு: 011 511 81 81

லங்கா ஒறிக்ஸ் Fினான்ஸ்


## தங்கத்தினால் வடிவமைக்கப்பட்ட IPHONE 6

அப்பிள் நிறுவனம் கடந்த வருடம் iPhone 6 மற்றும் iPhone 6 Plus ஆகிய இரு ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்திருந்தது. தற்போது இந்த இரு கைபேசிகளும் 24 கரட் தங்கத்தினால் வடிவமைக்கப்பட்டு சீனாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கைபேசிகளை சீனாவைச் சேர்ந்த Navjack எனும் நிறுவனமே வடிவமைத்துள்ளது. இவற்றில் அப்பிள் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்ட கைபேசிகளைப் போன்ற அம்சங்கள் தரப்பட்டுள்ளன. எனினும் இந்தக் கைபேசிகளின் விலை தொடர்பான தகவல்கள் வெளியிடப்படவில்லை.






## உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10.11.12.13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6. 7. 8. 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3. 4. 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு Aபின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.

1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்

1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10.11.12.13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6. 7. 8. 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3. 4. 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ........................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
........................................
கற்கும் பாடசாலை: ........................................
தரம்: ...............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ........................................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ........................................
ஆசிரியரின் பாடத்துறை: ........................................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி ........................................ அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

30 அகவையில் உதயன்

# வேகமாகப் பரவும் பன்றிக் காய்ச்சல்

## இந்தியாவில் 700 பேர் வரை காவு

டில்லி,பெப்.23



இந்தியாவில் வேகமாகப் பரவி வரும் பன்றிக் காய்ச்சல் நோயின் காரணமாக கடந்த டிசம்பர் மாத மத்தியிலிருந்து 700 பேர் வரை உயிரிழந்துள்ளனர். இந்நோயைக் கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கடந்த வாரத்திற்குப் பிறகு இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இரு மடங்காக உயர்ந்துள்ளது. தற்போது இந்நோயால் பதினோராயிரத்திற்கும் அதிகமானவர்கள் இந்தியாவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோய்க்கான மருந்துகளை விநியோகிப்பதற்கு அரசு தவறிவிட்டதாக விமர்சனங்கள் எழுந்திருந்தாலும், நிலைமை கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வைரஸ் காரணமாக ஏற்படும் இந்த நோய், 2010ஆம் ஆண்டில் இந்தியாவில் பரவியது. அதற்குப் பிறகு இப்போது மீண்டும் பரவியிருக்கிறது. 2009ஆம் ஆண்டில் முதன்முதலில் மெக்ஸிகோவில் இந்த நோய் தென்பட்டது. அதற்குப் பிறகு உலகம் முழுவதும் வேகமாகப் பரவியது. ராஜஸ்தான் மாநிலம் தான் இதில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டது. இந்தக் காய்ச்சலைத் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகள் நாடு முழுவதும் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் தீவிரப் பரப்புரையை மேற்கொண்டுவருகின்றனர். (14)

## மோடியின் பரிசுப் பொருள்கள் ரூபா 8.33 கோடிக்கு ஏலம்

சூரத்,பெப்.23

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சர்ச்சைக்குரிய சூட் உள்ளிட்ட பரிசுபொருள்கள் இந்திய ரூபாயில் 8.33 கோடிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

நரேந்திரமோடி கடந்த மே மாதம் பிரதமர் பதவி ஏற்ற காலத்தில் இருந்து இதுவரை தனக்கு கிடைத்த பரிசுப் பொருள்களையும், கடந்த மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்தியா வந்தபோது தான் அணிந்து இருந்த 'பந்த்கலா' எனும் உயர் ரகத்தை சேர்ந்த சூட்டையும் ஏலம் விட முடிவு செய்தார்.



இந்த ஏலம் மூலம் கிடைக்கின்ற நிதியை கங்கை நதியை தூய்மைப்படுத்தும் திட்டத்துக்கு பயன்படுத்த நரேந்திரமோடி முடிவு செய்தார். இதனையடுத்து பிரதமரின் சொந்த மாநிலமான குஜராத் மாநிலம் சூரத் நகரில் உள்ள அறிவியல் கூட அரங்கில் கடந்த 18 ஆம் திகதி தொடங்கி 3 நாள்களாக ஏலம் நடந்து வந்தது.

இதன் போது பிரதமரின் 'சூட்' உள்ளிட்ட பரிசுபொருள்கள் குறித்து ஆயிரத்து 852 பேர் ஏலம் கேட்டனர். இந்த ஏலத்தின் மூலமாக மொத்தம் இந்திய ரூபாயில் 8.33 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

ஏலத்தின் மூலம் கிடைத்துள்ள தொகை கங்கை நதி தூய்மைப்படுத்தும் திட்டத்திற்கு செலவிடப்படும். அதிக விலை போன பொருள்களில் மோடியின் 'சூட்' இந்திய ரூபாயில் 4.31கோடி பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதனை சூரத் வைர வியாபாரி லால்ஜிபடேல் வாங்கியுள்ளார். அடுத்ததாக நேபாளம் சென்றபோது மோடிக்கு வழங்கப்பட்ட பசுபதிநாதர் சிலை இந்திய ரூபாயில் 1 கோடிக்கும், அமெரிக்க சுற்றுப் பயணத்தின்போது நினைவுப் பரிசாக வழங்கப்பட்ட சுதந்திரதேவி சிலை இந்திய ரூபாயில் 1.11 கோடிக்கும் ஏலம் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## மோடியின் பேச்சுக்கு ஒபாமா வரவேற்பு



வாஷிங்டன், பெப்.23

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் மத சுதந்திரம் பற்றிப் பேசியுள்ளதால் அந்தக் கருத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்தியாவில் 3 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

தனது பயணத்தின் இறுதி நாளான 27 ஆம் திகதி அன்று டெல்லி ஸ்ரீகோட்டையில் பொதுமக்களிடையே பேசிய ஒபாமா, இந்தியா மதச்சார்பற்ற தன்மையில் இருந்து விலகாதவரை அதன் வெற்றி நீடிக்கும் என்று குறிப்பிட்டார்.

ஒபாமாவின் இந்த கருத்துக்கு பதில் அளிப்பதுபோல் கடந்த 11 ஆம் திகதி டெல்லியில் நடந்த கிறிஸ்தவ தேசிய விழாவில் பிரதமர் நரேந்திர மோடி மறைமுகமாக பதில் அளித்து பேசியுள்ளார்.

இந்தியாவில் மத நம்பிக்கைகள் போற்றப்படும். எனது அரசு அனைத்து மதங்களையும் சமத்துவமாக நடத்தும். மத வெறுப்பைத் தூண்டிவிடுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடும் எச்சரிக்கை விடுத்தார். இந்தியாவில் அனைவரும் ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பிரதமர் மோடியின் இந்தப் பேச்சுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வரவேற்புத் தெரிவித்துள்ளார். (14)

## இந்தியர்களின் ஆயுள்காலம் குறைகிறது



டெல்லி,பெப்.23

இந்தியாவில் அதிகளவான காற்று மாசடைதல் காரணமாக நாட்டின் மக்கள்தொகையில் அரைவாசிக்கும் அதிகமானோரின் சராசரி ஆயுள் காலம் மூன்று ஆண்டுகள் வரை குறைந்து போவதாகப் புதிதாக வெளியாகியுள்ள ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்க மற்றும் இந்தியப் பொருளாதார நிபுணர்களும் விஞ்ஞானிகளும் எரிசக்தித் துறை நிபுணர்களும் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

தனது எரிசக்தித் தேவைக்காக நிலக்கரி, பெற்றோலியம் போன்ற எரிபொருள்களை இந்தியா அதிகம் சார்ந்திருப்பதால் நகரங்களில் மட்டுமல்லாது, கிராமப் பகுதிகளிலும் காற்றில் மாசு அதிகளவு காணப்படுவதாக இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. அதேநேரம் இந்திய அரசு உள்நாட்டில் எடுக்கப்படும் நிலக்கரியின் அளவை அடுத்த ஐந்து ஆண்டுகளில் இரட்டிப்பாக்கத் திட்டமிட்டுள்ளது.

## பீகார் மாநிலத்தில் ரயில் மோதி 8 பேர் சாவு

பிகார்ஷரிப்,பெப்.23

பீகார் மாநிலம் நாளந்தா மாவட்டம் தேதார்வா கிராமத்தில் இருந்து 20 பேர் ஒரு வானில் பிகார்ஷரிப் பகுதியில் கோவிலில் நடந்த திருமணத்துக்குச் சென்றனர். திருமணம் முடிந்ததும் அவர்கள் வானில் தங்கள் கிராமத்துக்கு திரும்பிக்கொண்டு இருந்தனர்.

இதன் போது ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போது வந்த ரயில் வானை மோதி தூக்கி வீசியது. இதில் வானில் இருந்த 8 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

ஏனைய 12 பேரும் காயமடைந்தனர். அந்தப் பகுதி மக்கள் விரைந்து சென்று காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். (14)

## தெற்கு சூடானில் 89 சிறார்கள் கடத்தல்

தெற்கு–சூடானில் 13 வயதினர் அடங்கலாக பெருமளவிலான சிறார்கள் கடத்தப்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

12 வயதுக்கு மேற்பட்ட சிறார்களை வீடு வீடாகத் தேடிச் சென்ற ஆயுததாரிகள் குறைந்தது 89 பேரை பிடித்துச் சென்றுள்ளதாக யுனிசெப் தெரிவித்துள்ளது. சிலர் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த வேளையில் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு மாநிலமான மலாக்கலில் உள்ள இடைத்தங்கல் முகாம் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அரச படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான மோதல் காரணமாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களே இந்த முகாமில் உள்ளனர். மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்துத்தரப்பினர் மீதும் சிறார்ப் போராளிகளைப் பயன்படுத்துவதாக குற்றச்சாட்டு உள்ளது. (14)




இஸ்ரேலில் ஜெருசலத்தின் பழைய நகர், வழமைக்கு மாறாக வெண்பனியால் மூடப்பட்டிருக்கின்றது. கடுமையான பனிக்காற்றால் தெருக்களும், நகரின் வெளிப்புறமும் மூடப்பட்டுள்ள காட்சி.

# உலகின் உயரமான கட்டடத்தில் தீ விபத்து

டுபாய்,பெப்.23
டுபாயின் ஆயிரத்து 105 அடி உயர அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தில் நேற்று முன்தினம் பெரும் தீ விபத்து ஏற்பட்டதையடுத்து அங்கு வசிக்கும் மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

டுபாயின் மரினா நகரில் 79 மாடிகளை கொண்ட டார்ச் என்ற வானளாவிய அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. உலகின் மிக உயரமான கட்டடங்களில் ஒன்றான இந்த குடியிருப்பின் 50ஆவது மாடியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்து ஏற்பட்ட சில நொடிகளுக்குள் அதிகாலை 2 மணிக்கு தீ அலாரம் அடித்து பொதுமக்களை உஷார் படுத்தியது. உடனே குடியிருப்பில் வசிக்கும் மக்கள் தங்கள் குழந்தைகளுடன் அவசர அவசரமாக கட்டடத்தை விட்டு வெளியேறினர்.



மேலும் அந்தப் பகுதியில் இருந்த சாலைகள் அனைத்தும் மூடப்பட்டன.

12 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வண்டிகளில் வந்திறங்கிய தீயணைப்புவீரர்கள்போராடித்தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள், கட்டடத்தின் இரண்டு பக்கமும் தீ கொழுந்து விட்டு எரிந்ததாகவும், அப்போதுஅடித்தகாற்று தீயை அடுத்தடுத்த கட்டடங்களுக்கு இன்னும் வேகமாக பரவச் செய்ததாகவும் தெரிவித்தனர். அப்போது ஆயிரத்து 105 அடி உயரம் உள்ள அந்த பிரமாண்டமாக கட்டடத்திலிருந்து நெருப்பு மழை பொழிந்துள்ளது. 50ஆவது மாடியில்தொடங்கிய தீ 15 மாடிகளுக்குப் பரவியது.

இருப்பினும் தீ விபத்துக்கான காரணம் மற்றும் தீ விபத்தில் ஏற்பட்ட சேதம் குறித்தான தகவல்கள் எதுவும்உடனடியாகவெளியாகவில்லை. டுபாயிலுள்ள உலகின் மிக உயரமான குடியிருப்பு கட்டடங்களில் ஒன்றில்தீப்பற்றியதை அடுத்து, ஆயிரக்கணக்கானோர் அங்கிருந்துவெளியேற்றப்பட்டுள்ளனர். (14)





## உலகில் அதிக வயதுடையவர்

டோக்கியோ,பெப்.23
ஜப்பான் ஒசாக்கோ நகரில் வசிக்கம் 116 வயதுடைய முதியவர் உலகின் அதிக வயதுடைய முதியவர் எனச்சாதனை படைத்துள்ளார்.

ஜப்பானில் உள்ள ஒசாக்கோ நகரில் 1898ஆம் ஆண்டு பிறந்த ஒக்காவோ என்ற முதியவர் உலகின் மிகவும் முதியவராக கருதப்படுகிறார். 120 வயதுகள், 130 வயதுகளில் முதியவர்கள் உயிர் வாழ்கின்றனர் என்று செய்தி வெளியாகினாலும், உறுதியான ஆதாரங்கள் கிடைக்கப்பெறாததால், தற்போது இவரே உலகில் அதிக வயதில் வாழும் முதியவராகக் கருதப்படுகிறார்.

ஒக்காவோ, வியூவரை 116 வயது எனும் வயோதிபரை விட ஓரிரு தினங்கள் பெரியவராக இருப்பதால் அவருக்கு முதலிடம் கிடைத்துள்ளது.(14)

## மறதி சாதனையாகி விட்டது

சிட்னி,பெப்.23
ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த எட்வர்ட் நீட்ஸ், கேஸி டீன் இருவரும் உலகிலேயே மிகப் பழைமையான பர்கர் தங்களிடம் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.



இவர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு விருந்துக்காக பர்கர் வாங்கியிருக்கிறார்கள். அதில் ஒரு பர்கர் மீதமாகிவிட்டது.

அதை குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்தவர்களுக்கு ஆறு மாதம் வரை நினைவே வரவில்லை. அதற்குப் பிறகும் ஏனோ அதை எடுக்கவே இல்லை. இருபதாண்டுகளுக்குப் பிறகு பர்கரைப் பிரித்துப் பார்த்தவர்களுக்கு அதிர்ச்சி. ஏனென்றால் இப்பொழுதும் சாப்பிடக்கூடிய நிலையிலேயே நன்றாக இருந்தது பர்கர். உலகின் பழைமையான பர்கரைப்படம்பிடிப்பதற்காக தொலைக்காட்சிகளில் இருந்து வந்தனர். செங்கல் போல் உறைந்து இருந்த பர்கரை, சுவைத்துப் பார்க்க யாருக்கும் தைரியம் வரவில்லை. 'சீனியர் பர்கர்' என்ற பட்டம் இதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (14)

## 35 வயதுடையவருக்கு 1,535 வருடங்கள் சிறை

ஜோகனஸ்பர்க்,பெப்.23
தென் ஆபிரிக்காவில் 29 பெண்களை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய இளைஞருக்கு ஆயிரத்து 535 வருடங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவின் கவுடெங் மாகாணத்தில் உள்ள டெம்பிகா பகுதியைச் சேர்ந்த ஆல்பர்ட் மொராக் வயது–35 என்ற இளைஞர் கொலை, கொள்ளை, வழிப்பறி சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததுடன், மேலும் பல பெண்களைக் கடத்தி சென்று பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்துள்ளார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த குறித்தநபர் 2012 ஆம்ஆண்டுகைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்த அந்த இளைஞருக்கு எதிராக பொலிஸார் ஜோகனஸ்பர்க் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தனர். இது தொடர்பான வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கை விசாரணை செய்த நீதிவான் ரியான் ஸ்டிரைமோம் குற்றஞ்சாட்டப்பட்ட ஆல்பர்ட் மொராக்குக்கு ஆயிரத்து 535 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். இதில் பாலியல் வன்புணர்வு குற்றத்துக்காக 30 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (14)

## ஆஸ்திரேலியாவில் கடுமையான புயல்

சிட்னி,பெப்.23
ஆஸ்திரேலியாவில் கடுமையான இரு புயல்கள் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கியுள்ளன. மின்சாரம் துண்டிக்கப்பட்டு, பல வீடுகள் சேதமானதுடன், கரையோரப் பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

வெப்பமண்டல புயலான மார்சியா, குயின்ஸ்லாந்தின் கரையோரமாக யெப்பொன் மற்றும் செயிண்ட். லோரண்ஸ் ஆகிய இடங்களுக்கு இடையே கடந்த வெள்ளிக்கிழமை காலையில் தாக்கியுள்ளது. போதுமான முன்னெச்சரிக்கை இன்றி வந்த அந்தப் புயல், 5 தர சூறைக் காற்றாக இருந்தாலும் பின்னர் அது தரம் 2 ஆக தரமிறக்கப்பட்டது. இருந்தபோதிலும், கடுமையான அலைகள் மற்றும் மழை ஆகியவை மிரட்டியிருக்கின்றன. (14)

## துருப்புகளைத் தாமதமாக மீட்க அமெரிக்கா பரிசீலனை

காபூல்,பெப்.23
ஆப்கானிஸ்தானில், போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து, அங்கு சுமுக நிலைமை ஏற்பட்டதை உறுதி செய்யும் நோக்கில், அமெரிக்கா அதன் துருப்புகளைச் சற்று மெதுவாக மீட்டுக்கொள்வது குறித்து பரிசீலனை செய்துவருகிறது.

காபூலுக்குப் பயணம் மேற்கொண்ட அமெரிக்கத்தற்காப்புஅமைச்சர் ஆஷ் கார்ட்டர் இதனைத் தெரிவித்துள்ளார். அமெரிக்கா இந்த ஆண்டு, அதன்துருப்புகளில்பாதியை மீட்டுக்கொண்டு, ஐயாயிரம் துருப்பினரைமட்டுமேஆப்கானிஸ்தானில் வைத்திருப்பது தற்போதைய திட்டம்.

அடுத்தாண்டு இறுதிக்குள், அமெரிக்கத் தூதரகம் இருக்கும் நகரங்களில் உள்ள வழக்கமான நிலைக்குத் துருப்பினரின் எண்ணிக்கை கொண்டுவரப்படும்.

இருப்பினும் தற்போது, பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் குறித்து சிந்திக்கையில், அந்தத் திட்டத்தில் மாற்றம் ஏற்படலாம் என அமெரிக்கா கூறியுள்ளது. (14)




## இணைய தீவிரவாதத்தை தடுப்பதற்குக் கோரிக்கை

பரிஸ், பெப்.23
இணையம் வழியாக பரப்பப்படும் தீவிரவாத பரப்புரைகளை முறியடிக்க உதவ வேண்டும் என்று பேஸ்புக், கூகுள், டுவிட்டர் போன்ற நிறுவனங்களைப் பிரான்ஸ் கேட்டுக் கொண்டுள்ளது.

பிரான்ஸின் சான் பிரான்சிஸ்கோ மற்றும் சிலிக்கான் பள்ளத்தாக்கில் அந்நாட்டு உள்துறை அமைச்சர் பெர்னார்ட் கெஸீனுவேவுடன் சமூக வலைதளங்களின் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின்போது, இணையங்களின் வழியாக தீவிரவாதம் பரப்பப்படுவது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக பேஸ்புக், கூகுள், டுவிட்டர் உள்ளிட்ட நிறுவனங்கள் இணையத்தில் நுழைக்கப்படும் தீவிரவாதப் பரப்புரைகளைப் பற்றித் தகவல் அளிக்கும் தருணத்தில் அவற்றை நீக்கிட நிறுவனங்கள் உதவ வேண்டும் எனவும் பிரான்ஸ் கேட்டுள்ளது.

அண்மைக்காலமாகத் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு இணைய தளங்கள் வழியாக ஆள்சேர்ப்பு நடத்தப்படுவதாக சர்வதேச நாடுகளுக்கு எச்சரிக்கைவிடுக்கப்பட்டது. கடந்த ஜனவரி மாதத்தில் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடத்தப்பட்ட தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டதை அடுத்து பிரான்ஸில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டன. (14)

# இனிமேல் 'வாடகைத்தாய்' கிடையாது

### தாய்லாந்து அரசு அதிரடி சட்டம்

பட்டாயா,பெப்.23
தாய்லாந்தில் இனி வெளிநாட்டவர்களுக்கு வாடகைத்தாய்கள் மூலமாக குழந்தைகள் பெற்றுத் தரபோவதில்லை என்ற புதிய சட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவிலிருந்து வாடகைத்தாய் மூலம் குழந்தை பெற ஒரு பெண் தாய்லாந்து வந்துள்ளார்.

ஆஸ்திரேலியப் பெண்ணின் கருவைச் சுமந்த தாய்லாந்து பெண்ணுக்கு பிரசவம் நடக்கிறது. பிறந்த குழந்தை வளர்ச்சிக் குறைபாட்டால் பாதிக்கப்படுகிறது. குழந்தையை அந்த தாய்லாந்து பெண்ணிடமே விட்டுவிட்டு அந்தப் பெண் ஆஸ்திரேலியாவுக்கு ஓடிவிட்டார்.

இதைவிட, ஜப்பானிலிருந்து வந்த ஒரு சுற்றுலாப் பயணி தாய்லாந்து பெண்கள் மூலமாக அதிவேகமாக 16 குழந்தைகளுக்குத் தந்தையானார். இந்த சம்பவத்தை 'குழந்தைகள் தொழிற்சாலை' என்று தாய்லாந்து தினசரிப் பத்திரிகை ஒன்று கடுமையாக விமர்சித்தது. கடந்த வருடம் நடந்த இந்த இரண்டு சம்பவங்களும் வாடகைத்தாய் முறையால் தாய்லாந்து பெண்கள் அனுபவித்த கொடுமையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தன. இந்த நிலையில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வணிக ரீதியாக வாடகைத் தாய் முறை குற்றம் என்ற வரைவு சட்டத்தக்கு முதற்கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இது நேற்று தொடக்கம் சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வாடகைத்தாய்களுக்கு 25 வயதுக்கு மேல் இருக்க வேண்டும் என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் வெளிநாட்டிலிருந்து வந்து வாடகைத்தாய் மூலம் குழந்தை பெறுவதை முற்றிலுமாக தடை செய்கிறது. (14)

# ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ் பன்னிரு திருமுறை பற்றிய ஒரு நோக்கு

பகுதி 5

*அண்மையில் லண்டனில் இடம்பெற்ற இரண்டாவது உலகத் திருமுறை மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.*

மு. மாசிலாமணி

திருமுறைகளைப் போற்றும் ஆர்வம் மேலோங்கியிருந்த சோழர் ஆட்சிக் காலத்திலேயே, தமிழர் பண்பாடும் வளர்ச்சியின் உச்சத்தை எய்திற்று. சோழப் பேரரசின் இறுதிக் காலத்தில் திருமுறைகள் ஓதுவதும் குறைவடைய அந்தப் பேரரசும் பலமிழந்து வீழ்ச்சியடைந்த செய்திகளையும் கல்வெட்டுக்கள் பேசுகின்றன. ஆகவே தமிழர் வாழ்வு மீண்டும் சிறப்புற்றோங்குவது தமிழ் வேதமான திருமுறைகளைப் போற்றுவதிலேயே தங்கியுள்ளது. திருமுறை முற்றோதல், திருவாசகம் முற்றோதல் என அண்மைக் காலங்களில் ஆங்காங்கே இடம்பெற்று வந்தாலும் கோயில்களில் திருமுறைகளுக்குரிய சிறப்பிடம் வழங்கப்பட வேண்டும். திராவிட வேத பாராயணம் என்னும் போது மட்டும் சில கோயில்களில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என ஐந்து பாசுரங்களும் சில கோயில்களில் மேற்படி ஐந்துடன் திருப்புகழும் இன்னும் சில கோயில்களில் தேவாரமும் திருப்புராணம் ஓதும் முறை பின்பற்றப்படச் சில கோயில்களில் அவ்வாறு ஓதுவதற்குக் கூடச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை.

பாரதப் பண்பாட்டுக்குத் தமிழ் மொழி வழங்கிய அரும்பெருஞ் சொத்தான பன்னிரு திருமுறை என்ற பக்திப் பேரிலக்கியம், நீண்ட தமிழிலக்கியப் பெரும் பரப்பில் கணிசமான பகுதியாக விளங்குவதுடன் கல்வியிற் பெரியர் கம்பர், திருத்தக்கதேவர், பட்டினத்தார், அருணகிரிநாதர், குமரகுருபரர், இராமலிங்க வள்ளலார், பாரதி போன்ற பிற்காலப் பெரும் புலவர்கள் பலருக்கும் யாப்பு பொருள் இசை என்றின்னோரன்ன பல முறைகளில் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் அமைந்து தமிழ் மொழி செழுமையும் உயர்வும் எய்த உந்து சக்தியாக விளங்கியதுடன் தமிழரின் ஆன்மிக பண்பாட்டுயர்வுக்கும் வாழ்க்கை வளத்துக்கும் கட்டடம் ,சிற்பம், ஓவியம், இலக்கியம், இசை நடனம்,கூத்து போன்ற அனைத்து நுண்கலைகளின் எழுச்சிக்கும் கேந்திர நிலையங்களாக முக்கியத்துவம் பெற்று விளங்கிய கோயில்களில் திருமுறைகளுக்கு மிக முக்கிய இடம் வழங்கப்பட வேண்டும். கோயில்களில் மட்டுமன்றி இல்லங்கள், பாடசாலைகள், பொது மன்றங்கள் என எங்கும் புனிதமான திருமுறைகள் பூசித்து ஓதப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இன்றைய இளம் சிறார்களை நாட்டின் நாளைய நற்பிரஜைகளாக விளங்கும் வகையில் திருமுறைகளின் உயர் தனிச் சிறப்பை "அன்பே சிவம்", "ஒன்றே குலம் ஒருவனே தேவன்", "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி", "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பன போன்ற உலகை அரவணைக்கும் மனுக்குலத்தின் மேம்பாட்டுக்கான நற்சிந்தனைகளை அவர்களுக்கு விளங்கும் வகையில் தெளிவாக எடுத்துக் கூறித் திருமுறைகள் பற்றிய விழிப்புணர்வும் மிக்க ஈடுபாடும் கொள்ள வழி வகுக்கப்படவேண்டும்.



ஓதுவார் ஒருவரின் சிறப்பான பணியினால் அண்மைக் காலங்களில் லண்டன் மாநகரில் திருமுறைப் பண்ணிசைத் தமிழ் மிகச் சிறப்பாக ஒலிப்பதுடன் இளஞ்சிறார்களிடையில் அது பரவி வருவதும் ஆலயங்களிலும் பிற அரங்குகளிலும் அவர்கள் திருமுறைகளைப் பண்ணுடன் பாடுவதைக் கேட்கும் போது மனம் மகிழ்கின்றது. எனினும் இன்னும் சில ஓதுவார்களின் சேவையினைப் பெற்று இந்தச் செயற்பாடு விரிவாக்கப்படுவதன் மூலம் மேற்குலகில்

1.திருநெறிய தமிழிசைத் தமிழும் வளரும்.

2.இளஞ் சிறார்களும் தம் தாய் மொழியான தமிழைக் கற்கும் வாய்ப்பும் ஏற்படும்.

தெய்வத் திருமுறைகள் உரியவாறு போற்றப்பட்டு வளர்க்கப்பட்டால் தான் "ஆய்ந்தோதிய ஒண் தமிழ்" "சிவனடியைப் பரவிய செந் தமிழ்'' எனத்திருமுறைக ளைச் சைவத் தமிழ் உலகுக்கு அளித்த நாயன்மார்களால் விதந்து போற்றப்பட்ட தமிழும் அதற்குச் சொந்தக்காரர்களான தமிழரும் உலகில் உயர்ந்து சிறப்பெய்துவர். *(முற்றும்)*

லண்டன் மாநகரில் திருமுறைப் பண்ணிசைத் தமிழ் மிகச் சிறப்பாக ஒலிப்பதுடன் இளஞ் சிறார்களிடையில் அது பரவி வருவதும் ஆலயங்களிலும் பிற அரங்குகளிலும் அவர்கள் திருமுறைகளைப் பண்ணுடன் பாடுவதைக் கேட்கும் போது மனம் மகிழ்கின்றது.






## ஹார்பிக் உயர்தரக் கழிவறை தூய்மையாக்கல் தீர்வு அறிமுகம்

இலங்கையின் முதல் தர கழிவறை தூய்மையாக்கல் தயாரிப்பு நாமமான ஹார்பிக், தனது புதிய உயர்தர தீர்வுகளான ஹார்பிக் டோடல் பவுடர் மற்றும் ஹார்பிக் அல்ட்ரா பவர் போன்றன ரெக்கிட் பென்கீசர் நிறுவனத்தால் சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

கழிவறை தூய்மையாக்கலில் பொதுவாக காணப்படும் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாக இந்த இரு தெரிவுகளும் ஹார்பிக் தெரிவுகளில் இணைந்து வலுச்சேர்த்துள்ளன.

புத்தம் புதிய ஹார்பிக் அல்ட்ரா பவர் என்பது ஹார்பிக்கின் வலிமையான திரவ தயாரிப்பாகும். கழிவறையில் காணப்படும் கிருமிகள் மற்றும் கறைகளுக்கு எதிராக போராடக் கூடிய சிறந்த சேர்மானமாக இது அமைந்துள்ளது.

இதன் மூலமாக துர்நாற்றங்கள் அகற்றப்படுவதுடன், நீர்நிலைகளின் கீழ் பகுதிகளிலும் தூய்மையாக்கும் வகையில் அமைந்துள்ளது. இதில் அடங்கியுள்ள விசேட சேர்மானத்தின் காரணமாக, நீருடன் தொடுகையை ஏற்படுத்தியதும் நிறத்தை மாற்றும் வகையில் அமைந்துள்ளது.

கடுமையான கறைகளை அகற்றுவதுடன், 99.9 சத வீதமான கிருமிகளையும் கொல்கின்றது. இதில் காணப்படும் உயர்தர தூய்மையாக்கல் செயற்பாட்டின் மூலமாக கடுமையான கறைகள் இலகுவாக அகற்றப்படுகின்றன.

புதிய ஹார்பிக் டோடல் பவுடர் என்பது, குளியலறை நிபுணத்துவம் வாய்ந்த தயாரிப்பாக அமைந்துள்ளது. பல் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையிலமைந்த, குளியலறையில் காணப்படும் கடுமையான கறைகள் மற்றும் அபாயகரமான கிருமிகளை இலகுவாக அகற்றும் ஆற்றல் படைத்த தூய்மையாக்கல் பவுடர் வகையாகும்.

இதில் காணப்படும் நீல நிற பதார்த்தங்களின் மூலம் மறைந்திருக்கும் கிருமிகளை அகற்றுவதற்கு அவசியமான அதிகளவு நுரையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு, குளியலறை நிலப் பகுதியிலும், பேசின்கள் மற்றும் டைல்கள் மற்றும் ஹார்பிக் டோடல் பவுடரை தூவி நன்றாக கழுவிக் கொள்ள வேண்டும். நன்றாக பிரஷ் செய்து, தூய்மையான நீரை கொண்டு கழுவுவதன் மூலம் பளபளப்பான குளியலறையை பெற்றுக் கொள்ளலாம்.

ஹார்பிக் பவுடர் என்பது, தயாரிப்பின் வினைத்திறன் மூலமாக, நுகர்வோரின் தன்னிறைவை ஊக்குவிக்கும் வகையில் அமைந்திருக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம் என சிரேஷ்ட வர்த்தக முகாமையாளரான ருச்சிரா மனி கருத்து தெரிவித்தார்.

கழிவறை தூய்மையாக்கலில் ஹார்பிக் என்பது காலாகாலமாக உயர்தரத்தை பேணி, தன்னை அர்ப்பணித்துள்ளது.

டோடல் பவுடர் மற்றும் அல்ட்ரா பவர் ஆகியவற்றின் அறிமுகங்களுடன், கழிவறை தூய்மையாக்கலில் நிபுணத்துவம் பெற்ற நாமமாக உயர்ந்துள்ளது. சிலிம், நீல்சன் மக்கள் விருதுகளுக்கமைவாக வீட்டின் பராமரிப்பு நாமமாக தெரிவு செய்யப்பட்டதை மேலும் உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளது என ரெக்கிட் பென்கீசர் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைமை அதிகாரி சயிட் தன்சிம் ரெஸ்வான் தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் காணப்படும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த கழிவறை தூய்மையை பெற்றுக் கொடுக்கும் வகையில் ஹார்பிக் செயலாற்றி வருகிறது. கழிவறை தூய்மையாக்கலுக்கு புகழ்பெற்ற நாமமான ஹார்பிக்,

சனீபாரக்ஷக சேவாவ எனும் தனது சமூக பொறுப்புணர்வு செயற்றிட்டத்தின் மூலமாக இலங்கையை பாதுகாப்பான மற்றும் தூய்மையான நாடாக கட்டியெழுப்பும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகிறது.

சமய வைபவங்களின் போது நடமாடும் கழிவறை வசதிகள் ஹார்பிக் மூலமாக ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. ஆறு அங்கத்தவர்களை கொண்ட ஹார்பிக் நீல அணி, வீடுகளுக்கு பயணம் செய்து, கழிவறை தூய்மைக்காக ஹார்பிக் பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன என ரெக்கிட் பென்கீசர் நிறுவனத்தின் வணிக பணிப்பாளர் சின்கிளெயார் குரூஸ் தெரிவித்துள்ளார். (த)

# வாசகர் திருமுகம்



## விலைகள் குறைக்கப்படவில்லை

புதிய அரசின் இடைக்கால வரவு–செலவுத்திட்டத்தில் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டதால் மகிழ்ச்சியடைந்த நுகர்வோர்களில் நானும் ஒருவன்.
பொருள்களின் விலைக் குறைப்பைத் தொடர்ந்து உணவுப் பண்டங்களின் விலைகளும் குறையுமெனக் கூறினார்கள். ஆனால் பாண் மட்டுமே ஆறு ரூபாவால் குறைந்துள்ளது. ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருள்கள் முன்னைய விலைகளிலேயே விற்கப்படுகின்றன.
கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் யாழ்.பிரதான பஸ் நிலையத்துக்கு எதிரில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். வழக்கம் போன்று ஒரு உழுந்து வடை, பால் தேநீர் ஆகியவற்றை உண்டு, அருந்திய பின்னர் 50 ரூபா தாள் ஒன்றைக் காசாளரிடம் கொடுத்தேன். அவர் வடைக்கும் பால் தேநீருக்கும் 60 ரூபா எனவும் இன்னும் 10 ரூபா தருமாறும் கேட்டார். பதில் எதுவும் கூறாது 10 ரூபாவைக் கொடுத்து விட்டுச் சென்றேன்.
இதில் வேடிக்கை என்னவென்றால் வடையின் அளவு முன்னர் இருந்ததைவிடச் சிறியதாக இருந்ததுதான்.
சிலவேளை விலையைக் குறைப்பதற்குப் பதிலாக அளவைக் குறைந்துவிட்டார்கள் போலும். எல்லாமே கலிகாலம்


*ம.பிரான்சிஸ்,*
*கொழும்புத்துறை.*

## மணலை ஏற்றுவதற்கு லொறிகளுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும்

மணல் ஏற்றுவதற்கு லொறிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டதால், ஏராளமான லொறி உரிமையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் மணலை ஏற்றி வந்து மக்களுக்கு விநியோகிப்பதற்கான அனுமதி, லொறி உரிமையாளர்கள் சங்கத்துக்கு வழங்கப்பட்டது. இதனால் லொறி உரிமையாளர்கள் ஓரளவு வருமானம் பெற்று வந்தனர். ஆனால் எந்தக் காரணமும் இல்லாமல் மகேஸ்வரி நிதியம் என்ற அமைப்பு மணல் விநியோகத்தில் ஏகபோக உரிமைபெற்றுக் கொண்ட பின்னர், லொறி உரிமையாளர்களின் வாழ்க்கை அஸ்தமித்து விட்டது.
மகேஸ்வரி நிதியம் ஆரம்பிக்கப்பட்ட போது அவர்களிடம் ஒரு லொறி கூட இல்லை. இன்று அவர்களிடம் 18 இற்கும் அதிகமான பெரிய வாகனங்கள் உள்ளன. இவை மணலை ஏற்றி இறக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன. இதனால்தொழிலை இழந்த லொறி உரிமையாளர்கள் அரைவாசிக்கும் மேற்பட்ட தமது லொறிகளை இரும்பு விலைக்கு விற்று விட்டனர். தற்போது வீட்டுத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மணலின் தேவை அதிகரித்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டு மணலை ஏற்றி இறக்கும் வேலைகளை லொறி உரிமையாளர்கள் சங்கத்துக்கு வழங்கினால், எஞ்சியுள்ள லொறிகளையாவது காப்பாற்ற முடியும். ஒரு வீட்டுத்திட்டத்துக்கு சுமார் 10 லொறி லோட் மணல் தேவை. இந்த வேலையை எம்மிடம் ஒப்படைத்தால் சுமார் 43 ஆயிரம் ரூபாவை வீட்டுத்திட்டப் பயனாளிகள் சேமிக்க முடியும். தற்போது இந்த மேலதிகப் பணத்தை மகேஸ்வரி நிதியத்தினரே விழுங்கி வருகின்றனர். மேலும் மணல் உட்பட ஒவ்வொரு பொருளுக்கும் அதிக விலைகொடுப்பதால் வீட்டுத் திட்டப் பயனாளிகள் கடன்காரர்களாக மாறியுள்ளனர்.
மேலும் குடத்தனையில் உள்ள உழவு இயந்திர உரிமையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
எனவே அனைவரதும் நன்மையைக் கருத்தில் கொண்டு மணலை ஏற்றுவ்தற்கான அனுமதியை லொறி உரிமையாளர் சங்கத்துக்கு வழங்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*ம.கிருபாகரன், அளவெட்டி*

### கேலிச் சித்திரம்




*நன்றி: மவ்பிம*

## பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்

பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்ற பழமொழிக்கு ஏற்ப மஹிந்தவின் காலத்துத் திருடர்கள் பலர் இப்போது மைத்திரியின் காலத்தில் அகப்படத் தொடங்கியிருக்கின்றனர்.
கொலை, கொள்ளை, வன்புணர்வு, பணமோசடி போன்ற மோசமான குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய பலர், அண்மைக் காலமாக நாட்டில் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் காலத்தில் அசைக்கமுடியாத ராஜாக்களாக இருந்த, இவர்கள் இப்பொழுது மைத்திரி அரசினால் கலைத்துப் பிடிக்கப்பட்டு, அடைக்கப்படுகிறார்கள்.
இந்த வகையில் வடக்கு, கிழக்கில் காணாமற் போனோர் விடயம் தொடர்பிலும் இப்போது சிலர், அகப்படப்போகிறார்கள்.
கடற்படையைச் சேர்ந்த சிலரால் தமிழர்கள் கடத்தப்பட்டுக் கொலை. செய்யப்பட்டுள்ளனரா என்பது தொடர்பில் விசாரணை ஒன்றை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்திருக்கிறார்கள்.
2008ஆம் ஆண்டுக்கும் 2011ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கடத்தப்பட்ட 28 தமிழ் இளைஞர்கள் தொடர்பில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக தகவல்கள் கசிந்துள்ளன. இவர்கள் அனைவரும் கடத்தப்பட்டு, அவர்களின் உறவினர்களிடமிருந்து பெருந்தொகையான கப்பம் பெறப்பட்ட பின்னர், கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று அச்சம் வெளியிடப்பட்டிருக்கிறது.
இந்தச் சம்பவங்களின் பின்னணியில் கடற்படையைச் சேர்ந்த சிலருக்கு நெருங்கிய தொடர்பு உள்ளதாகச் சந்தேகங்கள் எழுந்துள்ளன. இதன் அடிப்படையில், இப்போது இது தொடர்பான தீவிர விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் ஆரம்பித்திருக்கிறார்கள்.
முதற்கட்ட விசாரணைக்காக 3 அதிகாரிகள் உட்பட 12 கடற்படையினர் பொலிஸாரின் விசாரணை வளையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர் என்று பொஸில் தகவல்கள் தெரிவிக்கின்றன.
பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடு ஒன்றை அடுத்து கடற்படை அதிகாரி ஒருவர் விசாரிக்கப்பட்டுள்ளார். இதன்போது, அவரது அறையில் இருந்து தமிழ் இளைஞர்கள் ஐவரின் கடவுச் சீட்டுக்களும் அடையாள அட்டைகளும் பொலிஸாரின் கையில் சிக்கியுள்ளன என்று கூறப்படுகிறது.
இந்த 28 தமிழ் இளைஞர்களும் கொழும்பின் பல பகுதிகளிலேயே கடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.
2008ஆம் ஆண்டுக்கும் 2011ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கொழும்பில் கொட்டாஞ்சேனை, புளுமெண்டால் வீதி, கல்கிசை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய பகுதிகளில் வைத்தே கடத்தப்பட்டுள்ளார்கள். கல்கிசையில் கடத்தப்பட்ட 5 இளைஞர்களும் கொட்டாஞ்சேனையில் கடத்தப்பட்ட தந்தையும் மகனும் இவர்களுள் அடங்குகின்றனர். இந்த இளைஞர்களில் சிலர், கொழும்பில் வேலை பார்த்தவர்கள் என்றும், மேலும் சிலர் வெளிநாடு செல்வதற்குத் தங்கியிருந்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது. கடத்தப்பட்ட இந்தத் தமிழ் இளைஞர்கள் திருகோணமலை கடற்படை முகாமிலும், கொழும்பில் உள்ள சைத்திய வீதி கடற்படை முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் கொலை செய்யப்பட் டுள்ளனர் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.
விடுதலைப்புலிகளுடனான போர் உக்கிரமடைந்திருந்த காலத்தில், கொழும்பிலும் வடக்கு–கிழக்குப் பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையான தமிழ் இளைஞர்கள் காணாமற் போனார்கள்– கடத்தப்பட்டார்கள்–சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். விடுதலைப் புலிகளால் கொழும்பில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள்மீது, தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட காலப் பகுதியிலும் தமிழ் இளைஞர்கள் பலர், கடத்தப்பட்டார்கள்–காணாமற் போனார்கள். கொழும்பின் பல பகுதிகளிலும் விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்களுக்கே இந்தக்கதி ஏற்பட்டது.
வடக்கு–கிழக்கிலும் சரி, கொழும்பிலும் சரி இவ்வாறு இளைஞர்கள் கடத்தப்பட்ட–காணாமற்போன– சுட்டுக்கொல்லப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் இனம்தெரியாதோரே அவற்றைச் செய்ததாக அப்போது தெரிவிக்கப்பட்டிருந்தது. இவற்றின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பதை அரசும் கண்டுபிடிக்க முயலவில்லை. முற்றுமுழுதாக அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் நுழைந்து இவ்வாறு துணிச்சலான முறையில் செயற்படுவதென்பது இலகுவானதொன்றல்ல.
முழத்துக்கு முழம் படை முகாம்கள் நிறுவப்பட்டிருந்த அந்தக் காலப்பகுதியில்–ஆண், பெண் வேறுபாடு இல்லாமல் அனைவருமே துகிலுரிந்து சோதனையிடப்பட்ட அந்த வேளையில், இவ்வாறு துணிச்சலுடன் இளைஞரொருவரைக் கடத்துவதோ அல்லது சுட்டுக் கொலை செய்வதோ அவ்வளவு லேசானதல்ல. அரச ஆசீர்வாதமின்றி–ஆயுதப் படைகளின் அரவணைப்பு இன்றி, இதனை ஒரு போதும் செய்யமுடியாது.
இந்நிலையில் இந்தக் கடத்தல்கள்–காணாமற்போதல்கள்– கொலைகள் என்பவற்றின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரிந்தபோதும் அப்போது அவர்களின் வாய்கள் ஆயுத முனைகளுக்குள் அடக்கப்பட்டிருந்தன. அந்த அராஜக ஆட்சி கவிழ்க்கப்பட்டு, இப்போது ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ள நிலையில் இந்த சட்டவிரோத செயற்பாடுகளின் பின்னணியில் இருந்தவர்கள் தொடர்பான தகவல்கள் கசியத்தொடங்கியுள்ளன. இதுபற்றியே குற்றப்புலனாய்வுப் பொலிஸார் இப்போது விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.
பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களின் கடத்தல்–கொலை–காணாமற்போதல் என்பவற்றுடன் தொடர்புடையவர்களின் விவரங்கள் இதன்போது வெளிச்சத்துக்கு வருமா என்ற எதிர்பார்ப்பு இப்போது பல மட்டங்களிலும் எழுந்திருக்கிறது. அகப்படுவார்களா அந்தக் கயவர்கள்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விரக்திதரும் விசாரணைகளும் நம்பகமற்ற செயற்பாடுகளும்

குற்றவாளிகளே நீதிபதிகளாக இருப்பதா என்றவாறு நேற்று முன்தினம் காணாமற் போனவர்களின் உறவினர்கள் யாழ். நகரில் நடத்தியிருந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஒரு கோஷம் எழுப்பப்பட்டிருந்தது.

நடந்து முடிந்த போரின்போது இழைக்கப்பட்ட குற்றங்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசே பொறுப்பாக இருந்துள்ளது என்பது பொதுவான கருத்து. ஐ.நாவின் கூற்றுப்படி போரின்போது 40 ஆயிரம்பேர் வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டமை மற்றும் அதனோடு ஒத்த குற்றச் சாட்டுக்கள் நிகழ்ந்துள்ளமைக்கு, முப்படைகளைச் சேர்ந்தவர்களும் அவற்றின் தளபதிகளுமே அடிப்படைக் காரணர்களாகக் கருதப்பட்டாலும் அவைகளுக்குப் பொறுப்பாக இருந்துள்ளவர்கள் அப்போதைய அரசுத் தலைவரும் பாதுகாப்புத்துறை உயர்மட்ட அதிகாரிகளுமே என்பது சொல்லித் தெரியவேண்டியதன்று - மிகவும் வெட்டவெளிச்சம்

இவைகள் குறித்து, சர்வதேச விசாரணை எதுவும் நடைபெறுவதற்கு அப்போதைய அரசு இடம்தராது இருந்ததுடன், ஐ.நா.மனித உரிமைகள்சபை நியமித்த நிபுணர்கள் நாட்டுக்குள் வந்து விசாரணைகளை நடத்தவும் விடாப்பிடியாக மறுத்துவிட்டது. பின்னர் சர்வதேச அழுத்தங்களின் காரணமாகவும் ஐ.நா. விசாரணையைத் தவிர்த்துவிடும் யோசனையில் கபடத்தனமாகவும், காணாமற்போனோர் பற்றிய ஆணைக்குழுவை நியமித்தது.

போரின் இறுதிக்கட்டத்தில் உயிரிழப்புக்களுக்குக் காரணமாயிருந்துள்ள சூழ்நிலைகளைக் கண்டறிவதற்கான அந்தக் குழுவின் அதிகார வரம்பு பின்னர் விஸ்தரிக்கப்பட்டது. பிரஸ்தாப குழுவுக்கு ஆலோசனைகள் வழங்கவென, கோடிக்கணக்கான ரூபாய் பணச் செலவில் வெளிநாட்டு நிபுணர்களையும் நியமித்துக்கொண்டது. இவ்வளவும் தனக்குச் சார்பான ஒரு தீர்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான அரசின் நோக்கமாக இருந்துள்ளது என்பது வெள்ளிடைமலை. அதனாலேயே, போரினால் பாதிக்கப்பட்ட மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் அவ்வாறான ஒரு விசாரணையில் கிஞ்சித்தும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

ஐ.நா.விசாரணை இலங்கை அரசின் ஆதரவின்றியே நடந்துள்ள நிலையில், இழப்புக்களுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளான தமிழ் மக்கள் மன அமைதிபெறும் வகையில், அதன் அறிக்கையாகுதல் அமையும் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அவர்களின் நெஞ்சங்களில் புதிய அரசின் நடவடிக்கைகளும், அதற்குச் சாதகமாக இருந்துவரும் நாடுகளின் செயற்பாடுகளும் கொதிக்கும் நீரை ஊற்றுவது போல் ஆகிவிட்டது. விசாரணை அறிக்கை தாக்கல் செய்வது பின்போடப்பட்டுள்ளது. அந்த விசாரணைக்கு இணையாக உள்ளக விசாரணை ஒன்றை நடத்தப்பபோவதாகப் புதிய அரசு கூறிக்கொள்கிறது.

எதுவானாலும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணை அறிக்கை மார்ச்சில் இல்லாவிட்டாலும் செப்ரெம்பரில் கட்டாயம் வெளியிடப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் வடிவத்தை அல்லது உள்அடக்கத்தை இடைக்காலத்தில் மாற்றி அமைப்பதற்கான முயற்சிகள் ஏதும் நடக்காமல் இருக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

இத்தனைக்கும் இலங்கையில் புதிய அரசு நியமிக்கவிருக்கும் விசாரணைக்குழு எப்படி அமையும் என்பது புலனாகாமல் இருக்கிறது. முன்னைய அரசு மேற்கொண்ட வடிவிலேயே அதுவும் அமைந்துவிடுமானால், 'அது இலங்கைத் தமிழர்களை மட்டுமல்ல உலக மனச்சாட்சிக்கே துரோகம் விளைவித்ததாக இருக்கும். அது திருடர்களே திருட்டை ஒழிக்க மகாநாடு நடத்தியதற்கு ஏற்பாகிவிடும். அவ்வாறு நடக்கலாகாது என்பதற்காகவே குற்றவாளிகளே நீதிபதிகளா என்ற கோஷத்தை மக்கள் ஏற்கனவே எழுப்பியிருந்தனர். உண்மையான நீதி கிடைக்குமா என்ற ஏக்கமே வடக்கு, கிழக்குக்கு வாழ் தமிழ் மக்களுக்கு மிஞ்சும் நிலை நெருங்குகிறது.



# அசைக்க முடியாத நிலையில் ஜெயலலிதா தலைமையிலான கட்சி

■ சேரலாதன்

தமிழ்நாட்டின் ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் இடம்பெற்றஇடைத்தேர்தலில்ஆளும் அ.தி.மு.க. வேட்பாளர் தமக்கு அடுத்தபடியாக வந்த தி.மு.க. வேட்பாளரை, சுமார் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். அ.தி.மு.க.வேட்பாளரின்இந்தவெற்றி எதிர்பார்க்கப்பட்டதுதான்என்றாலும் வாக்கு வித்தியாசத்தில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய அதிகரிப்பு வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தத் தொகுதியில் போட்டியிட்ட அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான ஜெயலலிதாவை விட அதிக வாக்குகள் பெற்று அ.தி.மு.க. வேட்பாளர் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளமை அந்தக் கட்சியினரையே ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது.

அ.தி.மு.கவைப் பொறுத்தவரையில் அங்கு எல்லாமே ஜெயலலிதாதான் என்றதொரு நிலையே இன்றுவரை காணப்படுகின்றது. அந்த அளவுக்கு சகலஅதிகாரங்களையும்அவர் தம் வசம் குவித்து வைத்திருக்கின்றார். அவர் இடும் கட்டளையை மீறிச் செயற்படுவதற்கு எவரும் துணிவதில்லை. துணிபவர்கள் தலையெடுக்க முடிவதில்லை.சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு பிணையில் வெளியேறி இருக்கும் ஜெயலலிதா, ஸ்ரீரங்கம் இடைத்தேர்தல் பரப்புரைகளில் நேரடியாக ஈடுபடாது ஒதுங்கியிருந்தார். ஆனால் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி தமது வாசஸ்தலத்தில் இருந்தவாறே பரப்புரையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

மேலும் கூட்டணி அமைக்காது, கட்சிகள் தனித்துப் போட்டியிட்டதால் கட்சிகளின் பலத்தைச் சுயபரிசோதனை செய்து கொள்வதற்கான காரணமாகவும் ஸ்ரீரங்கம் இடைத் தேர்தல் பார்க்கப்பட்டது.

தொடர் தேர்தல் தோல்விகளால் துவண்ட நிலையில் காணப்படும் தி.மு.க. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்தது. ஜெயலலிதாவுக்கு நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டதும், முதல்வர் பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டதும் தமக்கு வாய்ப்பாக அமைந்துவிடுமென அந்தக் கட்சி நினைத்ததில் தவறில்லை. ஆனால் நிலைமை அவர்கள் எதிர்பார்த்தவாறு அமையவில்லை என்பதுதான் பரிதாபம். தி.மு.கவைப் பொறுத்தளவில் அந்தக் கட்சியின் தலைவர் மு.கருணாநிதியின் உள்வீட்டு மோதல்கள், அலைக்கற்றை ஒதுக்கீட்டில் இடம்பெற்ற ஊழல் நடவடிக்கை, தள்ளாத தளர்ந்த வயதிலும் கட்சித் தலைமையைக் கைமாற்ற முடியாத அவலம் என்பன பாதகமான அம்சங்களாகக் காணப்படுகின்றன. இந்த நிலையில் இந்தக் கட்சியைச் சேர்ந்த சிலர் பா.ஜ.கவில் இணைந்து வருகின்றமையும் புதிய தலையிடியாக உருவெடுத்துள்ளது.

மோடியின் வருகையின் பின்னர் தமிழ்நாட்டிலும் பா.ஜ.கவை நிலை நிறுத்துவதற்கான முயற்சிகள் முழு அளவில் இடம்பெற்று வருகின்றன. அந்தக் கட்சியின் மாநிலத் தலைவரான தமிழிசை சௌந்தரராஜன் பா.ஜ.கவை வளர்த்தெடுப்பதில்கடுமையாகஉழைத்து வருவதையும் காணமுடிகின்றது. அண்மையில் அந்தக் கட்சியின் தேசியத் தலைவரும், பிரதமர் மோடிக்கு மிகவும் வேண்டப்பட்டவருமாகிய அமித்ஷா தமிழ்நாட்டுக்கு வந்தபோது கட்சியை வளர்ப்பதற்கான ஆரவாரமான செயற்பாடுகள் இடம்பெற்றன.

அப்போது தி.மு.கவின் முக்கியஸ்தரான முன்னாள் மத்திய இணையமைச்சர் நெப்போலியன் தலைமையில் தி.மு.கவைச் சேர்ந்த சிலர் பா.ஜ.கவில் இணைந்தனர்.

தற்போது இந்த இடைத்தேர்தலில் பா.ஜ.க. சுமார் 6 ஆயிரம் வாக்குகளை மாத்திரமே பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க., தி.மு.க. என்பனதனித்துப்போட்டியிட்டன. பா.ஜ.க. , தே.மு.தி.க., ம.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து போட்டியிட்டது. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. 37 இடங்களையும், பா.ஜ.க. கூட்டணி 2 இடங்களையும் பெற தி.மு.க. போட்டியிட்ட அனைத்துத் தொகுதிகளிலும் தோல்வியைத் தழுவியது.

ஸ்ரீரங்கம் இடைத்தேர்தலில் மோசடிகளும், தேர்தல் விதிமுறை மீறல்களும், வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்கப்பட்டமையும் பரவலாக இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன. இதில் ஆளும் அ.தி.மு.கவினர் பக்கமே அதிகளவில் சுட்டுவிரல் நீட்டப்பட்டுள்ளது.

எது எப்படியோ அடுத்த ஆண்டு இடம்பெறப்போகும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகளை ஸ்ரீரங்கம் இடைத்தேர்தல் பிரதிபலிக்கின்றது என்பதை எவரும் புறமொதுக்கி வைத்துவிட முடியாது என்பதுதான் உண்மை. ■

சிங்களமூலம் - சந்துன் ஜீவந்த
தமிழில் - வீஎஸ்ரீ.

தேர்தல் வேளைகளில் வாக்காளர்களைக் குழப்பும் வகையில் வெளியிடப்படும் இரகசிய ஒப்பந்தம், போலியான கடிதம் மற்றும் போலியான ஒலிநாடா என்பவை குறித்த பரபரப்பு, தேர்தல் முடிவடைந்த கையோடு அடங்கிப்போவது வழக்கமானதேயான போதிலும், திஸ்ஸ விடயத்தில் அவர் பலிக்கடாவாக நேர்ந்துள்ளது. திஸ்ஸவின் தலைவிதி எவ்வாறு அமையப் போகிறது என்பது குறித்து தற்போது எதனையும் உறுதியாகக் கூற இயலாது.

# போலி அரசியல்வாதிகளின் அரசியல் சித்து விளையாட்டு

இரகசிய ஒப்பந்தம், இரகசிய கடிதம், பொய்யான ஒலிநாடா என்பவை தேர்தல் வேளைகளில் சுடச்சுட பலகாரம் விற்பனையாவது போன்று விற்பனையாவதுண்டு. தாம் சார்ந்துள்ள அரசியல் கட்சிகளைத் தேர்தலில் வெற்றிபெறச் செய்வதற்காக அரச தரப்பினர், எதிர்க் கட்சியினர் என்ற வேறுபாடில்லாமல் அரசியல்வாதிகள் இத்தகைய குறுக்கு வழிகளைக் கையாண்டு வாக்காளர்களது மனதைக் குழப்புவதுண்டு. ஆனால் அவற்றின் உண்மைத்தன்மை குறித்து எவரும் அறிந்திருக்க மாட்டார்கள்.

ஆனால் அத்தகைய பரபரப்பான செய்திகள், காட்டுத் தீபோன்று விரைவில் பரவி விடுகின்றன. அத்தகைய செய்திகளை வெளியிடுவோர் தாம் முன்வைக்கும் அத்தகைய ஒப்பந்தம், கடிதம், ஒலிநாடா என்பவை உண்மையானவையே; இரகசியமான முறையில் இடம்பெற்றவையே என சத்தியம் செய்யத் தவறுவதில்லை. அவற்றின்மூலம் பாதிக்கப்படுவோர், அவை யாவும் பொய்யான, திட்டமிட்டுப் பரப்பப்பட்ட செய்திகள் என மறுப்பதற்கும் பின் நிற்பதில்லை.


இவ்வாறான செய்திகளின் உண்மைத்தன்மை மற்றும் பொய் குறித்து தேர்தல் சமயங்களில் அரசதரப்பு, எதிர்க்கட்சித் தரப்பு அரசியல்வாதிகள் தம் மத்தியில் கருத்துப் போரில் ஈடுபட்டுக் கொண்டாலும், தேர்தல் முடிந்த கையோடு அவை யாவும் மறக்கப்பட்டு விடுவது வழமையானதொன்றே.

அவற்றின் உண்மை, பொய் குறித்து தேர்தலின் பின்னர் தோண்டித் துருவி ஆராய எவரும் அக்கறை காட்டுவதில்லை.

தேர்தல் வேளைகளில் இவ்விதம் பரபரப்பாக முன்வைக்கப்படும் செய்திகளுக்கான வரலாறு 1999 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் வேளை வரை நீண்டு செல்லுகின்றது. அந்த வேளையில் பரபரப்பாக உலா வந்ததொரு செய்தியாக யானை – புலி ஒப்பந்தம் அமைந்திருந்தது. ஐ.தே.கட்சிக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்ட அந்த யானை – புலி ஒப்பந்தம் குறித்துச் செய்தியை வெளிக்கொணர்ந்தவர் மங்கள சமரவீர ஆவார்.

அக்காலகட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த அவர், அதனைப் பயன்படுத்தி ஐ.தே.கட்சியைத் தொடர்ச்சியாக விமர்சித்து வந்தார். தென்பகுதிச்சிங்கள பௌத்தர்களது வாக்குகள் ஐ.தே.கட்சிக்குக் கிட்டாது போவதற்கு அந்த யானை – புலி ஒப்பந்தம் பற்றிய செய்தி பெரும் பங்கு வகித்தது.

யானை, புலி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மங்கள சமரவீர ஐ.தே.கட்சியைக் கடுமையாகத் தாக்கி விமர்சித்த வேளையில் ஐ.தே. கட்சியோ அதனை மறுத்து அத்தகைய பரப்புரை பொய்யானதொன்றென அறிக்கைகளை வெளியிட்டு வந்தது. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் அது குறித்து சம்பந்தப்பட்ட அவ்விரு தரப்பினரோ, பொதுமக்களோ எவ்வித அக்கறையும் காட்டியதில்லை. ஆனால் 1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற சகல தேர்தல்களிலும் ஐ.தே.கட்சியின் தோல்விக்கு அந்த யானை, புலி ஒப்பந்தம் என்ற செய்தியே பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வைத்தது என்பதை எவராலும் மறுத்துரைக்க இயலாது.



“ காலநேரம் பிழைத்தால், சிக்கல்களும் சிரமங்களும் தாமாகத் தேடிவரும் என்று கூறப்படுவதுண்டு. அந்த வகையில் திஸ்ஸ அத்தநாயக்க விடயத்திலும் அவரது காலநேரம்தான் அரசியலரங்கில் அவரை இன்று இந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளதோ என எண்ணத் தோன்றுகிறது.

2001 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் வேளையிலும் அத்தகையதொரு சம்பவம், ஒலிப்பதிவு நாடா ரூபத்தில் நாட்டில் உலா வந்தது. அது முன்னாள் ஐ.தே.கட்சித் தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயலத் ஜயவர்த்தன விடுதலைப்புலிகள் அமைப்பின் உயர்மட்டத் தலைவர் ஒருவருடன் பேச்சில் ஈடுபட்டதாகக் கூறப்பட்ட பரபரப்புச் செய்தியாகும். ஐ.தே.கட்சி அதனை மறுத்துரைத்தபோதிலும், தேர்தல் முடிவடைந்த பின்னர் குறிப்பிட்ட அந்தச் செய்தியும் சகலராலும் மறக்கப்பட்டதொன்றாக ஆகிவிட்டது.

கடந்த 2010 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் வேளையிலும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கும் இடையே இரகசிய ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வெளிவந்த செய்தி அரசியல் அரங்கிலும் நாட்டின் வாக்காளப் பொதுமக்கள் மத்தியிலும் குழப்பகரமான நிலையொன்றைத் தோற்றுவித்திருந்தது.

2010 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் அண்மைய ஜனாதிபதித் தேர்தல் வேளையிலேயே மீண்டும் அத்தகையதொரு இரகசிய ஒப்பந்தம் குறித்துப் பரபரப்பான செய்தி வெளிவந்தது. ஐ.தே.கட்சியிலிருந்து அரச தரப்புக்குப் 'பல்டி' யடித்த திஸ்ஸ அத்தநாயக்கா, அரச தரப்புக்கான தமது விசுவாசத்தை நிரூபிக்கும் நோக்கிலேயோ என்னமோ, ரணிலுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இரகசிய ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதன் பிரதி தம்மிடம் உள்ளதாகவும் திடீரெனக் குண்டொன்றைத் தூக்கிப் போட்டார். அதுமட்டுமன்றி அதனை நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்துவதாகக் கூறி அதனைப் பகிரங்கமாக வெளியிடவும் செய்தார். உடனடியாகவே செயற்பட்டு ரணிலும் மைத்திரிபால சிறிசேனவும் குறிப்பிட்ட அந்த ஒப்பந்தப் பிரதி முற்றுமுழுதாகப் பொய்யானதொன்று எனவும், தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதியொன்றெனவும், அத்தகையதொரு ஒப்பந்தம் தம்மிடையே மேற்கொள்ளப்படவில்லை எனவும் பகிரங்கமாக அறிவித்தனர்.

அத்தோடு நிறுத்திக்கொள்ளாது குறிப்பிட்ட அந்தப் போலியான ஒப்பந்தப் பிரதி குறித்து விசாரணை மேற்கொள்ளுமாறு இரகசியப் பொலிஸ் தரப்பிடம் ஐதே.கட்சி முறைப்பாடொன்றை முன்வைத்தது. இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதன்பேரில் குறிப்பிட்ட அந்த ஒப்பந்தப் பிரதியில் காணப்பட்ட ரணிலினதும் மைத்திரிபால சிறிசேனவினதும் கையெழுத்துக்கள் போலியானவை என்பது நிரூபிக்கப்பட்டதையடுத்து திஸ்ஸ அத்தநாயக்க பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இத்தகைய போலி ஒப்பந்தமொன்று தொடர்பாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட முதலாவது பிரமுகர் என்ற விதத்தில் திஸ்ஸ அத்தநாயக்கவின் பெயர் இலங்கை அரசியல் வரலாற்றில் பதிவானது.

திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராக ஐ.தே.கட்சி மேற்கொண்ட முறைப்பாடு குறித்துத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவிலேயே திஸ்ஸ பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, சந்தேகநபராகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டார். தேர்தல் வேளைகளில் இவ்விதம் வாக்காளர்களைக் குழப்பும் வகையில் வெளியிடப்படும் இரகசிய ஒப்பந்தம், போலியான கடிதம் மற்றும் போலியான ஒலிநாடா என்பவை குறித்த பரபரப்பு, தேர்தல் முடிவடைந்த கையோடு அடங்கிப் போவது வழக்கமானதேயான போதிலும், திஸ்ஸ விடயத்தில் அவர் பலிக்கடாவாக நேர்ந்துள்ளது. திஸ்ஸவின் தலைவிதி எவ்வாறு அமையப் போகிறது என்பது குறித்து தற்போது எதனையும் உறுதியாகக் கூற இயலாது.

தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கும் அவர், தாம் மேற்கொண்ட அந்த அரசியல் சித்து விளையாட்டுக்கான பலாபலனை எதிர்நோக்கவேண்டியுள்ளது. நீதிமன்ற வழக்கு விசாரணையின் போது அவர் குற்றவாளியென நிரூபிக்கப்பட்டால் அதற்கான நீதிமன்றத்தின் தண்டனையை அவர் ஏற்க வேண்டியிருக்கும்.

பொதுவாக, காலநேரம் பிழைத்தால், சிக்கல்களும் சிரமங்களும் தாமாகத் தேடிவரும் என்று கூறப்படுவதுண்டு. அந்த வகையில் திஸ்ஸ அத்தநாயக்க விடயத்திலும் அவரது காலநேரம்தான் அரசியலரங்கில் அவரை இன்று இந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளதோ என எண்ணத் தோன்றுகிறது.

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 30 | 60 | 20 | 40 | 40 | 50 |
| கத்தரி | 100 | 90 | 140 | 100 | 120 | 80 | 110 |
| கரட் | 200 | 150 | 220 | 200 | 280 | 120 | 230 |
| மரவள்ளி | 40 | 40 | 60 | 40 | 60 | 45 | 30 |
| பயிற்றை | 120 | 120 | 150 | 180 | 160 | 120 | 160 |
| பாகல் | 120 | 120 | 140 | 100 | 180 | 120 | 110 |
| கருணைக்கிழங்கு | – | 50 | 80 | 50 | 80 | 80 | 60 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 90 | 80 | 100 | 80 | 70 |
| சி.வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 80 | 100 | 40 |
| பூசணி | 90 | 120 | 100 | 100 | 140 | 90 | 80 |
| தக்காளி | 200 | 180 | 180 | 160 | 240 | 180 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 80 | 80 | 120 | 70 |
| கீரை | 20 | 30 | 10 | 25 | 20 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 | 10 | 15 | 20 |
| பச்சை மிளகாய் | 140 | 120 | 120 | 120 | 200 | 140 | 160 |
| புடோல் | 60 | 70 | 80 | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 90 | 100 | 100 | 80 | 140 | 80 | 140 |
| வெண்டி | 90 | 60 | 80 | 60 | 80 | 120 | 60 |
| போஞ்சி | 200 | 160 | 200 | 180 | 240 | 220 | 190 |
| லீக்ஸ் | 160 | 160 | 180 | 200 | 220 | 160 | 200 |
| தேங்காய் | 50 | 60 | 40 | 50 | 60 | 35 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 90 | 65 | 70 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 30 | 10 | 15 | 10 |
| கறிமிளகாய் | 160 | 200 | 200 | 180 | 140 | 220 | 220 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 100 | 120 | 100 | 80 |
| பனங்கிழங்கு | 1.50 | 05 | 05 | 03 | 05 | 03 | 04 |



## தவக்காலச் சிந்தனை

# ஏழைக்குச் செய்யும் அன்பே நீதிச் செயல்

அடுத்திருப்பவரை அன்பு செய்யாமல், ஆண்டவரை அன்பு செய்கிறேன் என்பது பகப்பு வார்த்தை. ஒருவரின் ஆன்மாவிலிருந்து புறப்பட்டு மற்றவர்களின் ஆன்மாவைத் தொட்டு நிற்கும் செயல்கள் அனைத்தும் ஆன்மிகச் செயல்களாகும். பிறரன்பும் இறையுறவும் இணையும் போதே ஆன்மிகச் செயல் வெளிப்படும். ஆன்மிகச் செயல் அடுத்தவரைக் காயப்படுத்துவதாக அமையாது, மாறாக அன்புச் செயலாகவே இருக்கும்.

தவக்காலம் இறைவனால் கொடுக்கப்பட்ட அருளின் காலம். களவு, பொய் சொல்லாமலும் ஒருவரையும் வஞ்சியாமலும், அடுத்திருப்பவரை ஒடுக்காமலும் நீதியோடும் வாழ வேண்டும் என்பதை லேவியர் ஆகமத்தில் ஆண்டவர் கூறுவதாக எழுதப்பட்டுள்ளது.(லேவி 19:1–18) மத்தேயு நற்செய்தியிலேயும் (மத் 25:31–46) இறுதி நாளிலும் மானிடமகன் மாட்சியுடன் வந்து நல்லோருக்கும் தீயோருக்கும் தீர்ப்பு வழங்கும் போது "மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ? அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" எனப் பதிலளிப்பார் என்று கூறப்பட்டுள்ளது.

இன்று ஏழைகள், ஏதிலிகள் பல வழிகளிலும் துன்பத்துக்கு ஆளாக்கப்படுகின்றார்கள். இடமற்ற தொழிலற்ற, நிலமற்ற குடும்பங்களாகவே அலைக்கழிக்கப்படுகின்றார்கள். அயலிலே வாழ்கின்றவர்களால் ஏளனத்துக்கும் இம்சைக்கும் ஆளாக்கப்படுகின்றார்கள். இவர்கள் ஆட்சியாளராலோ, ஏனையவர்களாலோ கண்டு கொள்ளப்படாமலே தம் காலத்தை கழிக்கின்றார்கள். ஏழைகளுக்கு இரக்கம் காட்டாதவர்களுக்கு இறைவனும் எதிர்த் தீர்ப்பு வழங்குவார்.

தாமுண்டு, தமது குடும்பங்கள் என்று பலர் உலகப் புகழிலே பெருமை அடைகின்றார்கள். தன்னை விட வசதி வாய்ப்புக்கள் இல்லாதவன் அவனுக்கு ஏழைதான். அவனுக்கு ஏதோ ஒருவகையில் உதவ வேண்டும் பணமோ, கல்வியோ, தொழிலோ, அறிவுரைப்போ, வழிகாட்டலோ செய்யும் போது நாமும் அவர்களின் தேவையைக் கொடுக்கின்றவர்களாக ஆகமுடியும். இவ்வாறான இரக்கச் செயலே இறைவனின் அன்பாகவும் வெளிப்படுகின்றது. "ஏழைக்குக் காட்டும் இரக்கம் கிறிஸ்துவுக்குக் காட்டும் அன்பிலிருந்து வேறுபட்டதல்ல" என்பதை இறையியலாளர்கள் கூறுகின்றார்கள்.

அன்ரனி பீற்றர், ஆசிரிய ஆலோசகர் (R.C)

## நாளை

**மாசி-12**
**செவ்வாய்க்கிழமை**
**24.02.2015**

திதி:ஷஷ்டி: மா.06.14 வரை
நட்சத்திரம்: பரணி மு.இ.11.46
சுபநேரம்: 11.00-12.30 வரை
இராகுகாலம்:
03.30-05.00 வரை
ஷஷ்டி விரதம்

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|
| இறால் | 650 | 700 | 700 | 450 |
| நண்டு | 250 | 250 | 300 | 300 |
| கணவாய் | 450 | 500 | 500 | – |
| பாரை | 500 | 500 | 500 | 360 |
| சுறா | 550 | 600 | – | – |
| சீலா | 300 | 400 | 400 | 350 |
| விளை | 550 | 450 | 500 | 350 |
| முரல் | 300 | 350 | 300 | 260 |
| கும்பிளா | 450 | 500 | 400 | 300 |
| கிழாக்கன் | 300 | 400 | 300 | – |
| ஓரா | 400 | 350 | 300 | – |
| திரளி | 150 | 250 | 200 | – |
| நகரை | 150 | 300 | 300 | 250 |
| சூடை | 150 | 100 | 100 | 60 |
| ஒட்டி | 250 | 200 | 200 | – |
| திருக்கை | 150 | 250 | 300 | 120 |
| பாலை | 500 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 300 | 250 |
| கொய் | 100 | 80 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 300 | 250 |


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### மனத்தினால் வெல்லுங்கள்

தூய்மையற்ற தன்மை என்பது மனத்தின் இயல்பல்ல. அதன்மீது திணிக்கப்படுவதே. அதனால் உங்களுடைய உண்மையான இயல்பு மறைக்கப்படுகிறது. ஆனால் உண்மையான நீங்கள் ஏற்கனவே முழுமையாகவும் வலிமை வாய்ந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்களை ஆள்வதற்கு உங்களுக்கு எந்த உதவியும் வேண்டாம். மனத்தினால் உங்களை நீங்களே வெல்லலாம்.

## பாட்டி வைத்தியம் தெரியுமா?



ஊறவைத்த வெந்தயத்தை நன்கு அரைத்து தயிரில் கலந்து 3வேளை சாப்பிட்டு வந்தால் சீதபேதி குணமாகும். வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டால் புழுங்கல் அரிசி வடித்த தண்ணீரில் சிறிதளவு உப்பையும், வெண்ணெயும் கலந்து குடித்தால் சிறிது நேரத்தில் குணமாகிவிடும். எலுமிச்சைப் பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும். நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாகும். வெற்றிலைச்சாற்றில் இஞ்சிச் சாற்றைச் சேர்த்து குடித்து வந்தால் நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாகும். வெண்டைக்காயை அடிக்கடி சேர்த்து வந்தால் நரம்புகள் வலிமை பெறும். மூளையின் இயக்கத்தை செம்மைப்படுத்தும். ஞாபக சக்தி அதிகரிக்கும். மாதுளம் பழச் சாற்றுடன், தேன் கலந்து சாப்பிட மலச்சிக்கல் நீங்கும். இரத்தம் சுத்தமடையும். முருங்கைக் கீரைச் சாற்றில் தேன் மற்றும் சுண்ணாம்பைக் குழைத்து தொண்டையில் தடவிக் கொண்டால் இருமல் நிற்கும். வில்வம் பூக்களை உலர்த்தி, பொடி செய்து தேனில் கலந்து குடித்தால் வயிறு மந்தம் குணமாகும். தினமும் குளிப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன் முகத்தில் தேங்காய் எண்ணெய் தடவி வர, சருமம் தங்கம் போல் மின்னும். பாசிப் பயற்று மாவை வெந்நீர் விட்டுக் களியாகக் கிளறி மார்பில் பற்றுப்போட பால்கட்டுப் பிரச்சினை சரியாகும். கிராம்பு, கற்பூரம், ஓமம் ஆகியவற்றை ஒரு சிட்டிகை வீதம் எடுத்து பொடி செய்து வீக்கம் உள்ள ஈறுகளில் சிறிது நேரம் வைத்து வாய் கொப்பளிக்க, ஈறு வீக்கம் குறையும். அருகம் புல்லையும் மஞ்சளையும் சேர்த்து அரைத்து படர்தாமரையில் பூச, நல்ல நிவாரணம் கிடைக்கும். மஞ்சள் தூளை நெய்யுடன் கலந்து காய்ச்சிச் சாப்பிட்டால் இருமல் நிற்கும். கிராம்புப் பொடியுடன் தேன் சேர்த்துச் சாப்பிட்டால், உடல் உறுப்புகள் பலமாகும். பேரிக்காயை வாரம் இரண்டு முறை சாப்பிட்டு வந்தால் ஜீரண சக்தி அதிகமாகும். எலுமிச்சை பழச்சாறு, தேன் கலந்து குடிக்க வறட்டு இருமல் குணமாகும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 2 | 8 | 6 | | | 4 | 9 |
| | | | | | | 2 | | |
| 7 | | 3 | 4 | 5 | 2 | | 6 | 8 |
| | 7 | | | 8 | 4 | | | |
| 2 | | | | | | | | 3 |
| | | | 6 | 3 | | | 2 | |
| 6 | 2 | | 1 | 9 | 8 | 4 | | 5 |
| | | 4 | | | | | | |
| 9 | 3 | | | 4 | 5 | 6 | 8 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 6 | 3 | 1 | 4 | 7 | 5 | 2 |
| 3 | 5 | 7 | 2 | 8 | 9 | 4 | 1 | 6 |
| 1 | 2 | 4 | 6 | 7 | 5 | 9 | 8 | 3 |
| 9 | 6 | 1 | 4 | 2 | 3 | 8 | 7 | 5 |
| 7 | 3 | 5 | 1 | 9 | 8 | 6 | 2 | 4 |
| 2 | 4 | 8 | 5 | 6 | 7 | 3 | 9 | 1 |
| 6 | 7 | 2 | 9 | 3 | 1 | 5 | 4 | 8 |
| 4 | 1 | 9 | 8 | 5 | 6 | 2 | 3 | 7 |
| 5 | 8 | 3 | 7 | 4 | 2 | 1 | 6 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ராசியான கிரகங்கள்



## கடகம்:

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு செவ்வாய், குரு, சந்திரன் ஆகியோரால் யோக பலன்கள் சித்திக்கும். இவர்களில் செவ்வாய் முழு முதல் யோக காரகர் ஆவார். செவ்வாய் வலுத்திருந்தால் விசேடமான சுப பலன்கள் நிச்சயம் உண்டாகும். சுப வீடுகளில் இந்த மூவரின் இணைவு, பார்வை மூலம் நலம் பெருகும்.

புதன், சுக்கிரன், சனி ஆகியோரால் கடக இலக்னக்காரர்களுக்குக் கெடுபலன்கள் உண்டாகும் என்பதால், குறிப்பிட்ட இந்த கிரகங் களின் திசை, புத்தி, அந்தர காலங்களில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. குறிப்பிட்ட கிரகங்களுக்குப் பிரீதி, பரிகாரங்கள் செய்து கொள்வது அவசியமாகும்.

## சிம்மம்:

இந்த ராசிக்காரர்களுக்கு செவ்வாய் யோக காரகர்; யோக பலன்களை அளிப்பவர். சூரியன், குரு ஆகியோரது தொடர்பு செவ்வாய்க்கு இருக்கும் பட்சத்தில் சுப பலன்கள் அதிகரிக்கும். ராஜயோகம் உண்டாகும். சிம்மம் சூரியனின் வீடாவதாலும் சூரியன், செவ்வாய், குரு ஆகியோர் ராஜ கிரகங்கள் என்பதாலும் உயர் அதிகாரப் பதவிகள் இவர்களுக்கு இயற்கையாகவே அமையும். பலரையும் வேலை வாங்கும் தகுதி இவர்களுக்கு உண்டு.

இவர்களுக்கு புதன், சுக்கிரன், சனி ஆகியோர் துன்பத்தையும் சங்கடங்களையும் தரக்கூடும் என்பதால் குறிப்பிட்ட திசை, புத்தி, அந்தர காலங்களில் விழிப்பு தேவை.

## கன்னி:

இந்த ராசிக்காரர்களுக்கு புதன், சுக்கிரன் ஆகியோரது ஆட்சிக் காலங்கள் யோக பாக்கியங்களை அள்ளித்தரும். சந்திரன், செவ்வாய், குரு ஆகியோரது திசை, புத்திக் காலங்களில் எச்சரிக்கை தேவை.

## துலாம்:

இந்த ராசிக்காரர்களுக்கு சனி முதல் தர யோக காரகன் ஆவார். இவர் வலுத்து, இவரது திசை, புத்தி, அந்தரங்கள் நடை பெறும்போது யோக பாக்கியங்களை ஜாதகர் பெறமுடி யும். சூரியன், செவ்வாய், குரு ஆகியோரது ஆட்சிக் காலங்களில் சோதனைகளும் சங்கடங்களும் உண்டாகும். குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட கிரகத்துக்குப் பிரீதி, பரிகாரங்கள் செய்து கொள்வது அவசியமாகும்.

## விருச்சிகம்:

சூரியனும் சந்திரனும் யோக கிரகங்கள் ஆவார்கள். இவர்களது சேர்க்கை சுப வீடுகளில் அமைந்தால், யோக பாக்கியங்கள் அதிகமாகும். இவர்களுடன் குரு சேர்ந்தாலோ, பார்த்தாலோ சுப பலன்கள் மேலும் அதிகரிக்கும். உயர் அதிகாரப் பதவி கிடைக்கும். இவர்களுக்கு புதன், சுக்கிரன், சனி ஆகியோரது திசை, புத்திகளில் சங்கடங்கள் ஏற்படும். இந்தக் கிரகங்களுக்கு பிரீதி, பரிகாரங்களைச் செய்து கொள்வதன் மூலம் சங்கடங்களைக் குறைத்துக் கொள் ளலாம்.

## தனுசு:

சூரியன், செவ்வாய், புதன், குரு ஆகியோரால் யோக பலன்கள் உண்டாகும். சூரியன் புதன் இணைவும், செவ்வாய் குரு சேர்க்கையும், சூரியன் செவ்வாய் தொடர்பும் விசேடமானவை. ராஜயோக பலன்களை அள்ளித்தரும்.

சுக்கிரனும் சனியும் கெடுபலன்களை உண்டுபண்ணுவார்கள். புதன் பாதக, மாரகாதிபதி என்பதால் சங்கடங்களையும் தருவார். குறிப்பிட்ட கிரகங்களின் திசை, புத்தி, அந்தரங்கள் நடக்கும் நேரம் அறிந்து அந்தந்த கிரகத்துக்கு உரிய பிரீதி, பரிகாரங்களைச் செய்துகொள்வது நல்லது.

## மகரம் :

சுக்கிரன் முதல்தர யோக காரகன் ஆவார். புதன் சுக்கிரன் சேர்க்கை சுப வீடுகளில் அமையும்போது யோக பாக்கியங்கள் பெருகும். சந்திரன், செவ்வாய், குரு ஆகியோரது ஆட்சி காலங்களில் எச்சரிக்கை தேவை.

## கும்பம்:

சுக்கிரன் முதல்தர யோக காரக கிரகம் ஆவார். செவ்வாயும் சுக்கிரனும் சுப ஸ்தானங்களில் இணைவது விசேடமாகும். இவர்களுக்கு சந்திரன், செவ்வாய், குரு ஆகியோரால் தொல்லைகளும், துன்பங்களும், துயரங்களும் சூழும். குறிப்பிட்ட கிரகங்களின் திசை, புத்தி, அந்தர காலங்களில் பிரீதி, பரிகாரங்களைச் செய்து கொள்வது அவசியமாகும்.

## மீனம்:

செவ்வாய், சந்திரன், குரு ஆகியோரால் யோக பலன்கள் உண்டாகும். செவ்வாய் குரு இணைவும், செவ்வாய் சந்திரன் இணைவும் விசேடமான ராஜயோகத்தைத் தரும். சூரியன், புதன், சுக்கிரன், சனி ஆகியோரது திசை, புத்திகள் சோதனையானவை. குறிப்பிட்ட கிரகங்களின் ஆட்சிக் காலங்களில் பிரீதி, பரிகாரங்கள் செய்வது அவசியம்.

குடும்ப ஜோதிடரிடம் ஜாதகத்தைக் காண்பித்து உங்கள் ராசிக்கு யோகம் தரும் கிரகங்களின் நிலை, சஞ்சாரம், கெடுபல்ன் அளிக்கும் கிரகங்களின் அமைப்பு ஆகியவற்றை ஆராய்ந்து, அதற்கேற்ப பிரீதி பரிகார வழிபாடுகளைச் செய்துகொள்ளுங்கள்.



# தற்காலிக பிரிவுக்கு துணை புரியும் சட்டம்

திருமண உறவுகளில் சில நேரங்களில் மனக் கசப்பு உருவாக வாய்ப்பு ஏற்படுகிறபோது, அந்த உறவை உதறித் தள்ள எத்தனிக்காமல் சிறிது காலம் சட்டப்படி பிரிந்திருக்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டால், பிரச்சினைகள் சுமுகமாக முடியலாம். எந்தெந்த காரணங்களுக்காக சட்டப்படி விவாகரத்து கோருகிறோமோ அதே காரணங்களுக்காக தற்காலிக நீதிமன்ற பிரிவு கோருவதற்கும் அனைத்துச் சட்டங்களும் வழிவகை செய்துள்ளன. குடும்ப உறவில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு விவாகரத்துதான் ஒரே தீர்வு என்று எண்ணாமல் தற்காலிக நீதிமன்ற பிரிவு கோரி மனுத் தாக்கல் செய்யும் பட்சத்தில் திருமண உறவு நிலைக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகம். எமக்கு முந்தைய தலைமுறையினருக்கு குடும்பச் சிக்கல்கள் தலைதூக்கும் போது, 'கொஞ்ச நாள் விலகியிருந்தால் எல்லாம் சரியாயிடும்' என்று கூறுவதைக் கேட்டிருக்கிறோம். விவாகரத்து என்பது பல பிரச்சினைகளுக்கு முடிவு என்று எண்ணுவது அறியாமை. விவாகரத்து என்பது பாதிக்கப்பட்ட நபரை மட்டுமன்றி அவர்களது குழந்தைகள், அவரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் என்ற பெரிய வட்டத்தையே பாதிக்கக் கூடிய ஒன்று. அதனால் குடும்ப உறவைப் பலப்படுத்த என்னென்ன வழிவகைகள் உள்ளனவோ, அவற்றைச் சட்டப்படியும் தர்மப்படியும் கையாண்டு அவை தோல்வியடையும் பட்சத்தில்தான் விவாகரத்துக் குறித்து யோசிக்க வேண்டும். எப்போதுமே வேகத்திலும் கோபத்திலும் எடுக்கப்படுகின்ற முடிவுகள் தவறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். குடும்ப உறவைக் கட்டிக்காக்க விரும்புபவர்களுக்கு நிதானம் அவசியம். குடும்ப நல நீதிமன்றங்கள் வெறும் விவாகரத்து நீதிமன்றங்கள் மட்டும் அல்ல என்பதை அனைவரும் புரிந்து செயற்படுவது அவசியம். உறவுகளைக் கட்டிக் காக்கவும் சட்டம் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறது என்பதை மறந்து விட வேண்டாம்.

# அழுது வடியும் பெண்களை விரும்பாத ஆண்கள்


கணவன், மனைவி இடையே நடைபெறும் சின்னச் சின்னச் சண்டைகளின்போது மூக்கைச் சிந்தாத மனைவிகளைப் பார்க்காமல் இருக்க முடியாது. மேலும் பெண்கள் எதற்கெடுத்தாலும் அழுகிறார்கள் என்பது ஆண்கள் பொதுவாக சுமத்தும் குற்றச்சாட்டாக உள்ளது. பெண்கள் அழுதே காரியத்தை சாதித்து விடுகிறார்கள் என்று ஆண்கள் எரிச்சல்படுகிறார்கள். மேலும் பெண்களின் அழுகையைச் சமாளித்து சமாதானப்படுத்துவது என்பதில் ஆண்களுக்கு குழப்பம் ஏற்படுகிறது. சமாதானப்படுத்த முயன்றால் அழுகை கூடுமாம், அவர்கள் கோருவதை நிறைவேற்றுவதாக அல்லது கவனிப்பதாக உறுதியளித்தால் மட்டுமே அழுகை குறைகிறதாம். இது சமயத்தில் ஆண்களுக்கு எரிச்சலைக் கொடுக்கிறதாம். பொது இடங்களுக்கும், கடை போன்றவற்றுக்கும் செல்லும்போது தான் கேட்டதை அல்லது விரும்பியதை வாங்கித் தராமல் போகும் ஆண்களிடம், காரியம் சாதிக்க பல பெண்கள் பொது இடம் என்றும் பாராமல் கண்களை கசக்குகிறார்களாம். அப்போது ஆண்களுக்கு பெரும் தர்மசங்கடமாகி விடுகிறதாம். பொது இடத்தில் தான் ஒரு நல்லவனாக நடந்து கொள்ளத்தான் ஒவ்வொரு ஆணும் விரும்புவான். எனவே இதைப் பயன்படுத்தி பல பெண்கள் கண்களை கசக்கியோ அல்லது கசக்குவது போல நடித்தோ காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார்களாம். ஒன்றுமே இல்லாத பிரச்சினையைப் பெரிதாக்கி கண்ணீர் வடிக்கிறார்கள் என்கிறார்கள் அவர்கள். நேர்மையாக, நேருக்கு நேர், தைரியமாக, தெளிவாகப் பேசி தமது தேவைகள் பற்றிக்கூறும் பெண்களைத்தான் ஆண்களுக்குப் பிடிக்கிறதாம். மற்றப்படி கண்ணீர் விட்டு காரியம் சாதிக்க நினைக்கும் பெண்களை ஆண்கள் வெறுக்கிறார்களாம்.



# வர்ணம் தீட்டலாம் வாங்க...







## ஜெல்லி மீன்



ஜெல்லி மீன்கள் குழியுடலிகள் என்ற இனத்தைச் சேர்ந்த கடல்வாழ் பிராணி.

கடலில் ஆழமான பகுதிகள், ஆழம் குறைந்த கரைப் பகுதிகளில் வாழும். ஜெல்லி மீன்களில் இரு நூறுக்கும் மேற்பட்ட வகைகள் உண்டு.

ஜெல்லி மீனின் தலைப் பகுதி குடை வடிவத்தில் இருக்கும். நடுவில் நீளமான தண்டு இருக்கும். இந்தத் தண்டின் ஒரு துளையின் முனையில் வாயும், இன்னொரு முனையில் கழிவை நீக்கும் உறுப்பும் இருக்கும்.

ஜெல்லி மீனுக்கென முழுமையான செரிமான, சுவாச, ரத்த ஓட்ட மண்டலங்கள் கிடையாது.

ஜெல்லி மீனின் தோல் மிகவும் மெலிதாக இருப்பதால் காற்றில் அசைந்தபடியே அவை ஒக்சிஜனேற்றம் செய்து கொள்கின்றன.

சிலவகை ஜெல்லி மீன்கள் ஒரு குளிர்சாதனப் பெட்டியின் அளவில்கூட இருக்கும். இன்னும் சில ஜெல்லி மீன்கள் குண்டூசி அளவே இருக்கும்.

சில ஜெல்லி மீன்களுக்கு விஷக் கொடுக்குகள் உண்டு. சிறிய உயிர்களை வேட்டையாடும்போது அதன் விஷக் கொடுக்கால் கொட்டியே அதை இறக்க வைக்கும்.

ஜெல்லி மீன்களுக்கு உருவங்களை உணரும் பார்வைத் திறன் கிடையாது. ஆனால், ஒளியை உணரும் உறுப்புகள் உண்டு. சூரிய ஒளி தண்ணீரின் மேற் பரப்பில் ஒளிர்வதை அவற்றால் உணர முடியும்.

பெரிய ஜெல்லி மீன்கள் ஒரு ஆண்டுக்குக்குறைவான ஆயுள்காலம் கொண்டவை. சில நாள்களே ஆயுள்காலம் கொண்ட ஜெல்லி மீன்களும் உண்டு


உதயன்

## இணையுங்கள்

துணிச்சலும், பெருமையும் கொண்ட ஆசிரியர்பீட அணியுடன் இணையுங்கள்

புதிய பொலிவு பெற்றுள்ள உதயன் பத்திரிகையில் உதவி ஆசிரியர்களாக, செய்தியாளர்களாகப் பணியாற்றுவதற்கு ஆர்வமும் தேடலும் உள்ளவர்களையும் தேடி வருகின்றோம். புதினங்களைத் தேடும் ஆர்வம், தமிழ் மொழியில் சிறந்த ஆளுமை, ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் தேர்ச்சி அனைத்தும் இருந்தால், பெருமையும் துணிச்சலும் கொண்ட ஆசிரியர்பீட அணியில் ஒருவராக உடனடியாக இணைந்து கொள்ளலாம். இவை அனைத்தும் இல்லாவிட்டால் பரவாயில்லை. தமிழ் மொழி ஆளுமையும் தேடல் ஆர்வமும் மட்டும் இருந்தாலே போதும் எங்கள் பயிற்சி அணியில் இணைந்து கொள்ளவும் அரிய வாய்ப்பு உண்டு. 5 வருடங் களின் பின்னர் மீண்டும் ஒரு சந்தர்ப்பம்.

### 1 உதவி ஆசிரியர்கள்

- தமிழ் மொழியில் முழுமையான ஆளுமையைக் கொண்டிருப்பதுடன் ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் வாசித்துப் புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றலையும் கொண்டிருக்க வேண்டும்.
- பத்திரிகைத்துறை அல்லது எழுத்துத் துறையில் கட்டாயம் அதீத ஆர்வத்தைக் கொண்டிருக்கவேண்டும்.
- செய்திகளை, கட்டுரைகளை, ஆக்கங்களை செம்மைப்படுத்தி, செழுமைப்படுத்தும் திறமை மற்றும் பொறுமையைக் கொண்டிருக்கவேண்டும்.
- தமிழ் மொழியில் பட்டம் அல்லது ஊடகக் கற்கைத்துறை ஒன்றில் பட்டம் அல்லது பட்டயம் பெற்றிருப்பது மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.

### 2 செய்தியாளர்கள்/ பத்தியாளர்கள்

- செய்திகளை நுகர்ந்து அறிந்துகொள்ளும் ஆர்வமும் ஆற்றலும் எத்தரப்பினருடனும் நெருங்கிப் பேசி வசியப்படுத்தும் இயல்பும் எழுதுவதற்கான துடிப்பும் இருக்கவேண்டும்.
- மொழியை வசப்படுத்தி வசியப்படுத்தும் திறனைப் பெறுவதற்கான முயற்சி உடையவராக இருத்தல் வேண்டும்
- ஊடகத்துறையில் பட்டயக் கற்கை அல்லது சான்றிதழ் கற்கையை முடித்திருப்பது மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.
- சுய உந்தல், தம்மைச் சுற்றி நடப்பவை பற்றிய விழிப்புணர்வு, பரபரப்பான நடப்பு விவகாரங்கள் பற்றிய நுகர்வு என்பன முக்கியம்.
- பல்துறை அறிவும் வெவ்வேறு தலைப்புகளில் எழுதும் திறனும் அவசியம்.

வேண்டுகைகளையும் சுயவிவரத்தையும் அனுப்ப,

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
editor@uthayan.com

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தோருக்கு சிறப்பு வாய்ப்பு


## நிறத்தை நம்பாதே




ஒரு குளத்தில் பல வகையான வண்ண மீன்கள் வாழ்ந்து வந்தன. மீன் குஞ்சுகள் எப்பொழுதும் கரையோரம் கூடி விளையாடிக் கொண்டிருக்கும்.

அதில் சோமு, சிண்டு என்ற மீன்கள் ஒரு நாள் விளையாடி கொண்டிருக்கும்போது ஏய் சிண்டு... என்னைப் பிடி பார்க்கலாம் என்றான், என்கிட்டேயே சவால் விடுகிறாயா? இப்ப பாரு, ஒரு நொடியில் பிடிக்கிறேன் என்று சொல்லி விளையாடி கொண்டிருந்தது. அப்போது கரையில் ஒரு காகம் புழுக்களைக் கொத்திக் கொண்டிருப்பதை பார்த்து 'ஏய் சோமு, அங்கே பார் அவன் எவ்வளவு கறுப்பாக இருக்கிறான்.' அவன் குரலை நீ கேட்டிருக்கிறாயா? அருவருப்பாக இருக்கும். அவனை பார்த் தால் பயமாக இருக்கிறது வா போய்விடலாம் என்று சிண்டு சொன்னதும், எல்லா மீன்களும் குளத்துக்குள் வேகமாகச் சென்றன. அவசர அவசரமாக மீன்கள் உள்ளே சென்ற போது 'பசங்களா? ஏன் இப்படி ஓடி வர்றீங்க? என ஒரு பெரிய மீன் கேட்டது கரையில் காகம் இருக்கு. அதனோட நிறமும் குரலும் பயமா இருக்கு ? அதான்... ஓ....! காகமா, அதால நமக்கு எந்த ஆபத்தும் இல்லே. உருவத்தை மட்டுமே வெச்சு ஒருத்தரைப் பற்றி தப்பா நினைக்கக் கூடாது என்று அந்த பெரிய மீன் சொல்ல, மற்ற மீன்குஞ்சுகள் 'இந்த தாத்தாவுக்கு வேற வேலை இல்லை. எப்பவும் உபதேசம் தான், வாங்க போகலாம். எனக் கூறிச் சென்றது. அடுத்த நாள் வந்தது; குளத்தின் கரையில் கொக்கு ஒன்று அமர்ந்து இருந்தது; அதை பார்த்த மீன் குஞ்சுகள், ஏய் அங்கே பாரு வெள்ளையா... 'அட! என்ன பறவை அது? வெள்ளையா எவ்வளவு அழகாக இருக்கு! அலகும் நீளமா கச்சிதமா இருக்கு. அடடே! அதனோட நடையைப் பாரேன். மீன் குஞ்சுகள் பேசும் சத்தம் கேட்டு குளத்தை நெருங்கியது கொக்கு. உடனே மீன் குஞ்சுகள்; அண்ணே! நீங்க ரொம்ப அழகாக இருக்கிறீங்க. உங்க அலகைத் தொட்டுப் பார்க்கலாமா? கொக்குக்கு ஒரே கொண் டாட்டம் ; ஓ! தொட்டுப் பாரேன். ஒரு மீன் குஞ்சு கொக்கை நெருங்க, கொக்கு மீனை கவ்வியது. நல்லா மாட்டினியா? என்றது. மாட்டிய மீன் ஆ! என்னை விட்டு விடு! என்று கெஞ்சியது. இதை பார்த்த மற்ற மீன் குஞ்சுகள் ஆபத்து... ஓடுங்க! ஓடுங்க! என்று குளத்துக்குள் சென்றன.

அந்த கொக்கு கவ்விய மீனுடன் வானத்தில் சென்று மறைந்தது. மற்ற மீன் குஞ்சுகள் ; அந்த தாத்தா மீன் சொன்னது சரியாகப் போச்சுது. அழகை மட்டும் பார்த்து ஒருத்தரோட பழகக் கூடாது. ஆமாம்! ஆமாம்! என்று உறுதி எடுத்துக் கொண்டன. அன்று முதல் மற்ற மீன் குஞ்சுகள் கவனமாக இருந்தன. சந்தோஷமாக வாழ்ந்தன.

# ஒருமுறையே வென்றார் மஹிந்த அதுவும் பிரபாகரன் உதவியாலே

## பிரதமர் ரணில் கூறுகின்றார்



கொழும்பு, பெப்.23
மஹிந்த ராஜபக்ஷ என்னுடன் ஒரு தடவையே தேர்தலில் போட்டியிட்டார். அதில் சுமார் ஒன்றரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அதுவும் பிரபாகரன் உதவியால்தான். – இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

வென்னப்புவவில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மஹிந்தவை அதிகாரத்துக்குக் கொண்டுவரச் சிலர் தயாராக இருக்கின்றனர். அதன் ஆரம்பமே நுகேகொட கூட்டம். அதை நான் வெறுக்கவில்லை. – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எது எப்படி இருப்பினும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்டால் அவரைத் தோற்கடிக்கத் தயாராக இருக்கின்றேன்– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# ஆட்சியாளர்கள் அனைவரும் இனப்படுகொலையாளிகளே

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப்.23
நாங்கள் ஆட்சி மாற்றத்துக்காக வாக்களித்தாலும் கூட ஆட்சிக்கு வந்தவர்கள் இனப்படுகொலை செய்யவில்லை என்று கூறுவதற்க நான் தயாராக இல்லை. எல்லோருமே இனப்படுகொலை செய்தவர்கள் தான். மஹிந்த ராஜபக்ஷ அதிகமாக செய்துள்ளார். சந்திரிகா பண்டாரநாயக்கா, ரணில் விக்கிரமசிங்க, பிரேமதாஸ, ஜே.ஆர். ஜெயவர்த்தனா என அனைவருமே இனப்படுகொலையாளிகள்தான் அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. – இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்.

கிளிநொச்சியில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனினுடைய "ஜெனிவா தீர்மானமும் மெய்நிலையும் அரசியலும் ஒரு நோக்கு" என்னும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

"முதல் முதலாக இந்த இனப்படுகொலை என்ற சொல் ஹிட்லர் நாசிப் படைகளால் யூத இனத்தை அழித்த போது போலந்து நாட்டிலே வசித்த யூத இனத்தைச் சேர்ந்த ராம போல் டெமினி என்ற ஒரு அறிஞரால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால், இன்று இனப்படுகொலை என்ற அந்த விடயத்தை எமது வட மாகாண சபை முதன்முதலாக, உத்தியோகபூர்வமாக நிறைவேற்றியிருக்கின்றார்கள். அதை நான் கிழக்கு மாகாணத்தில் பிறந்தவன் என்ற வகையிலே வடக்கு மாகாண சபையைப் பாராட்டுகின்றேன்."– என்றும் தெரிவித்துள்ளார்.

"இந்த இனப்படுகொலை தீர்மானம் எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்திலும், கிழக்க மாகாண சபையிலும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை இங்கு அமர்ந்திருக்கின்ற கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர், உறுப்பினர்கள் முன்னெடுக்கவேண்டும், முயற்சி செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது."– என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-21)

# சுத்தமான குடி தண்ணீருக்கு 100 நாள் திட்டத்தில் முதலிடம்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு, பெப், 23
இரசாயனப் பதார்த்தங்களின் கலப்பால் சிறுநீரகநோய்கள் அதிகரித்து வருகின்றது. அதைக் கருத்தில் கொண்டு சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீரைப்பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அரசின் 100 நாள் செயற்றிட்டத்தில் இதற்கு முக்கியத்துவம் அளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. – இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை பதவியா பிரதேசத்துக்கு, பிரதேச தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரிகளுடன் சென்று நிலைமையைப் பார்வையிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்போது நீரில் கலந்துள்ள இரசாயனப் பாதார்த்தங்களை அகற்றாக்கி, நீரைச் சுத்திகரிப்பதற்கு உதவும் இயந்திரத்தையும், அதன் பொறிமுறையையும் பதவியா நகருக்கு அருகிலுள்ள பராக்கிரமபுர என்ற கிராமத்துக்குச் சென்று, அமைச்சர் ஹக்கீம் பார்வையிட்டார். அங்கு 700 குடும்பங்களுக்கு நாள் தோறும் தலா 40 லீற்றர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்படுகின்றது.

அமைச்சரின் இந்தப் பயணத்தின் போது சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஹிலால் சில்வா, வடமாகாணபிரதிப் பொதுமுகாமையாளர் ரி. பாரதிதாசன், இளைப்பாறியமேலதிகப் பிரதிப் பொது முகாமையாளரும், நீர் சுத்திகரிப்பில் நிபுணத்துவம் பெற்றவருமான டீ.என்.ஜெ. பேர்டிணன்டோ ஆகியோர் உடனிருந்தனர். (ற-10)

# 18 ஆயிரம் படையினர் மீள படைப்பிரிவுகளுக்கு

கொழும்பு, பெப்.23
முன்னைய அரசால் ப்ல்வேறு தொழில்களில் ஈடுபடுத்தப்பட்ட 18 ஆயிரம் படையினரை மீண்டும் அவர்களது படைப் பிரிவுகளுக்கே திருப்பி அனுப்புவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

படையினரின் கௌரவத்தை பாதிக்கும் பணிகளில் அவர்களை ஈடுபடுத்துவதில்லை என்ற தேர்தல் வாக்குறுதிக்கு அமையவே இந்த நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

முன்னைய அரசு 18 ஆயிரம் படையினரை பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் வேலைக்கு அமர்த்தியிருந்தது. அவர்கள் கூலித் தொழிலாளர்களின் பணிகளில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர்.

அவர்களுடைய வேலையை பாதுகாப்பதும், அவர்களுடைய சேவையை முன்னைய அரசு போன்று துஷ்பிரயோகம் செய்யாமலிருப்பதுமே புதிய அரசின் நோக்கம். அதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக நகர அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் தினேஷ் கன்கன்ட தெரிவித்துள்ளார்.

எனினும் தொழில்நுட்ப தரத்தில் பணியாற்றியபடையினரைதொடர்ந்தும் வைத்துக்கொண்டு, ஏனையவர்களை திருப்பி அனுப்பவுள்ளோம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# சிறிதரன் எம்.பியின் நூல் நேற்று வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், பெப்.23
நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் 'ஜெனிவா தீர்மானமும் மெய்நிலையும் அரசியலும் ஒரு நோக்கு' என்னும் நூல் வெளியீட்டு விழா நேற்று கிளிநொச்சி கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் கே.வி.தவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நூலை மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் வெளியிட்டு வைத்தார். முதல் மூன்று பிரதிகளையும் முள்ளிவாய்க்கால் மண்ணில் இருந்து தனது தந்தையை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தவரும், காயமடைந்த நிலையில் செட்டிகுளம் முகாமில் தனது தந்தையை இழந்த மாணவனுமான மதிவாணன் தூயவன், கப்டன் பாணனின் தாய் ஆனந்த ராசா வள்ளியம்மை, கரும்புலி மில்லருடைய தாய் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

விருந்தினர்களாக நல்லை ஆதீன முதல்வர் வணக்கத்துக்குரிய ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராசா, பொதுச்செயலாளர் கி.துரைசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், அரியநேத்திரன், வினோநோகராதலிங்கம், கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் சி.தண்டாயுதபாணி, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், கொழும்பு பல்கலைக் கழக சட்ட பீடாதிபதி வி.ரி. தமிழ்மாறன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேசசபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், அரசியல் ஆய்வாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-21)

# மஹிந்த இன்றி தேர்தல் வெற்றி சாத்தியமல்ல

## முன்னாள் அமைச்சர் விமல் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.23
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்றி தேர்தலில் வெற்றியீட்டுவது சாத்தியமற்றது என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

"சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பிளவுகளை ஏற்படுத்த முயற்சிக்கவில்லை. 58 லட்சம் மக்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்துள்ளனர். அன்னப்பட்சிக்கு வாக்களித்த பலர் அதிருப்தி அடைந்துள்ளனர். மீண்டும் மஹிந்தவுக்கு வாக்களிப்பதற்காக காத்திருக்கின்றார்கள்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவார், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் நானும் தேர்தலில் போட்டியிடுவேன். அமைச்சுப் பதவிகள் இன்றி இருப்பதில் எந்தவித சிக்கல்களும் கிடையாது. அமைச்சுப் பதவி எங்களுடன் ஒட்டிக் கொண்ட விடயமல்ல. எனவே பதவி இன்றி இருப்பதில் எந்தவித பிரச்சினையும் கிடையாது."– என்றும் அவர் கூறியுள்ளார்.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**மணமகள் தேவை**
இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த 1980 ஆம் ஆண்டு விசாகம் 3 ஆம் பாதம் $22\frac{1}{2}$ பாவமுடைய 4 இல் செவ்வாயுமுடைய சொந்த வியாபாரம் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 077 742 2604
(54211)

**பணியாளர்கள் தேவை**
அனுபவமுள்ள
சிட்டை எழுதுநர்
விற்பனையாளர்கள்.
தொடர்பு: 077 847 3222
(57235)(4.3.7)

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

**வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2015**

எமது கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 24.02.2015, செவ்வாய்க்கிழமை பிப 1.30 மணி அளவில் அறிவிக்கப்பட்ட நிகழ்வொழுங்கில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றேன்.

– அதிபர் –

# வீரவன்ஸவின் மனைவி வாக்குமூலத்துக்கு தயார்

## தேசிய சுதந்திர முன்னணி கூறுகின்றது

கொழும்பு, பெப்.23
இரண்டு வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களை பயன்படுத்தியமை தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பில், முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி சசி வீரவன்ஸ பொலிஸாருக்கு வாக்கு மூலம் வழங்கத் தயாராக இருக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தேசிய சுதந்திர முன்னணி இதனைத் தெரிவித்துள்ளது.
வெவ்வேறு தகவல்களை வழங்கி குறித்த இரண்டு கடவுச் சீட்டுக்களை அவர் பெற்றுக் கொண்டிருப்பதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.
தற்போது அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாவும், குணமடைந்த பின்னர் பொலிஸாருக்கு இது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவார் என்றும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது. (ற)

# பரசிட்டமோல் போடுவதில் கர்ப்பிணிகளே அவதானம்

கொழும்பு, பெப்.23
கர்ப்பிணித் தாய்மார்கள் பரசிட்டமோல் பயன்படுத்துவதால் பிறக்கும் குழந்தைகளுக்கு பக்கவிளைவுகள் ஏற்படும் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
இந்த ஆய்வை நோர்வே நாட்டைச் சேர்ந்த ஒஸ்லோ பல்கலைக்கழகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.
சுமார் 48 ஆயிரம் கர்ப்பிணித் தாய்மார்களை உள்வாங்கி மூன்று வருடகாலத்துக்கு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளதாக, கொழும்பு ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் ரத்ன சிறி ஏ ஹெவாகே தெரிவித்தார்.
வைத்தியர்களின் பரிந்துரை இன்றி கர்ப்பிணிகள் பரசிட்டமோல் பெற்றுக் கொள்வதை முற்றிலும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# நுகேகொட கூட்டத்துக்கு 5 லட்சம் பேர் வரவில்லை

## ஜாதிக ஹெல உறுமய கூறுகின்றது

கொழும்பு, பெப்.23
நுகேகொடவில் நடைபெற்ற கூட்டத்துக்கு லட்சக்கணக்கான மக்கள் வரவில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.
"நுகேகொடையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்காக இடம்பெற்ற பேரணிக்காக ஐந்து லட்சம் பேர் வந்தார்கள் என்று கூறுகிறார்கள். அப்படிக் கூறுவது போன்று, ஐந்து லட்சம் பேர் வந்திருந்தார்கள் என்றால், நுகேகொடையில் இட வசதி எவ்வாறு போதுமானதாக இருந்திருக்கும் என்று கேட்கத் தோன்றுகின்றது"– என்று அந்தக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"காலி முகத்திடலில் புனித பாப்பாண்டவரின் வருகையின் போது ஐந்து லட்[illegible] மக்கள் வந்ததாக கூறினார்கள். அதை நம்ப முடியும். தோல்வியடைந்து மன வேதனையுடன் இருப்பவர்களின் துக்கத்தை தீர்ப்பதற்கு ஒரு வழி வேண்டும் என்பதற்காக அரச ரீதியில் இரண்டு மூன்று பேர் கூறும் இவ்வாறான கதைகளின் மூலம் மக்களின் தீர்ப்பை தீர்மானிக்க முடியாது. பேரணிக்கு மக்கள் வந்தார்கள் என்பதற்காக மக்களின் தீர்ப்புகளை மதிப்பிட முடியாது."– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# இ.போ.சவுக்கு மஹிந்த 14 கோடி நிலுவை




கொழும்பு, பெப்.23
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை போக்குவரத்து சபைக்கு 14 கோடியே 25 லட்சம் ரூபாவை வழங்க வேண்டியுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.
கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பரப்புரைக் கூட்டங்களுக்குஇலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் பயன்படுத்தப்பட்டன. அதற்காகவே 14 கோடியே 25 லட்சம் ரூபாவை மஹிந்த வழங்க வேண்டியுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### சதாசிவம் சிதம்பரநாதன்



சாவகச்சேரி கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிதம்பரநாதன் நேற்று முன்தினம் (21-02-2015) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும், அனுஷியா (அனுஷா - ஜேர்மனி), அனந்தன் (நந்தா - லண்டன்), அச்சுதன்(சுதா - ஜேர்மனி), அஜந்தன் (அஜன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரராஜன், சுமித்திரா, சுஜாதா, காந்தரூபி ஆகியோரின் அன்பு மாமனாரும் , காலஞ் சென்றவர்களான நடராஜா, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மிதுன், கிரன், தியானி, சிந்தியா, கியாரா, விஸால், விதுரன், வினுசன், குயேந்திரா, பவித்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24-02-2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
077 742 4549

தகவல் :
சி.அஜந்தன்.
(அஜன் - மகன்)

### கதிர்காமநாதன் ஐயா விஜயச்சந்திரன் (ராசன் ஐயா)




சுழிபுரம் பறாளையைப் பிறப்பிடமாகவும் ஹொலண்டை (Holland) வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமநாதன் ஐயா விஜயச்சந்திரன் (ராசன் ஐயா) (21.02.2015) சனிக்கிழமை இறை வனடி சேர்ந்தார்.
அன்னார் பறாளாய் ஈசுவர விநாயகர் தேவஸ் தான பரம்பரை ஆதீன கர்த்தாவும், அர்ச்சகருமாகிய அமரர் கதிர்காமநாதன் ஐயர் அமரர் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், வதனாவின் (ஹொலண்ட்) அன்புக் கணவரும், பிரசன்னாவின் பாசமிகு தந்தையும், பாலச்சந்திரன் (கனடா), லலிதாதேவி (கனடா), பத்மராஜனி, விமலச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோ தரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.02.2015 புதன்கிழமை ஹொலண்டில் (Holland) நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 817 7020

தகவல்:
து.சுரேந்திரன் குடும்பம்

### இரத்தினம் - கந்தசாமி



(நீர்வேலி காமாட்சி அம்பாள் கைத்தொழில் நிலையத்தில் லிகிதராக கடமையாற்றியவர்)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கு நீர்வேலியை வசிப் பிடமாகவும் கொண்ட இரத்தினம் கந்தசாமி (21.02.2015) சனிக் கிழமை France நாட்டில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் நந்தா, சசிகரன், சுபோகரன் ஆகியோரின் பாசமிகு அப்பாவும், சு.கதிரவேலு, ச.ஜெயந்தினி ஆகியோரின் மாமனாரும், யஸ்மினி, ஜெனிஸ், யனுஸ், யஸ்ரின், அல்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் (தாத்தா), பரமேஸ்வரி, ஜெகநாதன் காலஞ்சென்றவர்களான சிவலோகநாதன், நாதன் மற்றும் லோகநாதன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்ஸ் நாட்டில் நடைபெறும் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தையடி,
இமையாணன்,
உடுப்பிட்டி.

தகவல் : இ.ஜெகநாதன்
(மாஸ்டர் சகோதரன்)
021 226 4297

## மரண அறிவித்தல்

### இராயப்பு யோனிக்கம்




யாழ். புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சிலாபத்தை வசித்து வந்த வருமாகிய திருமதி இராயப்பு-யோனிக்கம் (அன்னம்மா) கடந்த (20.02.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற இராயப்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற புஸ்பராணி (தவமணி), யேசுதாசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், வின்ஷன் (சிலாபம்), மனோன்மணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், தனுஷ்-பிரபாகர்(சுவிஸ்), துஷா-பகீரதன் (கனடா), கிரிஜா -நிஷாந்தன் (லண் டன்), ஈழதாசன் - நிரோஷினி, தமிழினி, தர்ஷினி (கனடா) ஆகியோரின் அன் புப் பேர்த்தியும், திஷான், பிரீத்தி, ரைரோன், பிரீஷா, பவிஷன், அட்றியன், எய்டன், கேற்லின் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்கம் நாளை (24.02.2015) செவ்வய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து சிலாபம் புனித பெர்ணதேத் தம்மாள் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி ஆராதனையுடன் சிலாபம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : P. வின்ஷன் (சிலாபம்) மருமகன்,
077 5548306, 0325788690

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கனகசிங்கம்



(முன்னாள் பொது முகாமையாளர், பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், கிளிநொச்சி)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கனகசிங்கம் 22.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகன் - வள்ளி தம்பதியினரின் மருமகனும், மலர்மணியின் அன்புக் கண வரும் கனகமணியின் அன்புச் சகோதரனும், சிவாஜினி,முல்லைமாறன் (கிராம அலுவலர் - சரசாலை வடக்கு, சமாதான நீதிவானும் சுவின்கோல்ட் உரிமை யாளரும்), சுதாஜனி (ஆசிரியர், யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தி யாலயம்), கனகவிஜயன்(நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், றோகினி (சுவிஸ்), சுகந்தினி (சுவிஸ்), சுதர்சன் (அமரர்), அஸ்வினி, சுகிர்தன் (சுவிஸ்), கீர்த்திகன் (சுவிஸ்) ஆகியோரின் தாய்மாமனும், லூயிஸ்மன்ரேசா (உரிமையாளர் - விதுசா களஞ்சியம், மட்டுவில்), மஞ்சுளா (ஆசிரியை யா/கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம்), சிவதாசன் (ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், துணுக்காய், சமாதான நீதிவான்), சோபிதா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் தில்லைநாதன், சின்னம்மா, சரவணத்து, செல்லப்பா, சின்னராசா (டென்மார்க்), செல்வராசா (சுவிஸ்), பொன்னம்மா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், வினிஸ்ரன், விதுஷா, லவனிகா, கவின், தர்வின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.02.2015 (செவ்வாய்க்கிழமை) மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சின்னத்தா இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்.
077 814 6954

## இடமாற்றம் கோரும் யோஷித்த ராஜபக்ஷ

கொழும்பு, பெப்.23
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு பிரிவில் தன்னை நியமிக்குமாறு யோஷித்த ராஜபக்ஷ வேண்டுகோள் முன்வைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.
யோஷித்த ராஜபக்ஷ தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியினால் முன்வைத்த முறைப்பாடு தொடர்பாக பி.பி.ஸி செய்தி சேவைக்கு கருத்து வெளியிடும்போதே அமைச்சர் ருவான் விஜேவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.
மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்த முறைப்பாடு தொடர்பாக ஏற்கனவே கடற்படை தளபதியுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார். யோஷித்த ராஜபக்ஷ எவ்வாறு கடற்படையில் இணைந்துகொண்டார் என்பது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## திஸ்ஸவின் உறுப்புரிமை நீக்கம்

கொழும்பு, பெப்.23
ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவின் கட்சி உறுப்புரிமை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளது.
கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கட்சியின் தீர்மானத்தை மீறி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியதே இதற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது.
ஐக்கிய தேசியக் கட்சியின் ஒழுக்காற்று விசாரணைக்குழு முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைய திஸ்ஸ அத்நாயக்கவின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது என்று அந்தக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.
குறித்த தீர்மானத்தை திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு உத்தியோகபூர்வமாக கடிதம் மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது. (ற)

## குடும்ப மரம் எனது கொள்கை இல்லை

கொழும்பு, பெப்.23
குடும்ப மரமோ, குடும்பவனாந்தரமோ எனது கொள்கை இல்லை என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
"முழுநாடும் எனது ஊர், அனைத்து மக்களும் எனது உறவினர்கள்."– என்று குறிப்பிட்டுள்ள அவர், "நாட்டை அபிவிருத்தி செய்ய ஒன்றிணைந்துள்ளோம்."– என்றும் குறிப்பிட்டுள்ளார். (ற)

## இலங்கை - பாக். இடையே அணுசக்தி ஒப்பந்தம்

கொழும்பு, பெப்.23
இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைசெழுத்திடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் இந்த நடவடிக்கைமேற்கொள்ளப்படவுள்ளதாகபாகிஸ்தான் ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.
மார்ச் 31 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாகிஸ்தான் பயணம் செய்யவுள்ளார். அதற்குமுன்னதாக அவர் சீனாவுக்கு பயணம் மேற்கொள்வார் என்றும் கூறப்படுகிறது. (ற)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



பளைப்பிரதேச சபையின் காவலாளியும்
எமது சங்க உறுப்பினருமாகிய
கணபதிப்பிள்ளை யோகராஜா
நேற்று (22.02.2015) அகாலமரணமான
தையிட்டு அன்னாரின் பிரிவால்
துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பளைப் பிரதேச சபை
ஊழியர் நலன்புரி சங்கம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஞாகன்
இராசதுரை

பிறப்பு
16.08.1944

இறப்பு
06.03.2014



06.03.2014 அன்று
அமரத்துவம் அடைந்த எமது
அன்புத் தெய்வத்தின்
ஓராண்டுப் பூர்த்தியை ஆழ்ந்த துயருடன் நினைவு கூருகின்றோம். எம்முடன் அன்னார் வாழ்ந்த காலங்கள் என்றுமே மனதைவிட்டு நீங்காத நினைவுகள் ஆண்டுகள் ஒன்றென்ன பல சென்றாலும் அவரது நினைவுகள். பசுமையாகவே இருக்கும்.

163/2, நாவலர் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

நினைவு கூரும் (57238(4.3.6)
குஞ்சன் குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
கணபதிப்பிள்ளை
இராசையா
(ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியர்)

தோற்றம்
26.01.1933

மறைவு
05.03.2014

திதி : பூர்வபக்க பஞ்சமி (23.02.2015)

கண்ணியமான கணவராகவும், சிறப்பு மிக்க தந்தையாகவும், பாசம் மிக்க மாமனாகவும், அரவணைப்பான அன்பு அப்பப்பா, அம்மப்பாவாகவும், என்றென்றும் அழியாத புகழோடும் கடமையில் கடமை தவறா வீரனாகவும் இருந்தவரே! காலங்கள் கடந்தாலும் எங்கள் இதயத்தை விட்டு அழியாதையா உங்கள் நினைவலைகள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல 48, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 300 6210
(57236)(5.3.7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
05 . 04 . 1934



இறப்பு
05 . 03 . 2014

அமரர்
இராசதுரை அன்னம்மா

எமக்கு உயிர் தந்த எம் தாயே!
எம்மை அழைத்து உயிர்நீத்த எம் தெய்வமே!
ஏழ்மையின் கொடுமையிலும் எமையேந்தி
ஏற்ற வாழ்வு படைத்த எம் கருணையே
எம் உள்ளத்தில் என்றும் நீ நிலைப்பாயே

அம்மா எம்மை அழைத்தீர்கள்
எம்மோடு வாய்மொழி பேசினீர்கள்
தெய்வத் திருமகளாகத் திகழ்ந்தீர்கள்
தெய்வமாகச் சென்றீர்கள்

பிள்ளைகளின் பட்டினி தான் சுமந்து
எமக்காக உதிரத்தை பாலாய்த் தந்த எம் தாயே!
என்ன தவம் செய்தோமோ உன் கருவறையில் .
துயிலும் வரம் பெற்றோமே

இன்னொரு ஜென்மம் இருப்பின் உன் கருவறையில்
மறுபிறப்பு எடுக்க வேண்டும்
இல்லையேல் மறுஜென்மம் தேவையில்லை தாயே!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

உரும்பிராய் மேற்கு,
அன்னங்கை, கோண்டாவில்.

இராசதுரை – குடும்பம்.
(யோகராசா – 077 271 9610)
(57237(4.5.6.7)

## 31 நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
04 . 07 . 1930



மறைவு
24 . 01 . 2015

### அமரர் தர்மலிங்கம் மகேஸ்வரி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வட்டு-கிழக்கு சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி தர்மலிங்கம் மகேஸ்வரி அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகைதந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (23.02.2015) திங்கட்கிழமை மு.ப.10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"இந்திரவிலாஸ்"
வட்டு-கிழக்கு. சித்தன்கேணி

குடும்பத்தினர்.

### சுதந்திரதின

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு;

பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் தேசிய தினக்கொண்டாட்டங்கள் நடைபெறுவதற்கு முன்னதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இரகசியப் புலனாய்வுத் தகவல் ஒன்று கிடைத்தது. கோட்டே ஜயவர்த்தனபுர நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறவிருந்த தேசிய தின வைபவங்களின்போது தலைவர் ஒருவரை அல்லது பல தலைவர்களை குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைத்தது.

1981 ஆம் ஆண்டு எகிப்திய அதிபர் அன்வர் சதாத் கொல்லப்பட்ட சம்பவம் போன்று இது இடம்பெறவிருப்பதாகவும் தகவல் கூறியது. அந்த சமயத்தில் எகிப்தில் இராணுவ அணிவகுப்பொன்றில் கலந்துகொண்ட இராணுவ சிப்பாய்கள் தம் வாகனங்களில் இருந்து கீழ் இறங்கி தலைவர்களை நோக்கி துப்பாக்கிகளால் சுடத் தொடங்கினார்கள்.

அதேபோன்று தாக்குதல் நடத்தும் திட்டம் குறித்த இரகசியக் தகவலை பாதுகாப்பு செயலர் பி.எம்.யு.டி. பஸ்நாயக்கவே முதலில் பெற்றிருக்கிறார். உடனடியாக இதை ஜனாதிபதிக்கு அறிவித்துவிட்டு அவருடன் அமர்ந்து மாற்று நடவடிக்கை பற்றி ஆலோசனை நடத்தினார்.

எதிர்பாராத அசம்பாவிதங்கள் எதுவும் நிகழாமல் இருக்கும் விதத்தில் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக இந்தத் தகவலை வெளியிட்ட வட்டாரம் கூறியது.

இந்தத் தாக்குதல் யார் மீது நடத்தப்படவிருந்தது யாரால் நடத்தப்படவிருந்தது என்பதோ தெரிவிக்கப்படவில்லை. (ப)

### ஐ.நா. முடிவை

அங்கு கருத்துத் தெரிவித்த சிவில் சமூக அமையத்தினர்,

"ஜெனீவா அறிக்கை ஒத்தி வைக்கப்பட்டதை கண்டித்தும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்கு முன் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நேரடியாக எமது மக்களின் சாட்சியங்களை பதிவு செய்யுக் கோரியும், எமது மக்களின் விருப்பை வெளிப்படுத்தும் கையெழுத்துப் போராட்டத்தை நாளை ஆரம்பிக்கவுள்ளோம்."– என்று தெரிவித்தனர்.

"மன்னார் ஆயரின் கையெழுத்துடன் இந்தப் போராட்டம் ஆரம்பமாகவுள்ளது. வடக்கு – கிழக்கு மாத்திரமல்லாமல், நாடெங்கிலும் உள்ள பல லட்சம் தமிழ் மக்களிடம் கையெழுத்துப் பெறப்படும். அதை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அனுப்புவோம்.

வடக்கு மாகாணசபையில் கடந்த 10 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட வரலாற்று முக்கியத்துவமான தீர்மானத்தை வரவேற்கின்றோம். இலங்கையில் தமிழர்களுக்கு நடந்தது, நடந்து கொண்டிருப்பது இன அழிப்பு என்று குறிப்பிட்ட அந்தத் தீர்மானத்தை தமிழ் சிவில் சமூக அமையம் முழுமையாக வரவேற்கின்றது"– என்றும் தெரிவித்த னர். (ற–5)

### ஒரே தேசம்

'இந்த நிகழ்வுக்கு பல அமைச்சர்கள் வருதாகக் கூறப்பட்டது. அதேவேளை முரண்பாடான செய்திகளும் இருந்தன. இது அரசியல் நோக்கத்துக்காக நடத்தப்படும் மாநாடு என்றும் கூறியிருந்தார்கள். ஆனால் அமைப்பின் தலைவரும் செயலாளரும் தெளிவாகக் கூறுகின்றனர் இது அரசியல் நோக்கற்றது என்று.

இளைஞர்களுக்காக கல்வியில் என்ன மாற்றத்தை செய்யவேண்டும் என்று நாங்கள் சிந்திக்க வேண்டும். "யாருமே நற்பிரஜையாக பிறப்பதில்லை. அதேபோல எந்தவொரு நாடும் உண்மையில் ஜனநாயக நாடாகப் பிறப்பதில்லை. ஆனால் இவையிரண்டும் ஒரு நீண்ட செயன்முறை மூலம் உருவாக்கப்படுகின்றன"– என்று கொபி.அனான் கூறினார்.

உண்மையான ஜனநாயக நாட்டையும் நற்பிரஜைகளையும் உருவாக்குவ தில் முக்கியமான பங்கு இளைஞர்களுக்கு உண்டு. இளைஞர் என்ற சொற்பதத்துக்கு பல வரைவிலக்கணங்கள் உள்ளன. எனது கருத்துப்படி இளைஞர்களுக்குள் சிறுவர்களும் உள்ளடக்கப்படுவர். மாற்றம் என்பது கல்வியில் வேண்டும். குறிப்பாக ஆரம்பக்கல்வி, கற்பிக்கப்படவேண்டிய விடயங்கள், எந்தக் கற்கை நெறிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்."– என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

"ஒருவரது கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டால்போதாது. அவர் அந்தக் கல்வியைத் தொடர்வதற்கு அவரது வாழ்க்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இலங்கையில் கடந்த மூன்று தசாப்த கால உள்நாட்டுப்போரின் பின்னர் இன்னும் மக்கள் முகாம்களில் வாழ்கின்றனர். கல்வியில் இவர்களுக்கு ஈடுபாடு வரவேண்டும் என்றால் இவர்களது முகாம் வாழ்க்கை முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

பலர் தங்கள் சொந்த நிலங்களை விட்டு அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இவர்கள் கல்வியை பற்றி சிந்திக்கவேண்டுமென்றால் அவர்கள் சொந்த இடங்களில் குடியேற்றப்பட வேண்டும். இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட மாற்றங்கள். தனியே கல்வி மாற்றத்தால் நிரந்தர மாற்றத்தை உருவாக்க முடியாது. இந்த மாற்றத்தை ஏற்படுத்த ஒன்றிணைந்துள்ள இளைஞர்கள் இந்த அரசை மாற்றத்துக்காக வலியுறுத்தவேண்டும். பெயருக்கு நல்லாட்சி என்று சொல்லிவிடமுடியாது. சொல்லிக் கொண்டிருப்பதால் நல்லாட்சி ஏற்பட்டுவிட முடியாது. வடக்கு கிழக்கு மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். விரும்பினார்கள். அதை கடந்த ஜனாதிபதி தேர்தலில் காட்டியிருந்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த மாற்றம் இங்கே நடக்கின்றதா? என்ற கேள்வி இங்கே இருக்கின்றது."– என்றும் அவர் தெரிவித்தார்.

"கல்விக்கான மாற்றம் என்பது அரசு, சமூகம், இளைஞர்கள் என்ற மூன்று பிரிவினரையும் உள்ளடக்கியது. அரசு கல்விக்காக அதிக முதலீட்டை வழங்கவேண்டும். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் இதனை வலியுறுத்திப் பல போராட்டங்களை முன்னெடுத்துள்ளது. ஆனால் சம்மந்தப்பட்ட தரப்பினர் செவிசாய்ப்பதாய் தெரியவில்லை. அவர்களுக்குத் தெரியும் கல்வி கற்ற சமூகத்தை உருவாக்கினால் அவர்களை ஏமாற்றுவது கடினம் என்பது.

பாடசாலை மட்டங்களில் காணப்படும் வேறுபாடுகள் நீக்கப்படவேண்டும். சில பாடசாலைகளில் வளப் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் நிலவுகின்றன. அதேவேளை சில பாடசாலைகளில் மேலதிக வளங்களும் ஆளணியினரும் உள்ளனர். கல்விக்காக குரல் கொடுக்கும்போது குடும்பங்களின் பொருளாதார நிலையையும் கவனத்தில் கொள்ளவேண்டும். குடும்பத்தினருக்கு பிள்ளைகளுக்கு கல்வி புகட்டக்கூடிய அளவு பொருளாதார வசதி இல்லாத பட்சத்தில் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்வியை நீதி, நேர்மையாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியாரிடம் இவற்றை எதிர்பார்க்க முடியாது. அவை வருமானத்தை அடிப்படையாகக் கொண்டவை."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இளைஞர்கள் தவறை தட்டிக்கேட்க வேண்டும். கல்விக்காக குரல் கொடுக்கவேண்டும். மாற்றத்துக்காக சமூக மட்டத்தில் உழைக்க வேண்டும். மாற்றம் அமைப்பு மற்றும் இந்த நிகழ்வு அரச சார்பானதா என்பதை காலப்போக்கில்தான் தீர்மானிக்கமுடியும். தமிழ் மக்கள் நன்றாக அனுபவப்பட்டு கற்றுக் கொண்டுவிட்டார்கள். இனியும் ஏமாற்ற முடியாது. ஏமாற்ற இடமளிக்கவும் கூடாது."– என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார். (ற–10)

### ஏமாற்றம்

நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டபோதே தம்முடன் எந்தவொரு கலந்தாய்வும் இல்லாது அழைப்பிதழில் தமது பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண அமைச்சர்கள் தரப்பில் அதிருப்தி வெளியிடப்பட்டது. அதுகுறித்து நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த மாற்றம் அமைப்பினருக்கு வடக்கு முதலமைச்சர் கடிதம் அனுப்பியிருந்தார்.

'இந்தக் கூட்டத்துக்கான திகதி எமது ஒப்புதலோ, கலந்தாய்வோ இல்லாது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நான் மற்றும் எனது அமைச்சர்கள் எவரும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்ற மாட்டார்கள் என்பதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று அதில் அவர் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடிதத்தின் பிரதிகள் குறித்த கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்த கொழும்பு அரசின் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, நவீன் திஸாநாயக்க, சம்பிக்க ரணவக்க, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. இந்த நிலையில் வடக்கு முதலமைச்சரும், வடக்கு அமைச்சர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. அதேவேளை கொழும்பு அரசிலிருந்தும் எந்தவொரு அமைச்சர்களும் கலந்து கொள்ளவில்லை. அதனால் விருந்தினர்கள் இல்லாமல் நடத்தப்பட்டது மாற்றம் நிகழ்வு.

அதேவேளை, நிகழ்வுக்குச் சென்றிருந்த அரச அதிகாரிகள் தாம் அலைக்கழிக்கப்பட்டதாக விசனம் தெரிவித்தனர். யாழ்.மாவட்டச் செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். எனினும் அவர்கள் பாதியிலேயே வெளியேறியதை அவதானிக்க முடிந்தது. இந்த நிகழ்வில் பங்கெடுக்குமாறு யாழ்.மாவட்டச் செயலகத்தால் பிரதேச செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதில் என்ன நோக்கத்துக்காக இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது, அதில் ஏன் பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்பது தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை தொடர்பு கொண்டு கேட்ட போது,

"இந்த நிகழ்வுக்கு நாங்கள் எந்த அனுமதியையும் வழங்கவில்லை. மத்திய – மாகாண அமைச்சர்கள் வருகின்றார்கள். மக்கள் பிரச்சினையைத் தீர்க்கும் நிகழ்வு என்று சொன்னதனால் பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களை பங்கெடுக்கச் சொன்னேன்"– என்று தெரிவித்தார்.

நிகழ்வில் இறுதிவரையில் மக்கள் பிரச்சினைகள் ஆராயப்படவில்லை. நிகழ்வு முடிவடைவதற்கு முன்னதாகவே அரச அதிகாரிகள் வெளியேறினர். (ற–10)

### உண்மையை

"ஹிட்லர் மேற்கொண்டதைப் போல துப்பாக்கியால் சுட்டுக்கொன்று அழிப்பது மாத்திரம் இன அழிப்பல்ல என்று தெரிவித்த ஆயர், பல்வேறு நுட்பமான நடவடிக்கைகள் மூலமும் ஓர் இனத்தை அழிக்கலாம். சிங்கள மக்களிடம் உள்ள அதி உச்சமான சிங்கள தேசிய உணர்வின் அச்சத்தால் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன"– எனவும் ஆயர் தெரிவித்துள்ளார்.

"தமிழ் மக்கள் தனித்துவமான சுயநிர்ணய உரிமை கொண்ட தேசிய இனம் என்று தெரிவித்த மன்னார் ஆயர், தமிழ் மக்களின் தேசிய உரிமைகளுக்கு இடமளிப்பதன் மூலமே இந்த நாட்டை அமைதிப்படுத்த இயலும். இலங்கை சுதந்திரம் அடைந்தது என்ற விடயத்தில் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் என்பது ஒரு மாயையாக திணிக்கப்பட்டது. தமிழ் மக்கள் இன்னமும் சுதந்திரத்தை அடையாத நிலையில் வாழ்கின்றனர்"– என்றும் அவர் கூறியுள்ளார்.

"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை நிறுத்திய இலங்கை அரசு, தமிழ் இனத்திற்கு எதிரான போரை இன்னமும் நிறுத்தவில்லை. தமிழ் மக்களின் உரிமைக்கு எதிராகவும் அபிலாஷைகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப் படுகின்றன"– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"தமிழ் மொழி மற்றும் நில அபகரிப்பு என்பது உலக சரித்திரத்தில் ஓர் இனம் எவ்வாறு அழிக்கப்பட்டதோ அவ்வாறு நடைபெறுகின்றது. இலங்கையில் நான்கு தடவைகள் தமிழ் மக்களுக்கு எதிராக இனக் கலவர நடவடிக்கைகள் இன அழிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. கட்டமைக்கப்பட்ட அந்த இன அழிப்பு தொடர்ந்தும் இடம்பெறுகின்றது."– என்றும் அவர் தெரிவித்தார்.

"மக்கள் போரில் கொல்லப்பட்ட பின்னர் தொடர்ந்தும் இந்த நாட்டில் தமிழ் மக்களை வாழவிடாது வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலைமையை உருவாக்கியதுடன் அரசே அவ்வாறு மக்களை அனுப்பும் நடவடிக்கைகளில் ஈடுப்பட்டது. சர்வதேச விசாரணை அறிக்கையைத் தள்ளிப்போடுவதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. எனினும், செப்ரெம்பர் மாதம் கட்டாயம் அறிக்கைசமர்ப்பிக்கப்படவேண்டும். அதனை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்"– என்றும் மன்னார் ஆயர் குறிப்பிட்டுள்ளார்.

"மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் பொறுப்போடு உருவாக்கப்பட்ட ஐ.நா. தமிழ் மக்களுக்கு எதிரான அநீதியான வரலாற்றின் இறுதியிலேயே எம்மீது கவனம் செலுத்தியது. அதனை ஐ.நா உரிய வகையில் நிறைவேற்ற வேண்டும். இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் என்பது ஒரு நாட்டுக்கு எதிரானது அல்ல. அவை உலக மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்கும் ஒரு நடவடிக்கையே என்றும், உலகப் பொது நடவடிக்கை."– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற–சி)

### பல்கலைக்கழக

அதேவேளை, நேற்றுமுன்தினம் யாழ்.நகரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் சார்பாக கலந்து கொண்டபோதும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் உருவப் பொம்மை எரிக்கப்பட்ட சம்பவத்துடன் தமக்கு உடன்பாடில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

காணாமற் போனோரின் உறவினர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்குடனேயே தமது கட்சி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டது என்றும், தனிப்பட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தமை தமக்குத் தெரியாது என்றும் அவர் தெரிவித்தார். (ற)

### சவேந்திர

கல்லூரியில் கற்கை நெறியை மேற்கொண்டு வருகிறார்.

போரின் இறுதிக்கட்டத்தில், சரணடைய வந்த விடுதலைப் புலிகளின் போராளிகள், தலைவர்கள் மற்றும் பொதுமக்களைப் படுகொலை செய்ய உத்தரவிட்டவர் இவரே என்று குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது. (ற–5)

### விமலின்

2010ஆம் ஆண்டில் அவர் பெற்றிருந்த இராஜதந்திர சேவை கடவுச்சீட்டில் உள்ள தகவல்களும் 2009ஆம் ஆண்டில் காலாவதியான அவரது சாதாரண கடவுச்சீட்டில் உள்ள தகவல்களும் ஒன்றுக்கொன்று முரண்படுவதாக தெரியவந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான விசாரணைக்காக வருமாறு குற்றப் புலனாய்வு பிரிவுப் பொலிஸார் சஷி வீரவன்ஸவுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

எனினும், அவர் அந்த விசாரணைக்கு சமூகமளிக்காதிருந்த சூழ்நிலையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. மாலபே பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சஷி வீரவன்ஸ கைதுசெய்யப்பட்டுள்ளார். நாளை திங்கட்கிழமை அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

(முன்னர் வந்த செய்தி 22ஆம் பக்கத்தில்)


## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் தயாளினி (ரூபா)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் தயாளினி (ரூபா) நேற்று (22.02.2015) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் மல்லிகாதேவி தம்பதியரின் அன்பு மகளும், தயாபரன் (P.H.I, அளவெட்டி), சிவாஜினி (முகாமைத்துவ உதவியாளர், தெல்லிப்பழை பிரதேச செயலகம்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2015) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வித்தகபுரம், தெல்லிப்பழை. தகவல்: குடும்பத்தினர்.



# மாநகர சபை தீயணைப்புப் பிரிவின் செயற்பாட்டால் பெரிய சேதம் தவிர்ப்பு

வலி.வடக்கு, பெப்.23

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் விரைந்து செயற்பட்டமையால் நூற்றாண்டு பழைமை வாய்ந்த மரம் நெருப்பில் எரிந்து சாம்பராகும் நிலைமை பாதுகாக்கப்பட்டதுடன், அயலில் உள்ள வீடுகளுக்கு ஏற்பட இருந்த பெரியசேதமும்தவிர்க்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் விஷமிகள் யாழ்ப்பாணம்– நல்லூர் வீதியில் கற்பக பிள்ளையார் ஆலயத்துக்கு திரும்பும் சந்தியில் உள்ள பழைமை வாய்ந்த மகோக்கனி மரத்துக்கு அருகாமையில் கொட்டப்பட்டிருந்த குப்பைக்குத் தீ வைத்துக் கொளுத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

குப்பை எரிந்து மகோக்கனி மரத்தின் அடியிலும் தீப்பற்றிக் கொண்டது. இதனை அவதானித்தவர்கள் ஏற்படக்கூடிய அபாயத்தை உணர்ந்து உடனடியாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவித்தமையால் குறித்த இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் மரத்தில் பற்றிய தீயை அணைத்துள்ளார்கள்.

குறிப்பிட்ட மரம் சுமார் அறுபது அடிக்கு மேற்பட்ட உயரத்தைக் கொண்டுள்ளதுடன், மிகவும் பரந்த கொப்புகளையும் கொண்டுள்ளமையால் எரிந்து மரம் விழுந்திருந்தால் சுற்றாடலில் உள்ள பெறுமதியான வீடுகள் சிலவும் சேதம் அடைந்து இருக்கலாம் என்றும்– பெரியளவில் போக்குவரத்தும் தடைப்பட்டிருக்கலாம் என்றும்– அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளார்கள். (வ–86)

# சாவகச்சேரி நகர எல்லைக்குள் பொருள் விலை குறையவில்லை

## நடவடிக்கை எடுக்குமாறு சாவகச்சேரி நகரசபைக் கூட்டத்தில் பிரேரணை

தென்மராட்சி, பெப்.23

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட வர்த்தக நிலையங்களில் பொருள்களின் விலைகள் இது வரை குறைக்கப்படவில்லை என்று பொது மக்கள் முறைப்பாடு தெரிவிப்பதால் நகரசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுகடந்தவெள்ளிக்கிழமைநடைபெற்ற நகரசபையின் கூட்டத்தில் உறுப்பினர் அ.பாலமயூரன் தனிநபர் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றினார்

அரசால் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டபோதிலும் சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட பல வர்த்தக நிலையங்களில் இன்னமும் விலை குறைக்கப்படவில்லை.

அத்துடன் ஏனைய பிரதேசங்களில் சிற்றுண்டி வகைகள் மற்றும் உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைத்துள்ளபோதிலும் இங்குள்ள வர்த்தகர்கள் உணவுப் பொருள்களின் விலைகளை இன்னமும் குறைக்காமல் உள்ளனர்.

இதுகுறித்துக் கேட்டால் போக்குவரத்துச் செலவு அதிகமாக உள்ளது என்று கூறுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சபையினர் யாழ்.மாவட்டச் செயலக பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபைக்கு உத்தியோகபூர்வமாக முறையிடவேண்டும் என்று உறுப்பினர் பிரேரணை சமர்ப்பித்து உரையாற்ற அதனை உறுப்பினர் கா. சற்குணதேவன் அனுமதித்தார்.

இதுதொடர்பாக பொதுமக்களின் முறைப்பாடுகளுடன் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிப்பதாகவும் தலைவர் கூறியதாகத் தெரிவிக்கப் பட்டது.(வ–9)



யாழ்.குடாநாட்டு விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட உருளைக்கிழங்கு செய்கைக்கான அறுவடை தற்போது மும்முரமாக இடம்பெற்று வருகின்றது. சிறுப்பிட்டி, நீர்வேலி, கோப்பாய், நவக்கிரி, மாசிவன், ஊரெழு, உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன், இடைக்காடு போன்ற பிரதேசங்களில் பயிரிடப்பட்ட இந்த உருளைக் கிழங்கை அறுவடை செய்யும் பணிகள் தற்போது பரவலாக இடம்பெற்று வருகின்றன. (வ–17)

# 'நாம் நண்பர்கள்' அமைப்பால் வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம், பெப்.23

'நாம் நண்பர்கள்' அமைப்பினூடாக வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒரு தொகுதியினருக்கான வாழ்வாதார உதவிகளால் கோழிக் கூடும் கோழிக் குஞ்சுகளும் வழங்கப்பட்டன.

அன்றாட வாழ்க்கைக்காக கஷ்டப்படுபவர்கள் என பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தரால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் ஒரு தொகுதியினருக்கே கோழி வளர்ப்புக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.



கடற்றொழிலின்போது படகு புரண்டதில் காலில் நங்கூரம் தாக்கியதில் கால் முறிவடைந்து பொருந்தாததால் நடக்க முடியாதிருக்கும் கல்வி கற்கும் நான்கு பிள்ளைகளைக் கொண்ட வாழ்வாதாரம் எதுவுமின்றி அல்லற்படும் குடும்பத் தலைவரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கும், மாற்றுவலுவுள்ளமகளைக்கொண்டகணவனை இழந்த தாய் ஒருவருக்கும்– கணவனை இழந்த இரு பெண் பிள்ளைகளைக் கொண்ட அண்மையில் மகனும் அகாலச் சாவடைந்த தாயொருவரைக் கொண்ட குடும்பத்துக்குமே முதற் கட்டமாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலர் நேசகுமாரி செல்வரட்ணம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் 'நாம் நண்பர்கள்' அமைப்பின் தலைவர் செ.வினோத்குமார், அமைப்பின்செயலாளரும்இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான க.உஷாந்தன், அமைப்பின் பொருளாளர் தயாசுதன், பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா, 'நாம் நண்பர்கள்' அமைப்பினர் ஆகியோர் கலந்துகொண்டுவாழ்வாதார உதவிகளை வழங்கினார்கள். (வ)

# ஊரெழுவிலும் பனம்பொருள் கைப்பணிப் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம்,பெப்.23

பனை அபிவிருத்தி சபை ஊரெழு பிரதேசத்திலும் பனம் பொருள் கைப்பணிப் பயிற்சி நிலையம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வரையிலான பெண்கள் இந்தக் கைப்பணி பயிற்சிக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

ஊரெழு மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையக் கட்டடத்தில் இந்த பனம்பொருள் உற்பத்தி கைப்பணி பயிற்சி மையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப்பயிற்சியில்இணைக்கப்பட்டபெண்களுக்குதொடர்ந்து ஆறுமாத காலத்துக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சியின் நிறைவில் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு பனம் பொருள் உற்பத்திக்கான கொடுப்பனவு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இந்தப்பயிற்சி நிலையத்தில் ஆரம்ப திறப்பு விழா நிகழ்வில் [illegible]பிவிருத்திச்சபையின்பொதுமுகாமையாளர்பி.லோகநாதன் சபையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கியூபேட்அன்ரன் மற்றும் சபையின் விரிவாக்கமுகாமையாளர் கே.கோபால கிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ–17)

# சாவகச்சேரி வர்த்தகர்களுக்கு அபராதம்

தென்மராட்சி, பெப். 23

திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்த சாவகச்சேரி நகர சபை எல்லைக்கு உட்பட்ட 6 வர்த்தகர்களுக்கு சாவகச்சேரிநீதிமன்றில்தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர பொதுச் சுகாதாரப் பாசோதகர் பி.தளிர்ராஜ் தலைமையிலான சுகாதாரப் பிரிவினர் வர்த்தக நிலையங்கள் மீது நடத்திய திடீர் பரிசோதனைகளின்போது திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த 6 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப் பட்டது. (வ–9)

# கோயிலாமனை பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

கொடிகாமம்,பெப்.23

தென்மராட்சி சுகாதார சேவைகள் மருத்துவ அதிகாரி பணிமனையினரால் அந்தப் பகுதியில் டெங்கு நுளம்புக்கான புகைமருந்து அடிக்கப்பட்டு வருகின்றது.

இந்த வாரத்தில் குறித்த ஜே/320 இராமாவில் கிரமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட கோயிலாமனை கிராமத்தில் பல டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எனவே அந்தப் பகுதியில் டெங்கு நுளம்பை ஒழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் அனைவரையும் தமது காணிகளை துப்புரவாக வைத்திருப்பதுடன், நீர்தேங்கும் இடங்களை இல்லாது செய்வதன் மூலம் டெங்கு நோய் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள விழிப்புணர்வுடன் செயற்படுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ–105)



# மாசார் கள்ளு தவறணையை இடம் மாற்றுக

## அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

பளை, பெப்.23

பளை, மாசார் பகுதியில் குடியிருப்பு மற்றும் ஆலயங்களுக்கு அருகில் உள்ள கள்ளுத் தவறணையை அப்புறப்படுத்துமாறு அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ளனர்.

மாசார் பிள்ளையார் கோயிலுக்கும் வைரவர் கோயிலுக்கும் இடையிலுள்ள குடியிருப்புகளுக்கு மத்தியில் கள்ளுத் தவறணை அமைந்துள்ளதால் அந்த வழியில் செல்லும் பொது மக்கள் மதுபோதையில் உள்ளவர்களால் பல இடர்களைச் சந்தித்து, அனுபவித்து வருகின்றனர்.

மகா சிவராத்திரி பூசைகளுக்குச் சென்ற அடியார்கள் பலர் மது போதையில் காணப்பட்ட சிலரின் தகாத வார்த்தை மற்றும் செயல்களால் வழிபாடு செய்யமுடியாமல் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவித்தனர்.

குறித்த கள்ளுத் தவறணை முன்பாக மாலை வேளைகளில் சந்தை செயற்படுவதால் சந்தைக்குச் செல்லும் பொது மக்களும் அவ்வழியே செல்பவர்களும் மதுபோதையில் காணப்படுபவர்களின் தகாத வார்த்தைகளைச் சகித்துக் கொண்டு செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மாசாரில் இயங்கும் கள்ளுத் தவறணையை இடமாற்றக் கோரி அந்தப் பகுதி மக்கள் கிளிநொச்சி அரச அதிபர், பளை பிரதேச செயலர், மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மாவட்ட மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பலருக்கு கடந்த வருடம் தொடக்கம் முறையிட்டு வருகின்ற போதிலும், எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கவலையுடன் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பளை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொண்ட போது;

இந்தக் கள்ளுத் தவறணை நீண்ட காலமாக அந்த இடத்தில் இயங்கி வருவதாகவும், அந்தப் பகுதி மக்களின் கோரிக்கைக்கு இணங்க வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், பொருத்தமான இடம் கிடைத்ததும், கள்ளுத்தவறணை அமைத்து இடம்மாற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# தொடர்கிறது மண் அகழ்வு அரியாலை கிழக்குப் பகுதியில்



யாழ்ப்பாணம், பெப். 23

அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மண் அகழப்படும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சட்டவிரோதமான மண் அகழ்வை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்டோர் விரைந்து தலையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெற்றுவரும் சட்டவிரோத மண் அகழ்வால் இந்தப் பகுதியில் நிலங்கள் தாழ்ந்து விடுவதால் கடல் நீர், குடிமனைகளுக்குள் புகும் அபாய நிலை ஏற்படலாம் என்றும் மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

உழவு இயந்திரங்கள், லான் மாஸ்ரர்களைக் கொண்டு சிலர் வியாபார நோக்கத்துக்காக சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

மண் அகழ்வு இரவுவேளைகளிலேயே கூடுதலாக இடம்பெற்று வருகின்றது. சட்டவிரோதமாக அகழப்படும் மண் அகழ்வை தட்டிக் கேட்பதற்கு எவரும் முன்வராதது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-17)

# சுமைதாங்காத மோ.சைக்கிள் மோதியது கற்குவியலுடன்

தென்மராட்சி, பெப். 23

அளவுக்கு அதிகமான பாரத்துடன் சென்ற மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் பறிக்கப்பட்டிருந்த கற்குவியலில் ஏறியதில் அதில் பயணித்த 4 பேர் கற்களுடன் மோதி காயமடைந்துள்ளார்கள்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் எழுதுமட்டுவாழ் வடக்கில் இடம்பெற்றது. தலைக்கவசம் அணியாமல் சென்றதால் கற்களுடன் தலைகள் மோதி காயம் ஏற்பட்டது. சம்பவத்தில் காயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த சற்குணநாதன் சாந்தகுமார் (வயது-28), தர்மகுல சிங்கம் சிந்துஜன் (வயது-19), நவரத்தினம் சிவகுமார் (வயது-18), தனபாலசிங்கம் மனோகரன் (வயது-20) ஆகியோர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ-9)



யாழ்.கரையோரப் பகுதிகளில் கழிவுப் பொருள்கள் அகற்றப்படாது தேங்கிக் காணப்படுகின்றன. பொது மக்கள் நெருக்கமாக வாழும் குருநகர் பிரதேசத்தில் கழிவுகள் வீதியோரங்களில் தேங்கி சிதறிக் காணப்படுகின்றன. இந்தக் கழிவுகளை விலங்குகள், கால்நடைகள் இழுந்துச் செல்வதால் சுகாதார சீர்கேடுகள் நிலவுகின்றன. (வ-17)

# மிருசுவில் நீக்கிலார் தேவாலய பித்தளைப் பொருள்கள் திருட்டு



தென்மராட்சி, பெப். 23

மிருசுவில் புனித நீக்கிலார் தேவாலயத்தின் தொன்மைமிக்க பித்தளைப் பொருள்கள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேவாலயத்தில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருவதால் அங்கிருந்த நீண்ட காலமாகப் பயன்பாட்டிலிருந்த பித்தளைப் பொருள்கள் உட்பட ஆலயப் பொருள்கள் தேவாலயத்துக்கு எதிரே உள்ள வீடொன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. கடந்த வியாழக்கிழமை பகல் அந்த வழியே சென்ற பொதுமக்கள் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த அறைக் கதவு திறந்திருந்ததைக் கண்டு தேவாலய நிர்வாகத்துக்கு அறிவித்தனர்.

அதனை அடுத்து அங்கு சென்ற நிர்வாகத்தினர் பார்வையிட்ட போது ஆலயத்துக்குச் சொந்தமாக பெறுமதிமிக்க் பித்தளைப் பொருள்கள் திருட்டுப் போயுள்ளதைக் கண்டனர். அந்தப் பித்தளைப் பொருள்கள் நூறுக்கு மேற்பட்ட ஆண்டுகள் பழைமை வாய்ந்த, ஆலயத்தின் ஆரம்ப காலத்தில் ஆலயத்துக்கு வழங்கப்பட்டிருந்தவை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை– ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் இரு தடவைகள் இனந்தெரியாதோரால் எடுத்துச் செல்லப்பட்டு, அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளில் போடப்பட்டிருந்து, மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டபோது; தங்களுக்கும் தகவல் கிடைத்ததாகவும் இதுவரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேவாலயத்துடன் சம்பந்தப்பட்டவருடன் தொடர்பு கொண்ட போது; சம்பவத்தை உறுதிப்படுத்தியதுடன் இரவானதால் இன்னமும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவில்லை என்றும் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.(வ-9)

# நெடுந்தீவில் பிறந்தவர்களுக்கான சான்றிதழ்களைப் பெறுவதில் சிரமம்

## தீவுக்கு வெளியே உள்ளோர் விசனம்

தென்மராட்சி, பெப்.23

நெடுந்தீவில் பிறந்தவர்களின் பிறப்பு, இறப்புச் சான்றிதழ் பெறுவதில் தீவுக்கு வெளியே உள்ள பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு போன்ற சான்றிதழ்கள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவற்றை எந்தவொரு பிரதேச செயலகத்திலும் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று யாழ். செயலகத்தால் அறிவிக்கப்பட்ட போதிலும், அது அறிக்கையளவிலேயே காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் தாம் வசிக்கும் பிரதேச செயலகங்களில் தீவகப் பகுதியில் பிறந்தவர்களின் சான்றிதழுக்கு விண்ணப்பித்தால் சான்றிதழ் தெளிவில்லை என்று குறிப்பிட்டு, விண்ணப்பத்தை திருப்பிவிடுவதுடன் அங்கு நேரில் சென்று பெறுமாறும் அறிவுரை கூறுகின்றனர். அந்தந்தப் பிரதேச செயலகங்கள் விண்ணப்பப் படிவத்தைப் பொறுப்பேற்று, பெற்றுக் கொடுக்கமுடியும். ஆனால் அவர்கள் நேரில் சென்று பெற்றுக் கொள்ளுமாறும் அல்லது இலங்கை வங்கியில் விண்ணப்பத்துக்குரிய பணத்தைச் செலுத்தி அங்கு வழங்கப்படும் பற்றுச் சீட்டை இணைத்து விண்ணப்பத்துடன் அனுப்பினால் மூன்று தினங்களுக்குள் சான்றிதழ் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலமாக நெடுந்தீவுக்குப் போகாமல் உள்ளவர்கள் படகுப் பயணத்தை நினைத்துப் அச்சம் கொள்கின்றனர். இந்தநிலையில் அந்தந்தப் பிரதேசங்களிலிருந்து பொதுமக்களால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாதங்கள் சென்றாலும் வந்து சேர்வதில்லை. அவசர தேவைக்கு விண்ணப்பித்தவர்கள் தினமும் சான்றிதழை எதிர்பார்த்திருக்க வேண்டியுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களை விட நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் அனைத்துப் பிரதேச செயலகங்களால் பேணப்படுதல் அவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு, யாழ் மாவட்டச் செயலகத்தினர் நெடுந்தீவு பிரதேச பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களை ஏனைய பிரதேச செயலகங்களிலும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறியுள்ளனர். (வ-9)

# வலி.தென்மேற்கில் கழிவு ஒயில் கலந்த பகுதிகளில் குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் சில கிணறுகளில் கழிவு ஒயில் கலந்திருப்பது பரிசோதனை மூலம் உறுதிப்படுத் தப்பட்டதை அடுத்து முதற்கட்டமாக இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சுற்றாடலின் வசிக்கும் மக்களுக்கும் தண்ணீர்த்தாங்கிகள் மூலம் குடி தண்ணீர் வழங்கப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலரின்- அறிவுறுத்தலுக்கு அமைய கழிவு ஒயில் கலந்திருப்பதாக இனங்காணப்பட்ட இடங்களில் 4 தண்ணீர் தாங்கிகள் வைத்து குடிதண்ணீர் வழங்குவதற்கான ஒழுங்குகளை வலி. தென்மேற்குப்பிரதேசசபை மேற்கொண்டுள்ளது.

முதன் முதலாக வலி. தெற்குப் பிரதேசத்திலுள்ள கிணறுகளில் காணப்பட்ட கழிவு ஒயில் படலம் நாளடைவில் வலி. வடக்கிலுள்ள கிணறுகளுக்கும் ஊடுருவி தற்போது வலி. தென்மேற்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள கிணறுகளிலும் படிந்துள்ளது. வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள சுதுமலை வடக்கு, தெற்கு மானிப்பாய், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள 28 கிணறுகளில் கழிவு ஒயில் கலந்திருப்பதாக சந்தேகப்பட்டதை அடுத்து சுதுமலை வடக்கு, மாகியப்பிட்டி ஆகிய இடங்களிலுள்ள இரு கிணற்று நீர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கழிவு ஒயில் கலந்திருப்பதாக பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து முதற்கட்டமாக அந்தப்பகுதியைச் சூழவுள்ள சுமார் 80 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வ)



## துர்நாற்றம் வீசிய வடிகால்வாயில் துப்புரவாக்கும் பணி முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23
குருநகரில் உள்ள பிரதான ஓடக்கரை வடிகால்வாயின் கழிவு நீர் ஓடுவது தடைப்பட்டதால் பெரும் துர்நாற்றம் வீசியதோடு சுகாதாரச் சீர்கேடும் நிலவியது. அதையடுத்து சேறால் நிரம்பிய குறித்த வடிகால்வாயை உடனடியாகத் துப்புரவாக்கும் பணியில் யாழ். மாநகர கழிவகற்றும் பிரிவினர் ஈடுபட்டனர்.
மாநகர சுகாதார மேற்பார்வையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த வடிகால்வாயின் கழிவகற்றும் பணி தொடர்ந்து இடம்பெறும்.
கால்வாயில் இருந்து அகற்றப்படும் கழிவுகள் உடனடியாகக் கழிவகற்றும் வாகனம் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன.
குறித்த வடிகால்வாயில் தேங்கிய கழிவு நீரில் இருந்து நுளம்பின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்பட்டது. (வ-17)

## கண்டாவளை பிரதேச செயலக புதிய கட்டடம் உரிய இடத்தில்

### நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் அரச அதிபர்

கிளிநொச்சி, பெப்.23
கண்டாவளை பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்தை உரிய இடத்தில் அமைத்துக் கொடுப்பதற்கு இந்த ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்படும் என்றுகிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.



கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலகங்கள் அமைந்துள்ளதுடன், அவற்றில் 3 பிரதேச செயலகங்கள் புதிய கட்டடங்களில் இயங்கி வருகின்ற போதும், கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் இதுவரையில் அமைக்கப்படவில்லை. இதனால் பல்வேறு இடநெருக்கடிகளுக்கும் மத்தி யில் அந்தப் பிரதேச செயலகம் இயங்கி வருகின்றது.
பிரதேச செயலகத்தின் திட்ட மிடல் பிரிவு ஓர் இடத்திலும் ஏனைய நிர்வாகக் கிளைகள் வேறொரு இடத்திலும் இயங்கி வருகின்றன.
தற்போது பிரதேசசெயலகம்அமைந்துள்ளகாணி,பலநோக்குகூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான காணியாகவும் வருடாந்தம் வெள்ளத்தில் மூழ்கும் பகுதியாகவும் இருக்கிறது.
இதனால் குறித்த இடத்தில் பிரதேச செயலகத்தின் நிரந்தரக் கட்டடம் அமைக்கமுடியாத நிலை காணப்பட்டதால் வேறு இடத்திலுள்ள பொதுக் காணி ஒன்றில் நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டபோதும், அதற்கான தடைகள் ஏற்பட்டமையால் புதிய கட்டடம் அமைப்பதற்கான நிதி கடந்த ஆண்டில் திறைசேரிக்கு திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

# வளலாயில் அதிகமான கிணறுகளில் குண்டுகள்

### துப்புரவு செய்து வழங்குமாறு மீள்குடியேற்ற செயற்குழு கோரிக்கை

அச்சுவேலி, பெப். 23
வளலாய் பகுதியில் 25 இற்கும் மேற்பட்ட கிணறுகள் வெடி குண்டு அபாயம் உள்ளவை என்று அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளன. இந்தக் கிணறுகளை உரிய முறையில் துப்புரவு செய்து மக்களின் பாவனைக்கு வழங்குமாறு வளலாய் மீள்குடியேற்ற செயற்குழு கோரிக்கை விடுத்துள்ளது.



வளலாய் பகுதியில் உள்ள குறித்த கிணறுகளில் வெடி குண்டு அபாயம் உள்ளது என்று அதற்குரிய அடையாளம் மற்றும் அபாய அறிவிப்புக்கள் வைக்கப்பட்ட நிலையில் உள்ளன. அபாய அறிவிப்பு செய்யப்பட்டுள்ள அந்தக் கிணறுகளில் சில, மண் போட்டு தூர்க்கப்பட்ட நிலையிலும் சில கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்ட நிலையிலும் காணப்படுவதால் அவற்றில் வெடி குண்டுகள் மட்டுமல்ல மனிதர்களின் சடலங்களும் இருக்கலாம் என்று பொது மக்கள் கருதுகின்றனர்.
வளலாய்ப்பகுதியில் வெடி குண்டுகள் அகற்றிய நிறுவனங்கள் வெடி குண்டுகள் உள்ளன என்று கிணறுகளை அடையாளப்படுத்தியபோதிலும் கிணறுகளை உரிய முறையில் துப்புரவு செய்து மக்களிடம் கையளிப்பதில் ஆர்வம் கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது.
பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கும் குடிதண்ணீர் பாவனைக்கும் உரிய அந்தக் கிணறுகள் துப்புரவு செய்யப்படாமல் இருப்பதால் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். பல ஹெக்ரேயர் நிலம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் படாமல் கைவிடப்பட்ட நிலை யில் உள்ளது.



தற்போது வெடிகுண்டுகள் அகற்றும் செயற்பாடுகள் எதுவும் வளலாய் பகுதியில் மேற்கொள்ளப்படுவது இல்லை. அந்தச் செயற்பாட்டில் ஈடுபட்ட நிறுவனங்கள் கடந்த ஒருவருடத்துக்கு முன்னரே வெளியேறிவிட்டன.
வெடிகுண்டு அகற்றப்படாமல் இருக்கும் கிணறுகள் விசேட செயற்றிட்டத்தின் கீழ் துப்புரவு செய்து பொதுமக்களின் பாவனைக்கு வழங்குமாறு யாழ். மாவட்ட சிவில் நிர்வாகிகளின் கவனத்துக்கு வளலாய் மீள் குடியேற்றச் செயற்குழு கொண்டு வந்தபோதிலும் இதுவரை காரியம் கைகூடவில்லை என்று விசனம்தெரிவிக்கப்படுகிறது. (வ-11)

## வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு பவுசர் வாகனம் பெற்றுத்தருக

### உள்ளூராட்சி அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.23
வலி.கிழக்கு பிரதேச சபைக்கென குடிதண்ணீர் விநியோக பவுசர் வாகனம் ஒன்றைப் பெற்றுத் தருமாறு உள்ளூராட்சி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
வறட்சிக் காலங்களில் சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் குடி தண்ணீர் தேவைப்படும் மக்களுக்கு அதனை எடுத்துச் சென்று விநியோகிப்பதற்கு வசதியாகப் பவுசர் வாகனம் ஒன்றை பெற்றுத் தருமாறு சபை அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
இதனைவிட சபைக்கு உட்பட்ட பகுதியில் அபிவிருத்திப்பணிகளைமுன்னெடுத்துச் செல்வதற்கு பைக்கோ வாகனம் ஒன்றையும் தந்து உதவுமாறும் சபை உள்ளூராட்சி அமைச்சைக் கேட்டுள்ளது.
வறட்சி காலங்களில் குடிதண்ணீர் பிரச்சினை ஏற்படும் பகுதிகளுக்கு பவுசர் மூலம் கொண்டு சென்று குடிதண்ணீரை போதுமான அளவுக்கு விநியோகிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதன் காரணத்தால் தான் பவுசர் வாகனம் ஒன்றை மேலதிகமாக பெற்றுக்கொள்வதற்குச் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (வ-17)

## உடையார்கட்டு பாடசாலைக் கட்டட நிர்மாணத்துக்காக ஜப்பான் உதவி

முல்லைத்தீவு, பெப்.23
முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார்கட்டு பாடசாலைக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக ஜப்பான் அரசு 215,866 அமெரிக்க டொலரை (28மில்லியன்இலங்கைரூபாயை) உதவித் தொகையாக, தனது தூதரகத்தின் அடிமட்ட மனித பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உடையார்கட்டுப் பாடசாலையை நிர்மாணிப்பதற்கான வேலைத் திட்டம் சர்வதேசசிறுவர்பாது காப்பு நிதியத்தால் மாவட்டத்தின் பிரதேச செயலக மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும். பொருத்தமான சூழ்நிலையில் கல்வியைப் பெறுவதன் ஊடாக சிறுவர் உரிமையை யதார்த்தமாக்குவதே, பாடசாலைக் கட்டடத்தை நிர்மாணிப்பதான இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாக இருக்கிறது.
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உடையார்கட்டு பாடசாலை தற்போது 529 மாணவர்களுடன் 5 வகுப்பறைகளை மாத்திரம் கொண்டுள்ள ஒரு தனிக்கட்டடம். ஏனைய 13 வகுப்பறைகளும் ஓலைக் கூரைகளையும், தகரத்தால் சுவர் எழுப்பப்பட்டதும், பாதி சிமெந்து பூசப்பட்டதுமானதரையைக்கொண்டுள்ள ஒரு தற்காலிக கொட்டகையாகும்.
எனவே ஜப்பான் அரசு வழங் கும் இந்தஉதவித்தொகையைக்கொண்டு சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியம் 14 வகுப்பறைகளைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டடத்தை நிர்மாணிக்கும். இது போதிய கற்றல் வசதிகள்கொண்டதானநிரந்தரவகுப்பறைகளாக அமைந்து மாணவர்கள்கற்பதற்குஉதவியாகஅமையும்.
ஜப்பான் இந்த வேலைத்திட்டத்துக்கான உதவியை இலங்கைக்கு உதவுகின்ற கொள்கைக்கு உரிய ஸ்தானமளித்து, 'தோன்றுகின்ற பிரதேசங்களின் அபிவிருத்தி' என்பதை மையப்படுத்தியே வழங்குகிறது. வறுமைக்கோட்டுக்குள் வாழும் பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் மீளக் கொண்டு வருதல், மீள் கட்டுமான புனரமைப்புக் களைச் செய்தல் போன்ற சக பிரச்சினைகளைத்தீர்ப்பதனால்பூரணத்துவம் அடைவதாக அமைகிறது என்று ஜப்பான் அரசு நம்புகிறது. இந்த நிலையில் ஒன்றிணைந்த அணுகுமுறையானது, நீண்ட கால ஓட்டத்தில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒருமைப்பாட்டுக்கும், நிலைத்து நிற்கும் சமாதானத்திற்கும், உள்ளக அபிவிருத்திக்கும் வழிவகுக்கும்.
சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் இயக்குநர் வில்லியம் லிஞ்ச் இந்த உதவித் தொகையானது ஜப்பான் நாட்டின் அரசுடனும், மக்களுடனும் இணைந்து பல வருடங்களைத் தாண்டி, சிறுவர்களின் வாழ்வில் ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான புத்துணர்ச்சி தரும் ஒரு சந்தர்ப்பமாக பங்காளருக்கு இது அமைகிறது' என்று கூறினார்.



ஜப்பான் நாட்டின் தூதரகத்துடன் பணியாற்றுவதற்காகக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்துக்காக நாங்கள் மிக நன்றி உள்ளவர்களாக இருக்கின்றோம்.
இந்த உதவித்தொகைக்கான ஒப்பந்தமானது ஜப்பான் நாட்டின் தூதர் நோபுஹிட்டோ ஹோபோ என்பவருக்கும் சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் இயக்குநர் வில்லியம் லிஞ்ச் என்பவருக்கும் இடையில் தூதரின் கொழும்பிலுள்ள வதிவிடத்தில் கடந்த 19ஆம் திகதி கையொப்பம் இடப்பட்டது. (வ)

# இறுதிக்கு தகுதியானது யாழ். லீக் அணி



யாழ்ப்பாணம்,பெப். 23
ஜெனெட்டின் ஹற்றிக் கோல் மூலம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது யாழ். லீக் அணி. இலங்கை உதைபந்தாட்டச்சம்மேளனத்தால் நடத்தப்படும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் முதலாவது அரையிறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்றது. அதில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து நீர் கொழும்பு உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது.

பலம் பெருத்திய இரண்டு அணிகள் மோதிக் கொண்டதால் ஆரம்பம் முதல் ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது. ஆட்டத்தின் 5ஆவது, 12ஆவது, 19 ஆவது நிமிடங்களில் யாழ்லீக் அணியைச் சேர்ந்த ஜெனட் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் தனக்கு கிடைத்த பந்தை கோலாக மற்றினார்.

பதிலுக்கு நீர் கொழும்பு லீக் அணி வீரன் பெர்ணான்டோ ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்திலும், சுமன்டோ ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்திலும் தமக்கு கிடைந்த பந்தினை கோலாக மாற்றினர். ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்டபோது யாழ். லீக் அணி 3:2 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருத்தது.

இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரு எதிர் அணியின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணமிருந்தனர். இரண்டு அணியினருக்கும் கோல்கள் பெறும் சந்தர்ப்பங்கள் கிடைந்த போதும் அவற்றைத் தவறவிட்ட னர். ஆட்டத்தின் 79ஆவது நிமிடத்தில் யாழ்.லீக் அணி வீரன் ஜெனெட் மீண்டும் தனக்கு கிடைந்த சந்தர்ப்பத்தைக் கோலாக மாற்றினார். ஆட்ட முடிவில் யாழ். லீக் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## கருணாகரன், பொம்மர்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 23
நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் கருணாகரன் விளையாட்டுக் கழக அணி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி என்பன வெற்றி பெற்றுள்ளன.

அதில் மாலை நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டு கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி கருணாகரன் விளையாட்டு கழக அணி மோதியது. அதில் கருணாகரன் விளையாட்டு கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது. கருணாகரன் அணி சார்பாக இளவரசன் இரு கோல்களைப் பெற்றுக்கொண்டார்.

மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் புத்தூர் விக்கினேஸ்வரா விளையாட்டுகழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டு கழக அணி மோதியது.

அதில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது. பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக சாரங்கன் 4 கோல்களையும், கோபிநாத், வைகுந்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழக அணி சார்பாக நிக்சன் ஒரு கோலையும் பெற்றுக் கொண்டார். (ற-23)

## கரப்பந்தாட்ட சுற்றுத் தொடருக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, பெப்.23
மிருசுவில் உசன் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாவட்ட ரீதியான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடர் ஒன்று நடத்தப்படவுள்ளது.

செற் – அப் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டி ஒரே நாளில் பகல் இரவுப் போட்டிகளாக நடத்தப்படவுள்ளன. அதில் பங்குபற்ற விரும்பும் கரப்பந்தாட்ட அணிகள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு கழகச் செயலாளர் கேட்டுள்ளார். (ற-9)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 23
கரவெட்டி பிரதேச இளைஞர் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான கயிறுழுத்தல் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

■ ■ ■

யாழ்ப்பாணம், பெப். 23
யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றன. அதில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அலுமினி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

■ ■ ■

யாழ்ப்பாணம் பெப். 23
நொடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் யாழ்ப்பாண வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நொடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்மனோகார விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.தோமஸ் யுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)


### வெளிவந்துவிட்டது

க.பொ.த உயர்தர கடந்தகால வினா விடை (2014 உள்ளடங்கலாக) தரம் 10 விஞ்ஞானம் (ஆ.யோகராஜா Loyal Publication)
15-20% விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு யாழ் புத்தகசாலை
505, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
077 8349507, 021 454 5552

### சிகை அலங்கரிப்பாளர் தேவை

யாழ் நகர மத்தியில் Main Street இல் புதிதாக அமைக்கப்பட்ட எமது Sandy's beauty care நிலையத்தின் ஆண்கள் பகுதிக்கு முன் அனுபவமும், திறமையும் உள்ள ஆண் சிகை அலங்கரிப்பாளர் தேவை. பேஷியல், பெடிகுயர், மனிகுயர் போன்றவை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
தொடர்புகளுக்கு TP: 070 250 2502
e mail : tilko.tilak@gmail.com

### சவுதி அரேபியா KSA

வெளிநாட்டு வேலைவாய்ப்பு
உதவியாளர்கள்

Salary SR 800+OT (Rs. 28,000) — Helpers — Salary SR 1,000+OT (Rs. 35,000)

நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலை நேரம் | நாளொன்றுக்கு 10 மணித்தியால வேலை நேரம்
SR 1 = RS. 35

விதிமுறைகள்
- இரண்டு வருட ஒப்பந்த காலம் புதுப்பிக்கப்படும்
- நாளொன்றுக்கு 10 மணித்தியால வேலைநேரம்
- உணவு இலவசம்
- மருத்துவம் மற்றும் தங்குமிட் வசதி என்பன இலவசம்
- இரு வழிப்பாதை விமான டிக்கட் இலவசம்
- ஏனையவை KSA நாட்டின் ஊழியர் சட்ட திட்டங்களுக்கு அமைவானது.


Hotline : 0777 390 007 0773 983 766
Apply Now : trustlankatravels@gmail.com

TRUST Lanka Travels
Overseas Manpower Services Labour Licence No. 623
# 187, New Chetty Street, Colombo 13, Sri Lanka.
Tel : +94 11 2332538, 2332539, 2422318, 2431027 Fax : +94 11 2541019, 2331519
E-mail : trust@isplanka.lk, thanis@isplanka.lk Skype ID : trustlanka Website : www.trustlanka.lk


### மரண அறிவித்தல்

#### வைத்தி லோறன்ஸ்

(இளைப்பாறிய ஊழியர் மின்சாரசபை - சுன்னாகம்)



நீதிமன்ற வீதி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், விளாத்தியடி உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தி லோறன்ஸ் நேற்று (22.02.2015) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி - ஞானம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் (ஆசிரியர் - கொக்குவில் ராமகிருஸ்ணர் வித்தியாலயம்), பாசமிகு கணவரும், அற்புதம் (ராசா - மல்லாகம்), சத்தியநேசன் (சத்தியம் - உரும்பிராய்), சிறில் - சுவிஸ்), றெஜினா (சில்லாலை), காலஞ்சென்ற மாகிறற் ஆகியோரது சகோதரனும், விமலராணி, லீலாவதி (சுவிஸ்), புனிதவதி (பிரான்ஸ்), கருணாவதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், றுக்ஷன் (சுவிஸ்), றுக்சி, டிக்ஷன் (ஏஞ்சல் சர்வதேச பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (23.02.2015) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் மாலை 3.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளாத்தியடி,
உரும்பிராய்.

தகவல் : குடும்பத்தினர்.
தொ.பே.இ : 021 224 1604


### BRITISH COLLEGE OF HIGHER STUDIES

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 1/2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது.
இதற்கான பல மாதிரிப் பரீட்சைகள், செயல் விளக்கங்களுடன் எமது நிறுவனத்தில் நடைபெறும்.

**KET - Key English Test** Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கானது
2015ம் ஆண்டு புதிய விசா நடைமுறைகளுக்கமைய City & Guilds ன் A1 பரீட்சைகள் நிறுத்தப்படுவதனால் அதற்குப் பதிலாக KET பரீட்சை ஏற்றுக் கொள்ளப்படும். இப் பயிற்சி நெறிக்குரிய எல்லா வகுப்புகளும் எம்மால் வெற்றிகரமாக நடாத்தப்படுகிறது

**Young Learners for English (YLE)** [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Bathes Starts on: 28/02/2015 @ 2.30pm, 02/03/2015 @ 9.00am, 05/03/2015 @ 9.00am, 07/03/2015 @ 2.30pm
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

No.15 2/1, Sirambiyady Lane, Off Stanley Road (Above Sathosa SM), Jaffna. Tel :021-2224550
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.